
கல்கி
KALKI 17-2-57
4 அண


'அனஸின்'
வலியை வெல்லுவதற்கான
நான்கு மருந்துகளின் கலப்பாகும்
1. க்வினைன் சல்பேட் 2. காப்பின்
3. பினஸிடின் 4. ஆஸிடில்ஸாலிஸிலிக் ஆஸிட்
நான்கு
மருந்துகளின்
சேர்கையான
'அனஸின்'
வேண்டுமென்றே
கேளுங்கள்
WILL NOT UPSET THE STOMACH
DOES NOT HARM THE HEART
ANACIN
TABLETS
WHITEHALL PHARMACAL COMPANY, NEW YORK, U.S.A.

மலர் 16 · இதழ் 29

கல்கி

துன்முகி ஹு · மாசி 6

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.





மலர் 16 | இதழ் 29 }
துன்முகி௵ மாசிமீ 6௳

தமிழ்த்திரு நாடு தன்னைப் – பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா – பாரதியார்

வாக்காளர்களின் கடமை

தேர்தலைப் பற்றிச் சென்ற மூன்று வாரங்களாக எழுதி வருகிறோம். நாடெங்கிலும் தேர்தல் பிரசாரங்கள் தீவிரமடைந்து வருவதனால் இன்னும் சில விஷயங்களைத் தெளிவாக எடுத்துச் சொல்ல வேண்டிய நிலை ஏர்பட்டிருக்கிறது. உண்மைக்கு மாறான விஷயங்களை எடுத்துக் கூறி, பிரசாரங்கள் நடைபெற்று வருகின்றன.

"யுத்தத்தின் போதும், காதல் வேட்டையிலும் மக்கள் எதைச் சொல்லியும் வெற்றியைச் சம்பாதித்துக் கொள்ளலாம்!" என்ற ஆங்கிலப் பழமொழியை எடுத்துக் கூறி எந்த அநீதிக்கும் சமாதானம் சொல்லி விடலாம்.

தேர்தல் என்பது யுத்தமுமல்ல; காதலுமல்ல. மக்களுக்கு இன்ன இன்ன நன்மைகள் செய்ய முடியும் என்று வாக்களித்து, அவர்களை ஆள்வதற்கு உரிமையைப் பெறும் முறையே தேர்தல். ஆகவே தேர்தலில் உண்மைக்கு மாறான விஷயங்களை எடுத்துக் கூறி வெற்றி சம்பாதிக்க வேண்டிய அவசியமில்லை.

காரைக்குடியில் தேர்தல் பிரசங்கம் புரியச் சென்ற திரு காமராஜ் அவர்கள், திரு மு. அ. முத்தையாச் செட்டியாரைக் காங்கிரஸில் சேர்த்தது ராஜாஜியே என்று கூறி, திரு முத்தையாச் செட்டியாரின் நியமனத்துக்கு ஆட்சேபம் தெரிவித்தவர்களைச் சமாதானப்படுத்த முயன்றார்.

காரைக்குடி மக்கள் தேச பக்தி கொண்டவர்கள். அவர்களில் பழம் பெரு தேசபக்தரான திரு ராய. சொ. அவர்கள் திரு காமராஜின் கூற்றுக்கு அவர் பேசி முடித்த மறுநாளே மாபெரும் பொதுக் கூட்டத்தில் சடச்சடப் பதிலளித்திருக்கிறார்.


சென்ற தேர்தலில் திரு முத்தையாச் செட்டியார் காங்கிரஸுக்கு எதிர்ப்பாளர். சுயேச்சை அபேட்சகராக நின்றார். அவருக்கு எதிராக ஒரு காங்கிரஸ் அபேட்சகரைக் கூட நிறுத்தாமல் சட்டசபைக்குள் புக விட்டதற்கு திரு காமராஜ் தான் பொறுப்பு என்பதை விளக்கிக் கூறினார்.

அது மட்டுமா? சென்ற முறை தேர்தலின் முடிவில் நமது தமிழ் நாட்டில் காங்கிரஸ் மந்திரி சபை அமைக்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. "இந்த இக்கட்டான நிலையிலிருந்து காப்பாற்றி விடுங்கள்" என்று தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர் ராஜாஜியைக் கேட்டுக் கொண்டார். அந்த இக்கட்டான நிலையில் ராஜாஜி ஒரு மந்திரி சபை அமைத்து எப்படியோ சாமர்த்தியமாகச் சமாளித்து வந்தார் ஒரு வோட்டு, இரண்டு வோட்டின் பலத்தில் ராஜ்ய நிர்வாகத்தை நடத்தவேண்டியிருந்தது. அந்த நிலையில் யாராயினும் எந்தப் பாவியாயினும் உதவுவதாக முன் வந்தால், ராஜாஜி அந்த நபரை ஏற்றுக்கொள்ள வேண்டி யிருந்தது. 1952-ம் வருஷத்திய நிலையை இப்பொழுது நினைத்துக் கொண்டால்கூட அந்த இக்கட்டான நிலையை ராஜாஜி எப்படித்தான் சமாளித்தாரோ என்று ஆச்சரியப்படாமலிருக்க முடியவில்லை.

அசல் கறுப்புச் சட்டைகள் காங்கிரஸ் ஆட்சிக்கு உதவி செய்ய வந்தாலும் சர்க்கார் நடத்துவதற்கு ஏற்றுக்கொள்ள வேண்டிய காலம் அது! ஆனால் இன்றைய நிலை வேறு

சர்க்கார் நிர்வாகத்துக்காக எதிர்க்கட்சியிலிருந்து வரும் ஆட்களை ஏற்றுக் கொள்வதற்கும், பொதுத் தேர்தல் சமயத்தில் காங்கிரஸ் ஸ்தாபனம் தானாகப் பொறுக்கி எடுத்துத் தேர்தலில் அபேட்சகர்களாக நிறுத்துவதற்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது. இந்த வித்தியாசத்தை திரு காமராஜ் அறியாதவர் அல்ல.

எதிர்க் கட்சி



காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கைவிட ஜவாஹர்லால் நேருவின் சொந்தச் செல்வாக்கு அதிகமாக இருப்பதால் நாட்டில் நல்ல எதிர்க்கட்சி உருவாவது கஷ்டமாக இருக்கிறது என்று ஜெயப்பிரகாஷ் கூறுகிறார்.

ஆயினும் மேடைமேல் ஏறி நின்று பேசும் போது சாமர்த்தியமாக ஏதாவது சமாதானம் சொல்லித் தம்முடைய தவறை மறைப்பதற்கு முயன்றிருக்கிறார்.

மற்றொரு விஷயம். இந்த ஏழை பாரத நாட்டிலே, தேர்தல் என்பது பணம் ஏராளமாகச் செலவழித்து நடத்தும் ஒரு வியாபாரமாகி விட்டது. அதனால் பணம் படைத்தவர்கள்தான் தேர்தலில் நிற்க முடியும் என்ற நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது.

அத்துடன், தேர்தல் செலவுகளுக்காக நிதி திரட்டப் பதவியிலிருக்கும் மந்திரிகளே மில் முதலாளிகளையும், தொழில் அதிபர்களையும், வியாபாரிகளையும் பணக்காரர்களையும் தேடிச் செல்கிறார்கள். சாதாரண மக்கள் இந்த நடவடிக்கைகளைக் கவனிக்காமலில்லை. இதனால் காங்கிரஸின் கௌரவம் பழுதடைகிறது. இதைக் காங்கிரஸ் தலைவர்கள் ஆராய்ந்து ஆலோசிக்க வேண்டும்.

* * *

ஐந்தாண்டுத் திட்டங்கள் சம்பந்தமாக நாம இரண்டு வாரங்களுக்கு முன்பு வெளியிட்ட கருத்தையே சமீபத்தில் ஆசாரிய கிருபளானி அவர்களும் மிக வன்மையாக வற்புறுத்தியிருக்கிறார். இந்தத் திட்டங்களை நிறைவேற்றி வைக்கும் தகுதி காங்கிரசுக்குத்தான் உண்டு என்று சொல்வது சரியல்ல என்கிறார். உண்மையில் திட்டம் வகுத்தவர்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர்களே. அந்தத் திட்டங்களை நிறைவேற்றப் போகிறவர்களும் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள். ஆகவே, சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் மதிப்பும் கௌரவமும் அளிக்கக்கூடிய அபேட்சகர்களைச் சட்டசபைகளுக்கு அனுப்ப வேண்டிய பொறுப்பு வாக்காளர்களுடையது. சுயநலம் கருதாத சட்டசபை அங்கத்தினர் என்றால் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் மதிப்பு அளிக்கிறார்கள்; தாங்களும் ஒழுங்காகவும் நாணயமாகவும் நடந்து கொள்கிறார்கள். ஆகவே சுயநலம் கருதாத அபேட்சகர்களைத் தேர்ந்தெடுப்பதுதான் இன்று மக்களுக்கு இருக்கும் மகத்தான பொறுப்பு.

* * *

எந்த நிலையில் நின்று பார்த்தாலும் அடுத்த ஐந்தாண்டுகள் நம்மை ஆள்பவர்கள் சத்தியத்திலும் தர்மத்திலும் சீலத்திலும் நேர்மையிலும் அக்கறை கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்ற முடிவுக்கே வருகிறோம். அடுத்த ஐந்து வருஷங்களில் மக்களின் வாழ்க்கை சட்டசபை அங்கத்தினர்கள் கையில் சிக்கியிருக்கும் என்பதைக் கவனித்து, வாக்காளர்கள் தங்கள் மாபெரும் கடமையை உணர்ந்து நடந்துகொள்ள வேண்டும்!


படிப்பும் வேண்டாம்! குணமும் வேண்டாம்!

வியப்பாக இருக்கிறது! திரு டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் ஸ்ரீரங்கத்தில் பேசியதைப் படித்து விட்டுத்தான் பெரு வியப்படைந்தோம். கல்வியறிவு பெற்றவர்களும் ஒழுக்கமுடையவர்களும் ஜனங்களுக்கு வழி காட்ட வேண்டும் என்று ராஜாஜி தமது திருச்சிராப்பள்ளிப் பிரசங்கத்தில் சொன்னது டி. டி. கே. அவர்களுக்குப் பிடிக்கவில்லை. இந்திய நிதி மந்திரி படித்தவர்கள் வேண்டாம் என்றார். நல்ல குணசாலிகள் வேண்டும் என்று ராஜாஜி சொன்ன போது, 'இது என்ன காங்கிரஸுக்கு விரோதமான கிளர்ச்சி' என்று சென்னை காங்கிரஸ்காரர்கள் பொருள்படுத்திக் கொண்டார்கள். படிப்பும் வேண்டாம், குணமும் வேண்டாம் என்று சென்னையில் காங்கிரஸ் தீர்மானித்து விட்டதுபோல காங்கிரஸில் பொறுப்பான பதவி வகிப்பவர்கள் பேசி வருவது அவமானமாக இருக்கிறது. குணசாலிகள் வேண்டும் என்று ராஜாஜி சொன்னால், 'அந்தப் பரீட்சையில் நாம் தோல்வி அடைவோம்' என்று ஏன் பயப்படவேண்டும்? படிப்பு அடைந்தவர்கள் மக்களுக்கு வழிகாட்டிப் பணி செய்ய வேண்டும் என்றால் ஏன் சென்னை காங்கிரஸுக்கு ஆட்சேபிக்கத் தோன்றுகிறது? படிப்பில்லாதவர்கள்தான் தங்களுக்கு வேண்டும் என்பது சென்னை காங்கிரஸின் அடிப்படைத் தத்துவமா? அல்லது இது நிதி மந்திரி கண்ட அர்த்த சாஸ்திரமா? இதெல்லாம் காங்கிரஸின் உண்மை பலவீனத்தை எடுத்துக் காட்டும் பேச்சு என்பதைக் காங்கிரஸ் தலைவர்கள் உணர வேண்டும்.

ஐ. நா. சபையில் அக்கிரமக் கூத்து

சில தினங்களுக்கு முன் ஐக்கிய நாடுகள் சபையில் நிகழ்ந்த விந்தையைக் கண்டு இந்திய மக்கள் வருந்தினார்கள். காஷ்மீர் பிரச்னையை ஒட்டி ஐ. நா. பாதுகாப்பு சபையில் வல்லரசுகள் அநீதியை நீதியாகவும் நீதியை அநீதியாகவும் காட்டும் ஜாலவித்தையில் தங்களுக்குள்ள திறமையைப் பிரகடனம் செய்தன! உலக தர்மத்துக்கும் ஐ. நா. சபையின் விதிக்கும் முரணாக காஷ்மீர் மீது படையெடுத்து ஒரு பகுதியைச் சென்ற ஒன்பது

திணறுகிறது !



ஐ. நா. சபையில் காஷ்மீரைப் பற்றிய விவாதத்தின் போது, இந்தியப் பிரதிநிதி திரு கிருஷ்ண மேனன் சில சங்கடமான கேள்விகளைக் கேட்டு அமெரிக்காவைத் திணற அடித்து விட்டார்.

ஆண்டுகளாக ஆக்கிரமித்துக் கொண்டுள்ள பாகிஸ்தான், வல்லரசுகளுக்கு நல்ல பிள்ளையாகக் காட்சியளிக்கிறது! காஷ்மீரில் பாகிஸ்தானின் அட்டூழியங்களையும் நாசவேலைகளையும் தடுத்து, அமைதி நிலவும்படி செய்த பாரத நாடு கண்டனத்துக்கு உள்ளாகியிருக்கிறது!

இச் சந்தர்ப்பத்தில், சென்ற வாரம் ஐ.நா. சபையில் நிகழ்ந்துள்ள மற்றொரு சம்பவம் மேலே குறிப்பிட்ட வல்லரசுகளின் தீர்மானத்தையும் தூக்கியடித்து விட்டது!

காலனிகளில் ஆட்சி செலுத்தி வரும் நாடுகள், அந்தந்தக் காலனிகளில் தங்களுடைய நிர்வாக சம்பந்தமான தகவல்களை வருஷந்தோறும் அனுப்பி வைக்க வேண்டும் என்பது ஐ. நா. சாஸன விதிகளில் ஒன்று. அதன்படி கோவாவில் போர்ச்சுகல் சர்க்கார் தங்கள் நிர்வாக சம்பந்தமான தகவல்களை மேற்படி சபையில் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் அவ்விதம் செய்ய மறுத்து விட்டார்கள். கோவாப் பிரதேசம் போர்ச்சுகலைச் சேர்ந்த மாகாணங்களில் ஒன்று என்றும், எனவே, அது உள்நாட்டுப் பிரச்னையாதலால் அதன் நிர்வாக சம்பந்தமான தகவல்களை அறிவிக்க வேண்டிய அவசியம் தங்களுக்கு இல்லை என்றும் ஒரே அடியாகக் கூறிவிட்டார்கள்.

உலக அரசியல் அரங்கம் இருள் சூழ்ந்துள்ள இந் நிலையில், கோவாவிலிருந்து கிடைத்துள்ள ஒரு செய்தி சிறிது நம்பிக்கை யளிப்பதாக இருக்கிறது. சத்தியாக்கிரகம் செய்ததற்காக கோவா தேசபக்தர்களில் பலருக்கு 1955ம் ஆண்டில் போர்ச்சுகல் சர்க்கார், பன்னிரண்டு வருஷ விகிதம் சிறைத் தண்டனை விதித்திருந்தனர். அவர்களில் முப்பத்து மூன்று பேர்களைச் சென்ற வாரம் மேற்படி சர்க்கார் திடீரென்று விடுதலை செய்து விட்டார்கள். சத்தியாக்கிரகம் செய்த குற்றத்துக்காகப் பன்னிரண்டு வருஷம் சிறைத் தண்டனை விதிக்கும் காட்டுமிராண்டி சர்க்காருக்கு, அதற்குள் அவர்களை விடுவிக்க வேண்டும் என்ற எண்ணம் உதயமானது நம்பிக்கை அளிக்கக்கூடிய விஷயம்தான்.

விடுதலை யடைந்து பாரத நாட்டுக்கு வந்துள்ள அவர்கள் போர்ச்சுகல் அதிகாரிகளின் இரக்கமற்ற தன்மையை அம்பலமாக்கி யிருக்கிறார்கள். கோவா மக்களைப் பலாத்காரத்தினால் அடக்கி ஆட்சி புரிய முயற்சிக்கும் போர்ச்சுகல் சர்க்கார், கோவா தங்களுடைய உள்நாட்டு மாகாணங்களில் ஒன்றென ஐ.நா. சபையில், உலகநாடுகளின் முன்னிலையில் கூசாமல் துணிந்து கூறி யிருப்பதைக் காட்டிலும் அக்கிரமம் வேறு என்ன இருக்க முடியும்?

இரண்டு லட்சம் சிப்பந்திகளுக்கு யோகம்

யாரும் நம்ப முடியாத ஒரு சம்பவம் சென்ற வாரம் புது தில்லியில் நிகழ்ந்துள்ளது. பெரும் நெருக்கடியோ, வேலை நிறுத்தமோ எதுவுமின்றிச் சுமார் இரண்டு லட்சம் ரயில்வே சிப்பந்திகளுக்கு, அதிலும் கெஜட் பதிவில்லாத சிப்பந்திகளுக்கு அதிர்ஷ்டம் அடித்திருக்கிறது! ரயில்வே மந்திரி ஸ்ரீ ஜகஜீவன்ராம் வெளியிட்டுள்ள ஒரு புதுத் திட்டத்தின் மூலம், குறைந்த சம்பளங்களில் வேலை பார்த்து வரும் 1,70,000 ரயில்வே சிப்பந்திகள் பலன் அடையப் போகிறார்கள். சுதந்திர இந்தியாவில், குறிப்பாக, ரயில்வே சிப்பந்திகளின் பொறுப்புகளும் வேலைப் பளுவும் அதிகமாகி யிருப்பதாலேயே, புதிய திட்டம் உருவாக்கப்பட்டிருப்பதாக ரயில்வே மந்திரி அறிவித்துள்ளார்.

சம்பளம் போதவில்லையென்று வெகு காலமாக என். ஜி. ஓ.க்கள் கெஞ்சிக் கேட்டுக் கொண்டு வருகிறார்கள். சர்க்காரின் தேச உடைமைத் திட்டத்தின் விளைவாக அடிப்படைச் சம்பளத்துக்கே ஆபத்து வந்து விட்டதென்று இன்ஷூரன்ஸ் சிப்பந்திகள் அங்கலாய்க்கிறார்கள். இந் நிலைமையில் சர்க்காருக்கு ரயில்வே சிப்பந்திகளிடமாவது கருணை பிறந்தது பாராட்டத் தக்கதே.

இதில் மற்றொரு ஆச்சரியம் என்னவெனில், ரயில்வே மந்திரியின் புதிய திட்டத்தை ரயில்வே தொழிலாளர் சங்கங்கள் அங்கீகரித்து, தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்திருப்பதுதான். அதற்காக அச் சங்கங்கள் ரயில்வே மந்திரியை மிகவும் பாராட்டியுள்ளன.

நாடு முழுவதிலும் உள்ள ரயில்வே தொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் அடங்கிய மகாநாட்டைக் கூட்டி ரயில்வே மந்திரி தமது திட்டத்தை அறிவித்தது அவரது கண்ணியத்தையும் திறமையையும் காட்டுகிறது. இதன் மூலம், மற்றத் துறைகளிலும் நிர்வாகிகள்-தொழிலாளர் உறவு அபிவிருத்தியடைவதற்கான சிறந்ததொரு புதிய வழியை ரயில்வே மந்திரி காட்டியிருக்கிறார்.

ரயில்வேயில் உயர்தர சம்பள விகிதங்களில் உள்ள உத்தியோகஸ்தர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதாயும், அந்தக் குறையைத் தாம் கவனித்து ஆவன செய்வதாயும் சென்ற வருஷம் ரயில்வே மந்திரியாக இருந்த லால் பகதூர் சாஸ்திரி உறுதி கூறி யிருந்தார். அந்த வாக்குறுதியையே தற்போதைய மந்திரி ஜகஜீவன்ராம் காலம் கடத்தாமல் நிறைவேற்றி வைத்துள்ளார்.

நூறு ரூபாயிலிருந்து ஐந்நூறு ரூபாய் வரையில் அடிப்படைச் சம்பளம் உள்ள ஸ்டேஷன் மாஸ்டர்கள் தற்போது மூவாயிரம் பேர்களே உள்ளனர். புதிய திட்டத்தின் கீழ் ஒன்பதாயிரம் பேர்கள் மேற்படி அடிப்படைச் சம்பளம் பெறுவார்கள். அது போலவே, 185 ரூபாய் வரை சம்பளம் வாங்கிக் கொண்டிருப்பவர்களின் தொகை இரண்டாயிரத்திலிருந்து சற்றேறக்குறைய ஏழாயிரமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இவை போன்ற இன்னும் பல முன்னேற்றகரமான அம்சங்கள் புதிய திட்டத்தில் அடங்கியிருக்கின்றன. மேற்படி அம்சங்கள் சென்ற வருஷம் ஏப்ரல் மாதத்திலிருந்து அமுலுக்குக் கொண்டு வரப்படும் என்ற நல்ல செய்தியையும் ரயில்வே மந்திரி அறிவித்துள்ளார். இது பல ஏழைக் குடும்பங்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

எண்ணிப் பார்த்துப் போடுங்க!

காட்டூர்கண்ணன்



பார்த்துப் போடுங்க!—வோட்டுப்
பார்த்துப் போடுங்க!
பாரதத்தின் பண்பைக் காக்கும்
சிலரான்னு சிந்தை செய்து
பார்த்துப் போடுங்க!—வோட்டுப்
பார்த்துப் போடுங்க!


களுதை குருதை எது நின்னாலும்
கடமை என்று சொல்லிக்
கண்ணை மூடி வோட்டுச் செய்யும்
காலம் இது இல்லை.
அறிவு படைச்ச மனிசர் வேணும்
ஆட்சியிலே ஊழல்
திருசமன்கள் செய்யா திருக்கும்
தியாக சீலர் வேண்டும்.

எருதுப் பெட்டி பருந்துப் பெட்டி
எங்க பெட்டி என்று
பதவி காக்கச் சோளத் தட்டைப்
பதுமை ஒன்றை நிறுத்தி
அழுத பிள்ளைக்கு வாழைப் பழ
ஆசை காட்டினாற் போல்
ஆட்சி பீடம் ஏறிப் பின்னால்
ஆட்டம் காட்டு வாங்க.

பணம் படைத்தோர், வேஷக்காரர்,
பதவி வேட்டைக் காரர்,
குணமழிந்த சாதி பேதக்
கும்பல் காரர் எல்லாம்
ஒரு முகமாய் நீங்க் கிங்கே
குழி பறிக் கிறுங்க!
உரிமைச் சீட்டின் அருமை அதன்
உபயோ கத்தில் தாங்க!

வேறு

எதுவும் உங்கள் கையில் இருக்குது
எண்ணிப் பார்த்துச் செய்யுங்க!
ஒருவர் முகத்துக் காகவும் இல்லை
ஊருக்கு நன்மையைச் செய்யுங்க!
தருமம் என்று செய்தாலும் அதைத்
தகுந்த கைக்குச் செய்யுங்க!
முறைமை தவறிச் செயதோ மானால்
முடிவில் மோசம் தானுங்க!



நல்லவர்களுக்கு வோட்டுப் போடுங்கள்!

தங்களுடைய சென்ற வார இதழில் தேர்தலைப் பற்றிய தலையங்கம் மிகவும் பிரமாதம். யாருக்கு நம்முடைய வாக்கை அளிப்பது என்ற எண்ணத்திலே சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் பாமர மக்களுக்குத் தங்களுடைய தலையங்கம் ஒரு வரப்பிரசாதம். நேருஜியின் அயல் நாட்டுக் கொள்கைகளுக்கு வோட்டுக் கேட்கும் நம் நாட்டுத் தேசபக்த வேஷதாரிகளுக்குச் சரியான சூடு. தேர்தல் வரை தங்களுடைய பத்திரிகையில் தொடர்ந்து இம்மாதிரி விஷயங்களை விளக்கி எழுதிப் போலி தேசபக்தர்களின் வண்டவாளங்களை மக்களுக்கு விளக்க வேண்டியது தங்களைப் போன்ற பத்திரிகாசிரியர்களின் இன்றியமையாத கடமையாகும்.

திருவல்லிக்கேணி
9—2—57

வெ. மகாலிங்கம்

★

தமிழ்நாட்டில் பெரும்பான்மையோரின் மனத்தைப் பிரதிபலிக்கும் வகையில் தங்களது தலையங்கங்கள் அமைந்தது கண்டு மிக்க மகிழ்ச்சியடைகிறோம். காங்கிரஸ் என்றால் முன்பு குதூகலமடைந்த உள்ளங்கள், இப்பொழுது தமிழ்நாட்டில் சோர்வடைவதை உணர்கிறோம்.

திரு காமராஜ் தமது கட்சியின் உயர்ந்த கொள்கையை ஏற்றுக் கொள்பவர்கள் மட்டும் தம்மை ஆதரித்தால் போதும் என்று உடனே நாடறியப் பறைசாற்றக் கடமைப் பட்டுள்ளார். "சட்டி எட்டடி பாயும், சத்தியம் பாதாளம் வரை பாயும்" என்பது தமிழ்நாட்டு முதுமொழியல்லவா?

கோயமுத்தூர்
9—2—57

சாரதாமணி

★

தை 21-ம் தேதி 'கல்கி'யில் "நல்லவர்களுக்கு வோட்டுப் போடுங்கள்—2" மிக மிகத் தெளிவான பாதையை நாட்டிலுள்ள வோட்டர்களுக்குக் காட்டுவதாக அமைந்திருக்கிறது. துவேஷத்தை வளர்க்கும் ஒரு கட்சியின் தலைவர், உலகமே போற்றி வணங்கும் காந்திமகானை இடைவிடாமல் எதிர்த்து வந்தவர், காங்கிரஸ் ஸ்தாபனத்தைச் சதா சர்வகாலம் தூற்றியவர், தூற்றிக் கொண்டிருப்பவர்—இன்றைய சென்னை காங்கிரஸ் ஆட்சியின் முதன் மந்திரியைப் பாராட்டுவதும், அவர் வெற்றி பெறப் பிரசாரம் செய்வதும் விந்தையாகவே இருக்கிறது. இந்த விந்தை மனிதரின் திடீர் விருப்பத்துக்குக் காரணம். "தமது துவேஷத் திட்டங்கள் எல்லாம் சென்னையில் இந்தக் காங்கிரஸ்காரரின் தலைமை தொடர்ந்து இருந்தால்தான் வெற்றிகரமாக நிறைவேறும் என்பதுதானே பொருள்?

"காங்கிரஸுக்குச் சம்பந்தமில்லாத ஒரு கோடீசுவரரைக் காங்கிரஸையும் அதன் கொள்கைகளையும் எதிர்த்து வந்த குபேரரைக் காரைக்குடியில் காங்கிரஸ் அபேட்சகராக நிறுத்தி வைப்பதற்குக் காரணம் இவரிடம் பணம் இருக்கிறது என்பதுதானே?" என்று குறிப்பிட்டிருந்தது எங்களுக்கு நல்ல வழியைக் காட்டி, நல்லவர்களுக்கு வோட்டுப் போட உணர்ச்சியைத் தூண்டி நிற்கிறது.

சுசீந்திரம்
8—2—57

கே. கடலைமுத்துப் பிள்ளை

★

'கல்கி'யின் 'நல்லவர்களுக்கு வோட்டுப் போடுங்கள்—2' என்ற உப தலையங்கத்தைப் பார்த்தோம், மகிழ்ந்தோம். நடுநிலைமையான தலையங்கம். யாருமே குறை கூற முடியாது. இப்பொழுது இருக்கக்கூடிய நிலைமையை விளக்கிக் காட்டித் தமிழ் மக்களுக்கு உண்மையை எழுதினீர்கள். காங்கிரஸ் மேல் பற்றுதல் கொண்ட உண்மை காங்கிரஸ்காரர்கள் எல்லோரும் 'நல்லவர்களுக்கு வோட்டுப் போடுங்கள்' என்ற தலையங்கத்தைப் போற்றுகிறார்கள், புகழுகிறார்கள்.

காங்கிரஸ் ஸ்தாபனம் ஒரு மாபெரும் ஸ்தாபனம். இதை யாரும் குறை கூற முடியாது. ஆனால் சில சுயநலமிகள் தோன்றிக் காங்கிரஸின் பெயரையும் செல்வாக்கையும் கெடுத்து விடுகிறார்கள். நல்ல நன்செய் பயிரில் களைபோல தோன்றி விடுகிறார்கள். வருகிற பொதுத் தேர்தலில் பணத்துக்கோ அதிகாரத்துக்கோ அடிமையாகாமல் மனசாட்சிக்கு விரோதமன்னியில் காங்கிரஸ்காரராக இருந்தாலும் சரி, எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தபோதிலும் சரி, நல்லவர்களுக்கு வோட்டுப் போடுங்கள். அதுதான் நாம் செய்யும் திருப்பணி, தொண்டு.

[illegible]
9—2—57

மு. மா. முத்தையாபிள்ளை

★

கேரளத்தில் பிரஜா-சோஷலிஸ்ட் கட்சி முஸ்லிம் லீக்குடன் தேர்தல் உடன்படிக்கை செய்து கொண்டதைக் கேலி செய்து நேரு அவர்கள் சென்னைப் பொதுக் கூட்டத்தில் பேசினார்கள். தமிழ் நாட்டில் காங்கிரஸ் அதைவிட மோசமான நிலைமையிலே நடந்து கொண்டிருக்கிறது என்பது நேருவுக்குத் தெரியாதது வியப்பாகத்தான் இருக்கிறது. சாதி வெறி கொண்ட திராவிடக் கழகம் காங்கிரஸுடன் சேர்ந்து தேர்தலில் மும்முரமாக வேலை செய்யத் தொடங்கியிருக்கிறது.

கொள்கைகளைக் காற்றிலே பறக்க விடும் இந்நேரத்தில் தாங்கள் சொல்வது போல் நல்லவர்களுக்குத்தான் வோட்டுப் போட வேண்டும். உங்கள் தலையங்கத்தை முழுமூச்சுடன் மனதார வரவேற்கிறேன்.

சென்னை
8-2-57

ஆர். ரமணி


புத்துணர்ச்சி
யுடன்
இருங்கள்
ஸ்நானம் செய்யும்பொழுது இளங் குழந்தைக்கு எது சிறந்தது என்
பது தாய்க்குத் தெரியும். சுத்தமான சேர்க்கைப் பொருள்களிலிருந்து
தயாரிக்கப்படும் ஹமாம் பச்சிளங் சருமத்திற்கு ஹானி விளைவிக்காது.
அதன் மிருதுவான, ஏராளமான நுரை இதமளித்து, புத்துணர்ச்சி
யுடன் வைக்கிறது.
டாடாவின்
ஹமாம்
டாய்லெட் சோப்
HAMĀM
TOILET SOAP
100% இந்திய
மூலதனம்—இந்திய
நிர்வாகம்—இந்திய
உழைப்பு


இருமலிலிரு
ந்து விரைவில்
நிவர்த்திபெற
வேண்டுமா?
க்ளைகோடின்
டெர்ப் வசாகா
Alembic
அலெம்பிக் கெமிகல் ஒர்க்ஸ் கம்பெனி லிமிடெட், பரோடா-3.
நீங்கள் அலெம்பிக்கின் மேல் பூரண நம்பிக்கை வைக்கலாம்.

வட்ட மேஜை

திரும்பப் படியுங்கள்

என்னுடைய கதை ஏன் வரவில்லை என்று 'கல்கி' படிக்கும் குழந்தைகளும் மற்றவர்களும் சென்ற சில வாரமாகக் கேட்டு வருகிறார்கள். என்னுடைய கதைத் தொடர் ''குழந்தைகளுக்குப் புரியும்'' என்ற கதையோடு முடிந்து விட்டது. இனிமேல் பழைய கதைகளைத் திரும்பப் படித்தால் போதும். புதிதாகவே தோன்றும்.

தியாகராய நகரம்
6—2—57

ராஜாஜி

காலம் மாறும்

பிப்ரவரி பத்தாம் தேதி ''கல்கி'' இதழின் தலையங்கமாகிய ''வாக்காளர்களுக்கு ஒரு வார்த்தை''யும், காரைக்குடி பெரியார் திரு சா. கணேசன் அவர்களின் வேண்டுகோளும் தமிழ் நாட்டிலுள்ள வாக்காளர்கள் அத்தனை பேர்களும் ஊன்றிக் கவனிக்க வேண்டிய விஷயங்கள் மட்டுமின்றி, செயலிலும் காண்பிக்க வேண்டியது கடமையுமாகும். ''தர்மத்துக்கும் அதர்மத்துக்கும் போட்டி'' என்ற பொன்மொழி காரைக்குடி தொகுதிக்கு மட்டுமின்றித் தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் பொருந்தும்படி இருக்கிறது. தற்போதைய தமிழ் நாட்டுக் காங்கிரஸ் அபேட்சகர்களின் நியமனம் அவ்வாறு இருக்கிறது.

இப்போது எங்கள் தொகுதியில் தேர்தல் வேலைகள் வேடிக்கையாக, ஆனால் வேதனை தரும் முறையில் நடந்து கொண்டிருக்கின்றன. திராவிடக் கட்சிக்காரர்களும், வகுப்புவாதிகளும், அவர்களைச் சார்ந்த பெரும் வியாபாரிகளும் அவர்கள் கார்களில் கதர்க் கொடியைப் பறக்க விட்டுக் கொண்டு காளை மாட்டுப் பெட்டிக்கு வோட்டுக் கேட்பதும், உண்மையான காங்கிரஸ் வாதிகள் ''சீர்திருத்தக் காங்கிரஸ்'' அபேட்சகருக்கு யானைச் சின்னமுள்ள கொடி போட்டுக் கொண்டு வோட்டுக் கேட்பதும் பரிதாபகரமான காட்சிகளாக இருக்கின்றன. காந்திஜியின் உயிரைப்பலி கொள்ள எது காரணமாக இருந்ததோ அதே சாதி வெறி இன்று தமிழ் நாடு காங்கிரஸ் கட்சியினுள் புகுந்து அதிகாரம் செலுத்துகிறது. உண்மைக் காங்கிரஸ்காரர்களின் வெளியேற்றம் அதிகரிக்கிறது. சாதிப் பித்தர்களின் தலைமையில் புதிய காங்கிரஸ் கமிட்டிகள் உருவாக்கப்படுகின்றன. தர்மமும், நியாயமும் எப்பொழுதும் அழிவதில்லை. அழிவதுபோல் தோற்றமளிக்கும். அவ்வளவுதான். தர்மம் அழிக்கப்பட்டு அதர்மம் அளவுக்கு மேல் வளர்ச்சியடையும் போது, மக்களிடையே ஏற்படும் விழிப்பின் காரணமாக உண்டாகும் மாறுதல்தான் அதர்மத்தின் அழிவு; தர்மத்தின் உயர்வு. இது உலகம் உண்டான நாள் முதல் நடைபெற்று வரும் உண்மை. இதற்குத் தமிழ் நாடு காங்கிரஸின் தலைமையினர் மட்டும் எப்படி விதிவிலக்காக இருக்க முடியும்? ''கட்டுண்டோம், பொறுத்திருப்போம், காலம் மாறும்'' என்ற அமரகவியின் மணிமொழிகளை ஞாபகப்படுத்திக் கொண்டு காலத்தை எதிர் பார்த்துக் காத்திருப்பதைத் தவிர என் போன்றவர்களுக்கு ஒன்றும் தோன்றவில்லை.

திருக்கோவிலூர்
7—2—57

ஆர். பழனி முதலியார்
(மாஜி ந. கா. கமிட்டித் தலைவர்)

நல்ல வழிகாட்டி!

'கல்கி' பிப்ரவரி பத்தாந்தேதி இதழில் வெளியான ''வாக்காளர்களுக்கு ஒரு வார்த்தை'' என்னும் தலையங்கம் மக்களுக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகவும் நல்ல வழிகாட்டியாகவும் இருக்கிறது.

மேற்படி தலையங்கத்தின் கடைசிப் பத்தியும் அதற்கு விளக்கமாக, ''காங்கிரஸ் தேர்'' என்ற 'கார்ட்டூன்' சித்திரமும் மிகவும் பொருத்தமாக அமைந்திருக்கின்றன.

பொதுத் தேர்தலை யொட்டி, தாங்கள் இவ்விதம் எழுதிவரும் தலையங்கங்களை மக்கள் படித்து, அதில் உள்ள முக்கிய கருத்துக்களை மனத்தில் பதிய வைத்துக்கொண்டு, வரும் பொதுத் தேர்தலில், தமிழ் நாடு காங்கிரஸின் சர்வாதிகாரத்துக்கு ஒரு படிப்பினை காண்பிக்க வேண்டும் என்று வாக்காளர்களைத் தர்மத்தின் பெயரால் வேண்டுகிறோம். தக்க சமயத்தில் இம்மாதிரி புத்திமதிகளைக் 'கல்கி'யில் பிரசுரிப்பதற்கு எங்களது நன்றி.

இ. ரா. சுப்பிரமணியன்
இ. ஆராவமுதன்
ஆர். கிருஷ்ணமூர்த்தி
ஆ. ராதாகிருஷ்ணன்
லால்குடி சீனிவாசன்
ஹ. நாகராசன்

எழும்பூர்
8—2—57

நெசவாளர்களின் குரல்

விசைத்தறிகளால் கைத்தறி நெசவாளர்களுக்குத் தீங்கு நேரும் என்று ராஜாஜி, வினோபாஜி போன்ற தலைவர்களும் மற்றவர்களும் எச்சரித்தும்கூட, விசைத்தறிகள் வேகமாக வரத் தொடங்கி விட்டன.

தறிகளைப் பதிவு செய்வது தறிக்காரர் நன்மைக்கு என்று கூறினார்கள். ஆனால் தறியில் வேலைசெய்யும் மனிதன் பெயரைக் குறிக்காமல் மரத்தை மட்டும் குறித்தனர்! அதிலும் நூல் தறிகளை மட்டும்தான் பதிவு செய்வோம் என்று கூறி, பட்டுத் தறிகளைப் பதிவு செய்யாது, பாரபட்சமாக விட்டு விட்டனர். அவைகள் தறிகளாக, அதில் தயாரிப்பது துணிகளாகத் தெரியவில்லை போலும்! அப்படியானால் நூல் தறிகளுக்கு மட்டும் பதிவுக் கணக்குப்படி சர்க்கார் சலுகை கொடுத்து, பதிவு செய்யாத பட்டுத் தறிகளை விடுவதன்மூலம் நெசவாளர்களின் அதிருப்திக்கே ஆளாக நேரும்.

இன்று அந்தப் பட்டுத் தறிகளுக்கும் இறக்குமதி வரி போட்டுவிட்டார்கள். இதனால் பட்டு

நெசவுத் தொழில் பாதிக்கப்பட்டுப் பல லட்சம் நெசவாளர்கள் பரிதவிக்க நேரிடும்.

சர்க்கார் கூறுவதுபோலப் பட்டு ரகம் மில் துணிக்கு என்றுமே போட்டியாக இருந்த தில்லை. காசி பட்டுத் துணியும், காஞ்சி பட்டுச் சேலையும் பரம்பரை கைத்தறித் தொழிலாக இருந்து வருகின்றன. இவற்றை ஒழிக்கத்தான் போட்டியாக வந்தனர் ஆங் கில ஆட்சியினர். அந்த எதிர்ப்பிலும் பட்டு நெசவுத் தொழில் வளர்ந்து இன்றும் சேலம், மதுரை, கோவை, செங்கல்பட்டு ஜில்லாக் களிலும், சூரத், அமிர்தசரஸ், அம்பாலா—லக்னௌ, பாட்னா, வங்கம் முதலிய இடங் களிலும் சுமார் ஐந்து லட்சம் தறிகளுக்கு மேல் இந்தப் பட்டுத் தொழிலில் ஈடுபட் டுள்ளன. இதனால் இருபத்தைந்து லட்சம் மக்கள் வாழ்கிறார்கள்.

இந்த நிலையில் இறக்குமதி வரியால் இத் தொழில் வளருமா என்பதைப் பொறுப் புள்ள அதிகாரிகள் ஆலோசித்துத் தகுந்த பரிகார முறைகளைக் கைக்கொள்ள வேண்டி யது மிக மிக அவசரமும் அவசியமுமாகும்.

சேலம்
2—1—57

ஏ. நாச்சிமுத்து
(காரப்பதர்ச். கைத்தறி நெசவாளர் சங்கம்)

எங்கள் குற்றமா?

சென்ற இரண்டு ரயில்வே கமிஷன் விளம் பரங்களில், மெட்ரிகுலேஷன் அல்லது அதற் குச் சமமான படிப்பு உள்ளவர்கள், இங்கிலீஷ் கணக்கு இவைகளில் நாற்பது மார்க் வாங்கிய வர்கள் மட்டும் விண்ணப்பித்துக் கொள்ள லாம் என்று குறிப்பிட்டிருக்கிறது. இண்டர் அல்லது அதிகப் படிப்பு உள்ளவர்களுக்கு மார்க்குகள் நிபந்தனை இல்லை.


பல மாணவர்கள் மெட்ரிகுலேஷன் முடிந்து தட்டெழுத்து, சுருக்கெழுத்து பரீட்சைகள் தேறுகிறார்கள். அவை அதிகப் படிப்பல்லவா?

பல பரீட்சகர்கள் விடைத் தாள்களைத் திருத்துவதால் குறிப்பிட்ட சதவீதம் எந்த ஒரு குறிப்பிட்ட பாடத்திலும் பெறுவது அதிர்ஷ்டவசந்தான். ஆகவே 37 மார்க்குகள் வாங்கி, அது கணக்கு ரீதியாகக் குறைந்தா லும், அவர்களது விண்ணப்பங்களையும் பரி சீலனை செய்ய வேண்டும்.

வேறு இலாக்காக்களில் (தபால், தந்தி) தட்டெழுத்து, சுருக்கெழுத்து இவைகளுக்கு உபரி மார்க்குகள் வழங்குகிறார்கள். ரயில்வே கமிஷனும் அவ்வாறு செய்யுமா? இரண்டு அல்லது மூன்று மார்க்குகளுக்காக ஒரு வாலி பரது வாழ்க்கை பாழாவதைத் தடுக்குமா?

திருச்சி
29—1—57

டி. எஸ். கோவிந்தராஜன்
என். கோபாலன்
எஸ். ரங்கசாமி



திருக்குறள் நூற் காட்சி

இவ்வாண்டுத் திருவள்ளுவர் திருநாளின் போது ஜூன் 11-ந் தேதி எமது தமிழ்மறைக் கழகச் சார்பில் கொழும்பில் நடத்தப்படும் ஐந்தாவது திருக்குறள் மாநாட்டில் திருக் குறள் நூற்காட்சி ஒன்றினையும் அமைப்ப தற்கு முயன்று வருகிறோம். திருக்குறள் மூலம், உரைகள், திருக்குறளும் திருவள்ளு வரும் பற்றிய கட்டுரைகள், ஆராய்ச்சி நூல்கள், நாடகங்கள், பாடல்கள், மலர்கள், பத்திரிகைகள் முதலிய யாவற்றையும் சேர்த் துக் காட்சிக்கு வைக்க எண்ணியுள்ளோம். இன்று வரை வெளிவந்துள்ள நூல்கள் யாவற் றையும் சேர்த்து இந்நூற் காட்சியினைச் சிறப் பாக நடத்துவதற்குத் தமிழ்கூறும் நல்லுலக மெங்குமுள்ள அன்பர்களின் ஆதரவு தேவை.


நூலாசிரியர்களையும், பதிப்பாளர்களையும், புத்தக வியாபாரிகளையும், தாங்கள் வெளி யிட்ட நூல்களையும், தங்களிடம் உள்ள நூல் களையும் பற்றிய விவரங்களை எமக்கு அனுப்பி உதவுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம். நூல் களை நன்கொடையாக உதவும் அன்பர்கள் "தமிழ் மறைக் கழகம், 18/2, அத்திடியா வீதி, ரத்துமலானை, இலங்கை" என்ற விலா சத்துக்கு அனுப்பக் கோருகிறோம்.

இப்பொழுது வியாபார நிலையங்களிலே பெற முடியாத பழைய நூல்களை வைத்திருப் போர் விவரங்களை அறிவிப்பின் அவற்றை விலை கொடுத்துப் பெறுவதற்கும் முயல்வோம்.

தமிழ் கூறும் நல்லுலகத்தில் முதல் முதலாக நடக்கும் இச்சிறிய பெரும் பணி சிறப்பாக நிறைவேற இயன்ற உதவி செய்யுமாறு தமிழ்ப் பேரறிஞர்களையும், தமிழ்ப் பத்தி ரிகைகளையும் வேண்டிக் கொள்ளுகிறோம்.

இலங்கை
4—2—57

பண்டித கா. பொ. இரத்தினம்



நான் இன்ஷ்யூரன்ஸ் செய்துகொள்ளாமலிருக்க முடியாது

"ஐந்து ஆண்டுகளுக்கு முன் ஒரு இளைஞன் அவனுடைய கிராமத்தை விட்டு பிழைப்பிற்காக நகரம் வந்து சேர்ந்தான். ஆயிரக்கணக்கான மற்றவர்களைப் போல அவனும் வந்தான். ஆனால் அவனுக்கு அதிர்ஷ்டம் அடித்தது. உத்தியோகமொன்று கிடைத்து அவன் கடினமாக உழைத்தான். அந்த இளைஞன் நான்தான்!

"கடந்த ஐந்து ஆண்டுகளும் எனக்கு மிகவும் சுகமாகக் கழிந்தன. நன்கு வேலை செய்து முன்னுக்கு வந்து, இப்பொழுது நான் ஒரு பொறுப்பான பதவியை வகிக்கிறேன். என் காரியங்களெல்லாம் நன்கு நடைபெறுகின்றன. இப்பொழுது எனக்குக் கலியாணமாகி, இரண்டு பையன்கள் உள்ளனர். என் தகப்பனருக்கு இன்னமும் பணம், குறைவில்லாமல், அனுப்ப முடிகிறது.

"பூமியில் ஜனித்த எனக்கு வாழ்க்கையின் அநித்தியம் நன்கு தெரியும். ஆகவே எனக்கும் என் குடும்பத்தினருக்கும் ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் மூலம் பாதுகாப்புத் தேடிக்கொண்டுள்ளேன். என்னால் இன்ஷ்யூரன்ஸ் செய்துகொள்ளாமலிருக்க முடியாது. ஏனெனில் என்னை நம்பி வாழ்பவர்கள் பலர்.

"என்னால் எப்படி பிரீமியம் கட்ட முடிகிறது? சொல்லுகிறேன். ஆண்டுதோறும் என் பாக்டரியில் கொடுக்கும் போனஸிலிருந்து என்னால் முடிந்தமட்டும் வருஷாந்திர பிரீமியங்கள் கட்டுகிறேன். இப்படியாக, போதிய அளவு நான் இன்ஷ்யூரன்ஸ் செய்து கொண்டுள்ளேன். இதனால் எனக்கு யாதொரு பண சிரமமுமில்லை.

"இன்ஷ்யூரன்ஸில் எனக்கு நம்பிக்கை உண்டு."

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா
ஸெண்ட்ரல் ஆபீஸ்: ஓரியண்டல் பில்டிங்ஸ், போர்ட், பம்பாய் 1.

Life Insurance Corporation of India

AIF/LIC-3

ஸோனல் ஆபீசுகள்: பம்பாய், புது டில்லி, கல்கத்தா, சென்னை, கான்பூர்
டிவிஷனல் மற்றும் கிளை ஆபீசுகள் இந்தியாவில் எல்லா இடங்களிலும் இருக்கின்றன

பாரதநாட்டு ஞானிகள் பரம்பரையில் வந்து மகத்தான தொண்டு புரிந்த முனிவர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர். அவருடைய 121-வது பிறந்த நாள் பிப்ரவரி 18உ வருகிறது. இந்தப் புனித தினத்தை உலகமெங்கும் கொண்டாடுகிறார்கள். நமது நேயர்களும் அந்தக் கொண்டாட்டங்களில் கலந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே இந்தக் கட்டுரையைப் பெருமையுடன் வெளியிடுகிறோம். —ஆசிரியர்

பாரதமும் பரமஹம்ஸரும்

சுரேஷ்ராம்

ஓர் இளைஞன். அவனுக்குத் தவம் செய்து ஆண்டவனைத் தரிசிக்க வேண்டும் என்று ஆசை. கண்களை மூடிச் சிறிது நேரம் தியானத்திலிருந்தான். பிறகு அவன் சுய உணர்வு பெற்றவுடன் தன் குருநாதரிடம் ஓடினான்: ''என்னுடைய சமாதி நிலையில் நான் பேரானந்தத்தை அனுபவித்தேன். உலகத்தையே மறந்திருந்தேன். அத்தகைய நிலையிலேயே என்றும் நான் இருக்க அருள வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டான்.

குருநாதர் இதைக் கேட்டதும், ''என்ன வெட்கக்கேடான விஷயம்! நீயா இப்படிக் கேட்பது? இப்போது நீ உன் சொந்த இன்பத்தைப் பற்றியல்லவா பேசுகிறாய்! ஏழை எளியவர்களின் துயரைத் துடைப்பதல்லவா உன் பணி!'' என்றார்.

இது புது மாதிரியான உபதேசமாக அல்லவா இருக்கிறது! நமது நாட்டில் இவருக்கு முன் யாரும் இப்படி உபதேசம் செய்ததில்லை! இப்படிச் செய்தவர் யார் தெரியுமா? ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

இறைவனைக் காண முயலும் வழக்கம் நம் நாட்டில் நீண்ட நெடுங்காலமாகவே இருந்து வந்திருக்கிறது. அதற்கு எத்தனையோ மார்க்கங்கள் — ஞானமார்க்கம், பக்தி மார்க்கம்—என்று நம் முன்னோர்கள் கண்டிருக்கிறார்கள். இந்த மார்க்கங்களையெல்லாம் விட்டுப் புது மார்க்கத்தைக் கண்டவர் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.



உலகம் முழுவதும் ஒரு குடும்பமாகக் கருத வேண்டும் என்று நம் ரிஷிகள் சொல்லித்தான் இருக்கிறார்கள். அணுவிலிருந்து அண்டபகிரண்டம் வரை எங்கும் இறைவன் நிறைந்திருக்கிறான் என்றும் கூறியிருக்கிறார்கள். ஆனால் இந்த உயரிய கொள்கையை அன்றாட வாழ்க்கையில் அனுஷ்டிக்க அவர்கள் வழி வகையைச் சொல்லவில்லை. ஏழை எளிய மக்களுக்குத் தொண்டு புரிவதும் ஆண்டவன் வழிபாடுதான் என்று அவர்கள் காணவில்லை.

பக்தி மார்க்கத்தில் அன்புக்கு முக்கியம் அளிக்கப்பட்டது. அந்த அன்பு சேவா உணர்ச்சியாகப் பரிணமிக்க வில்லை. அதே போல் அத்வைத மார்க்கமும் மக்கள் தொண்டைப் பற்றிக் கூறவில்லை. பாரத நாட்டு மக்கள் தொண்டு செய்வதில் ஆர்வம் இல்லாதவர்களல்ல. எனினும், சிந்தனையில் அதிக கவனம் செலுத்திய மக்கள், உடல் வளைந்து வேலை செய்வதில் அவ்வளவு நாட்டம் கொள்ளாமல் இருந்து விட்டனர். அதனால் கருத்துக்கும் செயலுக்கும் சம்பந்தமில்லாமலே போய் விட்டது. இது எவ்வளவு பயங்கரமான நிலை.

நாளடைவில் உடல் உழைப்பின் உயர்வை மறந்தோம். புத்தியைச் செலுத்தி வேலை செய்வதுதான் உயர்ந்தது என்றும் தேக உழைப்பு தாழ்வு என்றும் தவறான எண்ணம் பரவலாயிற்று. இதன் காரணமாகத் தீண்டாமை எனும் பேய் நம் சமுதாயத்தில் புகுந்தது. நமது நாட்டின் சுதந்திரம்பறிபோயிற்று. அப்போதும் நாம் விழிப்படையவில்லை.

உடல் உழைப்புக்கு ஊக்கமளித்தவர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர். ஒவ்வொரு ஜீவராசியிலும் மனிதனிலும் ஆண்டவன் இருக்கிறான் என்றால் அந்த மனிதனுக்கு ஏன் தொண்டு செய்யலாகாது என்று முதன் முதலில் கேட்டவர் ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

''கடவுளைத் தேடுகிறாயா? அப்படியானால் அவனை மனிதனில் பார்! கடவுளின் சாந்நித்தியம் மற்றப் பொருள்களில் காண்பதை விட மனிதனிடம்தான் அதிகமாகக் காணலாம். மனிதன்தான் கடவுள் மிக விரும்பிக் கோவில் கொள்ளும் இடம்!'' என்று கூறுகிறார் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர். இப்படி ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் ''ஏழைகளின் துயரைத்தீர்ப்பதிலும் நலிவுற்றவர்களுக்குத் தொண்டு புரிவதிலும்'' ஒரு புது பக்தி பாவத்தை உண்டாக்கி விட்டார். இதுதான் விவேகானந்தருக்கு அவர் அளித்த மூல உபதேசம். அதன் காரணமாகவே விவேகானந்தர் ஸ்ரீ ராமகிருஷ்ண மடாலயங்கள் தோற்றுவித்தார். இம் மடாலயங்கள் நம் நாட்டிலும் வெளி நாடுகளிலும் மிகச் சிறந்த முறையில் அருமையான தொண்டு செய்து வருகின்றன.

மனிதன் வேலை செய்யாமல் தப்ப முடியாது. ஆண்டவன் படைப்பிலேயே, இயற்கையிலேயே மனிதன் வேலை செய்தே ஆக வேண்டும் என்று ஏற்பட்டிருக்கிறது. அதனால் தான் பற்றுதலின்றிச் செய்யப்படும் வேலை

மனிதனை இறைவனிடமே கொண்டு செல்கிறது. இறைவனை அடைவதுதானே மனித வாழ்க்கையின் லட்சியமே.

ஒரு முறை கேசவசந்திரஸென் என்ற பிரபல பிரம்ம சமாஜக்காரர் ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்ஸரைச் சந்தித்தார். அவருக்கு ராமகிருஷ்ணர் சொன்ன மொழிகள் இவைதாம்: ''உலகில் நாம் வாழ வேண்டும். அன்பு செலுத்த வேண்டும்! சிருஷ்டிக்க வேண்டும்! சிருஷ்டித்தல் என்பதற்குக் கடவுளைப் போலாதல் என்று பொருள். உலகிலுள்ள ஒவ்வொரு பொருளிலும் ஆண்டவன் இருக்கிறான் என்ற உணர்ச்சி உள்ளத்தில் நிறைந்தால், பின்னர் நீங்கள் என்ன சொன்னாலும் அந்த மொழிகளில் உண்மை சுடர்விட்டுப் பிரகாசிக்கும். சுயநலமற்றவர் ஒருவர் நம்மிடையே வாழ்ந்தால் அவரது ஒவ்வொரு செய்கையும் தர்மத்தின் இதயத் துடிப்பாக மிளிர்கிறது. அவர் மற்றவர்கள் உய்யச் செய்யும் ஒவ்வொரு பணியும், மக்களை மிக உன்னத நிலைக்குக் கொண்டு போய்விடுகிறது. அவர் எதைத் தொட்டாலும், உண்மை ஒளியுடன் தூய்மையோடு பிரகாசிக்கிறது. உண்மையின் தந்தையாகி விடுகிறார். அவர் செயல்கள் எதுவும் காலவெள்ளத்தில் அமிழ்ந்து விடுவதில்லை; எதிர்த்து நிற்கிறது. இதைத்தான் நீங்கள் செய்யவேண்டும் என்று விரும்புகிறேன். வாழ்ந்து, அன்பு செலுத்திப் புது சமுதாயத்தை உண்டாக்குங்கள்.''

ராமகிருஷ்ண பரமஹம்ஸருக்குக் கொள்கைகள் பற்றிய ஆராய்ச்சிகளும் சர்ச்சைகளும் பிடிக்காது. அவர் ஓயாமல் என்ன பிரார்த்தித்து வந்தார் தெரியுமா?

''அன்னையே! என் மூலமாகப் புது மதக் கோட்பாடுகளையும் கொள்கைகளையும் உண்டாக்காமல் இருப்பாயாக!''

''நான் தர்க்கம்புரிய விரும்பவில்லை. காரண காரிய தர்க்க நியதிகளுக்கு மேலாக ஆண்டவன் இருக்கிறான்! உலகில் உள்ள பொருளனைத்தும் ஆண்டவனாகவே காண்கிறேன். பின் தர்க்கத்துக்கு இடம் ஏது? நாம் மாம்பழம் சாப்பிட வேண்டுமென்றால் மாந்தோப்புக்குள் போய் மாம்பழத்தைப் பறித்துச் சாப்பிட்டுவிட்டு வெளியே போய்விடுகிறோம். தோப்புக்குள் போய் மாமரத்திலுள்ள இலைகளை எண்ணுவதில்லையல்லவா? அவ்வாறு மறுபிறவி உண்டா, இல்லையா? விக்கிரஹ ஆராதனை சரியா, தவறு என்று தர்க்கவாதம் செய்து காலத்தை வீணாக்குவானேன்?''

நமது தேச ரிஷிகளுக்குள், பக்தர்களுக்குள் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் மிக உயர்ந்த பீடத்தை வகிக்கிறார். நமது கடவுள் தத்துவத்துக்கும் செயலுக்கும் இணைப்பை உண்டாக்கி மக்களின் உள்ளப் பண்பை உயர்த்தினார். அவருக்குப் பின்னர் காந்தி மகான் இதை இன்னும் ஒரு படி முன்னேறச் செய்தார். செய்யும் தொண்டு பொருள் உற்பத்தி செய்யக் கூடியதாக இருக்கட்டும் என்று சர்க்காவையும் நிர்மாணத் திட்டத்தையும் வகுத்தார். அவருக்குப் பின் விநோபா அடிகள் இன்று நம்மிடையே அந்தப் பணியைத் தொடர்ந்து செய்து வருகிறார்.

தேவியின் கடிதம்

குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை!

வசுமதி ராமசாமி

அன்புக்குரிய சுஜாதா,

'விட்டுக் கொடுப்பது' என்ற வார்த்தைக்கு இன்னொரு அர்த்தம் என்னவென்று அவசரமாகக் கேட்டு எழுதியிருக்கிறாய்.

பெண்கள் 'தாங்கள் பலவீனமானவர்கள், பிறர் தங்களை எப்பொழுதும் துன்புறுத்துகிறார்கள்' என்ற மனப்பான்மையிலேயே இருக்கிறார்கள். அதன் விளைவாக, தங்கள் குடும்பத்தாரிடமும் மற்றவர்களிடமும் உள்ள சிறு குற்றங்களைக்கூடத் தங்கள் கஷ்டத்துக்கு மூலகாரணமென்று கருதுகிறார்கள். மூன்றாவது மனிதரிடம் அவற்றைப் பற்றிக் குறை சொல்லி வருந்துகிறார்கள் என ஒரு அறிஞர் எழுதியிருந்ததைச் சமீபத்தில் படித்தேன். அதில் ஓரளவு உண்மை இருக்கத்தானிருக்கிறது. சிலருக்கு இந்த மன நிலைக்கு உடல் நிலையும் ஓரளவு காரணமாக இருக்கலாம்.

நம்முடைய குற்றம் நமக்குத் தெரிவதில்லை. அதோடு மட்டுமல்ல; பிறருடைய குற்றம் பூதாகாரமாக நமக்குத் தோன்றுகிறது. அவர்களுடன் நம்மையும் சேர்த்துக் கொண்டு, 'குணத்தில் குற்றமற்றவர்கள் யாருமில்லை. அளவு ஒன்றிலேதான் வித்தியாசம்' என்ற முடிவுக்கு வரலாம். இந்தப் பேருண்மையை ஓரளவாவது நம் மனத்தில் பதிய வைத்துக் கொண்டால் அதிக மனக் கஷ்டப்பட வேண்டியதில்லை.

பெண்களாகிய நாம் ஒரு குடும்பத்தை விளங்கச் செய்ய வருகிறோம். ஒரு கணவனுடைய லக்ஷ்ய மனைவியாகவும், குழந்தைகள் பூஜிக்கும் அளவு உயர்ந்த தாயாகவும், மற்றவர்களுக்கு மதிப்புக்குரிய சகோதரியாகவும் இருக்கும் நிலையை வேண்டுகிறோம். அந்தச் சிறந்த லக்ஷ்யத்தின் முயற்சிதான் நம்முடைய சொல்லும் செயலுமாகும். அதற்குத் தேவையான ஆற்றல் நம்மிடம் இருக்கிறது.



எனவே கணவரைப் பற்றியும், மற்ற அன்புக்குரிய சகோதர சகோதரிகள், இதர உறவினர்கள், சிநேகிதர்கள் எல்லோரையும் பற்றியும் விட்டுக் கொடுத்து மூன்றாவது மனிதரிடம் பேசுவது தவறாகத்தான் முடியும். அப்படிச் சொல்லும் போது கொஞ்சம் மனம் ஆறுதல் அடைவது போலவும், மனச் சுமை குறைந்ததாகவும் தோன்றும். ஆனால் அது லாகிரி போன்றது. நாமும் அரை குறையாகத்தான் பிறரிடம் சொல்லுவோம். தாற்காலிகமான இந்த மனச் சாந்தி நல்லதல்லவென்பது தான் எனது தாழ்மையான அபிப்பிராயம். நம்முடைய மனக்குறைக்கும் அது நிரந்தரமான பரிகாரமாகாது. மனித சுபாவத்தில் அப்படிச் சொல்வதுதான் ஒரு ஆறுதல் எனக் கருதினால், நம்மைச் சேர்ந்தவர்களிடமுள்ள குறைபாடுகளைக் குற்றமாகச் சொல்லக் கூடாது. சொல்லும் முறை இருக்கிறது. சிலர் தன் வாய் வார்த்தையால் நம்முடைய நெஞ்சிலுள்ள அலைகளைக் கிளப்புவார்கள். பிறகு இரித்து, முறித்து, புது உருவம் கொடுத்து அதிகப்படுத்தி நம்மைச் சேர்ந்தவர்களிடமே சொல்லுவார்கள். அதனால் கஷ்டம்தான் நேரும். நம்முடைய இயற்கை சுபாவம் நல்லதாக இருந்து விட்டால் நன்மைதான். மாறாக இருந்தால் குடும்ப ஒற்றுமை, கட்டுப்பாடு, இவைகள் குன்றாமல் இருக்க மனத்துக்குச் சிறந்த பயிற்சி கொடுக்க வேண்டும். குடும்பத் தலைவியான நம்முடைய பொறுப்பு சுலபமானதல்ல. சுஜாதா! சில சமயம் மனம் மிகவும் சுமையாக இருப்பதாக நினைத்துத் தவிர்க்க முடியா விட்டால் அந்தரங்கமானவர்களிடம் சொல்லு. எல்லோரிடமும், எல்லாவற்றையும் சொல்லி மனத்தைக் குழப்பிக் கொள்ளாதே.

தர்மபுத்திரர் 'எங்களுக்குள் சண்டை வந்தால் நாங்கள் ஐந்துபேர்கள்; அவர்கள் நூறு பேர்கள். ஆனால் வெளி மனிதர்கள் சண்டைக்கு வந்தால் நாங்கள் நூற்று ஐந்து பேர்கள்' என்றார். இது நம்முடைய குடும்பத்துக்கு மிகவும் அவசியமல்லவா?

எனக்குத் தெரிந்த ஒரு அம்மாள் சதா ஒருவரைப் பற்றி ஒருவரிடம் குற்றம் சொல்லுவார். குழந்தைகள் முன்பாகவே இவ்வாறு நடந்து கொள்வார். கணவனைப் பற்றி வேலைக்காரியிடம் கூடக் குறைகூறுவார். அதனால் விபரீத பலன் ஏற்படுகிறது. இயற்கையாக அவர் குழந்தைகள் சகோதர பாசத்துடன் ஒற்றுமையாக இருப்பார்கள். அந்தம்மாள் குற்றம் சொல்லிச் சொல்லி, அவர்களுக்குள் ஒற்றுமை குலைந்து விட்டது.

பிறரிடம் குற்றம் காணும் சுபாவத்தையும், அப்படிக் கண்டெடுத்த குற்றங்களைப் பரப்புவதையும் விட்டு ஒழிப்பது நமக்கும் நல்லது; சமூகத்துக்கும் நல்லது.

இப்படிக்கு, பூமாதேவி

ஈழநாட்டுப் பிரயாணம் ⑥



நவரத்தினங்கள் சரித்திர வரலாற்றையே மாற்றி அமைத்து விடுமா? அதைப் பற்றிய கதைகளைச் சொல்லுமா?

"பேஷாகச் சொல்லும்" என்றார் வயது முதிர்ந்த பெரியவர்.

"இதெல்லாம் வெறும் பேச்சு" என்றான் நவீன நாகரிகம் படைத்த வாலிபன்.

வயது முதிர்ந்த பெரியவர் மிகப் பெரிய சரித்திர ஆசிரியர்; ஆராய்ச்சியாளர். நாகரிகம் படைத்த வாலிபனோ பட்டதாரி.

"நான் படித்த பள்ளிக்கூடங்களிலோ, கல்லூரியிலோ நவரத்தினங்கள் சரித்திர வரலாற்றையே மாற்றி அமைத்து விட்டதாகப் படித்ததில்லை" என்று வாதாடினான் வாலிபன்.


பெரியவர் அவனுடன் தொடர்ந்து வாதாட விரும்பவில்லை. "நவரத்தினங்களில் சிறப்பானது வைரம் என்பதைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீரா?" என்றார்.

"கேள்விப்பட்டிருக்கிறேன்."

"நவரத்தினங்கள்தான் சரித்திர வரலாறுகளை எப்படி மாற்றியிருக்கின்றன? நவரத்தினங்களில் சிறந்த வைரங்களுக்காகத்தான் எத்தனை அக்கிரமங்கள் நடைபெற்றிருக்கின்றன? சகோதரர்களைக் கொன்றிருக்கின்றன. பெரிய குடும்பங்களைச் சின்னாபின்னப் படுத்தியிருக்கின்றன; ஆலயங்களையும் விக்கிரகங்களையும் தகர்த்தெறிந்திருக்கின்றன. ஒரு பாதகம் கூடப் பாக்கியில்லாமல் எல்லாப் பாதகங்களையும் புரிந்திருக்கின்றன."

"ஆ. அப்படியா!" என்று வாலிபன் பிரமித்துப் போய்க் கேட்டான்.

"தம்பி! சற்று உட்கார்! இந்தக் கதையைக் கேள்" என்று அந்த வயது முதிர்ந்த பெரியவர் கதைசொல்லுவதற்கு ஆரம்பித்தார்.



******

மைசூர் நகருக்குப் பக்கத்தில் ஸ்ரீரங்கப் பட்டணம் என்று ஒரு ஊர் இருக்கிறது. ஒரு சமயம் இந்த ஸ்ரீரங்கப் பட்டணம் மைசூர் சமஸ்தானத்தின் தலைநகரமாக இருந்தது. அந்த நகரம் இப்போது கேட்பாரற்றுக் கிடக்கிறது. இருந்தாலும் அதைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் எனக்கு ஏற்பட்டது. ஹைதர் அலியும் திப்பு சுல்தானும் கொலுவிருந்து அரசு புரிந்த இடம் அல்லவா அது? அந்த வீர புருஷர்களின் காலடிபட்ட பூமியை நானும் கொஞ்சம் மிதிக்க வேண்டும் என்று எனக்கு நீண்ட நாட்களாகவே ஆசை. அந்த ஆசை ஒரு சமயம் நிறைவேறிற்று.

ஹைதர் அலி இந்துக்களைப் பலாத்காரமாக மொட்டையடித்து இஸ்லாம் மதத்தில் சேர்த்ததாகச் சரித்திரப்புத்தகங்களில் படித்ததுண்டு. அப்படி எல்லாம் நடந்திருக்க முடியாது என்பதை ஸ்ரீரங்கப் பட்டணத்துக்குப் போனபோது புரிந்து கொள்ள முடிந்தது. காரணம் ஹைதர் அலியும், திப்புசுல்தானும் வாழ்ந்து அரசுபுரிந்து போரிட்டு உயிர்துறந்த இந்த ஸ்ரீரங்கப்பட்டணத்தில் இரண்டு பெரிய கோயில்கள் இருக்கின்றன. ஒன்று பிரசித்தி பெற்ற ரங்கநாதர் கோயில்; மற்றொன்று சிவன் கோயில். இந்தக் கோயில்கள் ஏறக்குறைய ஆயிரம் வருஷங்களுக்கு முன்னால் கட்டப்பட்ட கோயில்கள். அப்படிப்பட்ட இடத்தில் தம்முடைய சொந்த ஆதிக்கத்தில் இருந்து வந்த அந்தப் புராதனக்கோயில்களை இடிக்காமல் விட்ட ஹைதர் அலியும், திப்பு சுல்தானுமா இந்துக்களைப் பலாத்காரமாய் இஸ்லாம் மதத்தில் சேர்த்திருக்கப் போகிறார்கள்! எனக்கென்னவோ அப்படி நடந்திருக்கும் என்று தோன்றவில்லை.

ஹைதர் அலி ஸ்ரீரங்கப் பட்டணத்தை ஆண்டுகொண்டிருந்த காலத்தில் அங்கிருந்த சிவன் கோயிலுக்கு ஏராளமான சொத்து இருந்தது. சிவபெருமானின் கிரீடத்தில் நவரத்தினங்கள் இழைக்கப் பெற்றிருந்தன. சிவபெருமானின் நெற்றிக் கண்ணில் 'பளீர்' என்று ஒளி வீசித் திகழும் அற்புதமான வைரம் பொறிக்கப்பட்டிருந்தது.

ஹைதர் அலியின் அன்பைக் கவர்ந்த பல பிரஞ்சுக்காரர்கள் அவனுடைய சர்க்காரில் இருந்தார்கள். அவர்கள் ஹைதரிடம் அன்பு காண்பிப்பது போல அவனிடம் உள்ள செல்வங்களையெல்லாம் சமயம் பார்த்துக் கொள்ளை கொண்டு போவதற்காகவே திட்டமிட்டுக் கொண்டிருந்தனர்.

ஒரு பிரஞ்சுக்காரன் கண்ணில் சிவபெருமானின் நெற்றிக் கண்ணில் சுடர் விட்டு மின்னிய வைரம் பட்டு விட்டது. அதன் ஜோதி ஒளி

சரித்திரத்தை மாற்றிய



யில், கடர்ப் பிழம்பில் மயங்கிப் போய் விட்டான். இதை எப் படியாவது கொள்ளை கொண்டுபோய்விடத் தீர்மானித்தான்.

பக்தனைப் போல் வேஷமணிந்து சதா சர்வகாலமும் சிவ பெருமானின் வைரத்தைப் பார்த்துக் கொண்டே அமர்ந்து விட்டான். அவனுடைய வஞ்சக எண்ணத்தை அறியாத கோயில் அதிகாரிகள், ஒரு பிரஞ்சுக்காரன் மும்மூர்த்தியின் சன்னதியில் வந்து வழிபடுகிறானே என்று அவனுக்கு எல்லா விதமான வசதிகளையும் செய்து கொடுத்தனர்.

ஒரு நாள் எல்லாருடைய கண்ணிலும் மண்ணைத் தூவி விட்டு எம்பெருமானின் நெற்றிக்கண்ணில் ஜகஜ்ஜோதியாகப் பிரகாசித்துக் கொண்டிருந்த வைரத்தைக் கொள்ளையடித்துக் கொண்டு மறைந்து விட்டான் அந்த வஞ்சகப் பிரஞ்சுக்காரன்.

ஈசுவரனின் நெற்றிக் கண் வைரத்தைக் களவாடிய பிரஞ்சுக்காரன் அதை நீண்டகாலம் அனுபவிக்க முடியவில்லை. அவன் ஏறிச் சென்ற கப்பல் தலைவன் பிரிட்டிஷ்காரன் அவனிட மிருந்து அதை அபகரித்துக் கொண்டு அவனைக் கைலாயத் துக்கே அனுப்பி விட்டான். பிறகு வைரம் பல கைகள் மாறின. கடைசியில் அந்த வைரத்தை ஓர்லோப் என்ற ருஷ்ய இளவரசன் பதினைந்து லட்சம் ரூபாய் கொடுத்து வாங்கினான்.

ஒளி வீசித் திகழும் அந்த வைரத்தை எடுத்துக் கொண்டு ருஷ்யாவுக்குச் சென்றான். ருஷ்யாவின் ஆட்சி பீடத்தில் அப் பொழுது ராணி இரண்டாம் காதரைன் அமர்ந்திருந்தாள். அவள் மலர்க் கரத்தில் தான் வாங்கிய வைரத்தைக் கொடுத்து மகிழ்வு கொண்டான் இளவரசன் ஓர்லோப்.

ஓர்லோப் வாங்கி வழங்கிய வைரமானதால் அதற்கு 'ஓர் லோப் வைரம்' என்ற பெயர் சூட்டினார்கள். அந்த வைரம் என்றைய தினம் ருஷ்ய அரண்மனைக்குள் நுழைந்ததோ அப்பொழுதிருந்தே அங்கு முடியாட்சி ஆட்டங்காண ஆரம்பித்து விட்டது. ஜாரின் காலத்தில் மன்னர் ஆட்சி மறைந்து மக்கள் ஆட்சி மலர்ந்தது. நமது ஸ்ரீரங்கப் பட்டணத்து சிவனின் நெற்றிக் கண் வைரம் இன்றைய தினம் மாஸ்கோவில் கிரெம்லின் மாளிகையில் தொல் பொருள் கலைப் பொருளாகக் கொலுவீற்றிருக்கிறது.

''அடாடா! இந்த வைரத்தின் கதை மிக அற்புதமாக இருக்கிறதே! ருஷ்யப் பொது உடைமைக்கு வித்திட்டது நமது தமிழ்நாட்டு வைரம்தானா?'' என்று வியப்போடு கேட்டான் வாலிபன்.

''நவரத்தினங்கள் சரித்திர வரலாற் றையே மாற்றி அமைக்குமா? அதைப் பற்றிய கதைகளைச் சொல்லுமா, இல் லையா?'' என்று கேட்டார் பெரியவர்.

''கதையா, இல்லை. உண்மைச் சரித்திர வரலாற்றையே அல்லவா சொல்லுகிறது!'' என்று மிகுந்த உணர்ச்சி யோடு கூறினான் வாலிபன்.

''இன்னொரு அதிசயமான, பல ரூடும் பங்களைக் கெடுத்த வைரத்தின் கதை யைக் கேள். இது மிகப் பயங்கரமான கதை!'' என்று ஆரம்பித்தார் பெரியவர்.

பிரஞ்சுக் காரர்களுக்குத்தான் வைரத்தின்மீது அலாதியான மோகம். தவர்னியா என்ற பிரஞ்சுக்காரப் பிரபு ஒருத்தன் நம் பாரத நாட்டுக்கு வந்து



நவரத்தினங்கள்



பகீரதன்

பல ஆயிரம் ரூபாய்களை அள்ளிக் கொடுத்து ஒரு வைரத்தை விலைக்கு வாங்கினான். அந்த வைரம் அவன் கைக்குப் போனதுமே அவன் செல்வம் கரைய ஆரம்பித்து விட்டது. பெரிய கடனாளியானான். கடைசியில் அந்த வைரத்தை விற்றுக் கடனை அடைத்தான். மீண்டும் பொருள் திரட்டும் ஆசையுடன் இந்தியாவுக்கு வரும்போது வழியிலேயே மாண்டு மறைந்து போனான்.

அதே வைரத்தை வாங்கிய பதினாலாவது லூயி என்ற மன்னன் தம் காதலி மோந்தஸ்பான் என்னும் அழகியின் கழுத்தில் அந்த வைரத்தைச் சூட்டி மகிழ்ந்தான். அந்த வைரம் கிடைத்த சில நாட்களிலேயே அவள் அரசனின் வெறுப்புக்கு ஆளாகிவிட்டாள்.

அந்த வைரத்தை அவளிடமிருந்து இரவலாக வாங்கிச் சென்றான் பூகே என்னும் வீரன். உடனே அவன்மீது ராஜத்துவேஷக் குற்றம் சாட்டிக் கொலை செய்யப்பட்டான்.

இந்த அற்புதமான வைரத்தின் சொந்தக்காரனான மன்னன் பதினாலாவது லூயியும் அவன் மனைவி ராணி மேரி அன்த்வானெத்தும் கியோதீனில் வெட்டுண்டார்கள்.

பிரஞ்சுப் புரட்சியின்போது அந்த வைரத்தைத் திருடிய கள்ளர்கள் கொலை செய்யப்பட்டார்கள். அந்தக் கள்ளர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி அந்த வைரத்துக்குப் பட்டை தீட்டிக் கொடுத்த ரத்தினத் தச்சர் உண்ண உணவின்றி மாண்டு போனார்.

கள்ளர்களிடமிருந்து மேற்படி வைரத்தைத் திருடிய பொற்கொல்லரின் புதல்வன் தற்கொலை புரிந்து கொண்டான்.

கடைசியில் அது ஹோப் என்ற அமெரிக்கப் பிரபுவின் கைக்கு வந்தது. அந்த அமெரிக்கரும் கடனாளியாகி அதை வேறொருவனுக்கு விற்று விட்டார்.

பிறகு அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்கு வந்தது இந்த வைரம். இங்கிலாந்தில் உள்ள ஹோப் என்ற கோமகவரன் அந்த வைரத்தை வாங்கினான். வைரத்தை வாங்கிய சில ஆண்டுகளிலேயே கோமகவரன் ஹோப் பரம ஏழையானான். அவன் மனைவி மேயோஹே அவனை விட்டு ஓடிப் போய் விட்டாள்.

பின்னர் அது லோரன்ஸ் லாத்பூத் என்ற நடிகையிடம் வந்தது. அந்த வைரத்தை மார்பில் தரித்துக் கொண்டு நடன மண்டபத்தில் உல்லாசமாக நடனமாடிக் கொண்டிருந்தாள் லோரன்ஸ். வைரத்தின் ஒளியைக் கண்டு எல்லாரும் பிரமித்தனர். இந்தச் சமயத்தில் அவளால் புறக்கணிக்கப்பட்ட அவள் காதலன் அவளைக் கட்டுக் கொன்றான்.

அவள் மறைவுக்குப் பின் இந்த வைரத்தைத் துருக்கி மன்னன் அப்துல் ஹமீதுக்கு ஒரு கிரேக்கன் விற்றான். வைரத்தை விற்ற பணத்தை உபயோகிக்காமலே அந்தக் கிரேக்கனும் அகால மரணம் அடைந்தான்.

இந்த வைரத்தை அணிந்திருந்த அப்துல் ஹமீதின் காதலி ஸல்மாகபாயா அரண்மனையிலேயே சுடப்பட்டுக் கொலையுண்டாள். அப்துல் ஹமீதோ தன்னுடைய ராஜ்யத்தையே இழந்து தனியாய்த் தவித்தான்.

எதுவார் [illegible]க்மகின் என்ற அமெரிக்கப் பிரபு இந்த வைரத்தை ஆறு லட்சம் டாலருக்கு வாங்கினார். அந்த வைரம் வந்த சில நாட்களுக்கெல்லாம் அப் பிரபுவின் முதல் மகன், செல்வப் புதல்வன் ஸ்வயசலனி மோட்டாரில் அடிபட்டு அநியாயமாய் இறந்தான்.

ஆனால் அந்த வைரத்துக்கு இப்பொழுது கூடப் பல லட்சம் ரூபாய் மதிப்பிடுகிறார்கள். என்னே வைரத்தின் மதிப்பு !

இந்தக் கதையைக் கேட்டதும் வாலிபனின் தலை சுற்ற ஆரம்பித்து விட்டது. ''ஆ! என்ன பயங்கரம்! என்ன பயங்கரம்! மனிதர்கள் பைத்தியம் பிடித்துக்கிடக்கிறார்கள்!'' என்று அலறினான் வாலிபன்.

பெரியவர் நிதானமாகச் சிரித்தார். ''இவ்வாறு நவரத்தினங்கள் ஒவ்வொன்றும் எத்தனை எத்தனையோ சரித்திர வரலாறுகளை மாறிய கதைகளைச் சொல்லும்'' என்றார்.

*** *** ***


இந்தக் கதையை எனக்கு யார் சொன்னது தெரியுமா? ஈழ நாட்டில் உள்ள ரத்தினபுரியில் பார்த்த நவரத்தினங்கள் தான். நவரத்தினங்கள் பலப்பல வர்ணங்களில் ஒளி விட்டுப் பிரகாசிக்கும்; பேசும்; நட்பு கொள்ளும்; கதைகள் கூறும் என்றெல்லாம் கலு கங்கையின் கரையில் இருக்கும் ரத்தினச் சுரங்கத்தைப் பார்த்து விட்டு அங்குள்ள கமுகுத் தோட்டத்தின் குளிர்ந்த நிழலில் உட்கார்ந்த போது நாங்கள் அறிந்தோம். மேற்படி கதையை என்னுடன் வந்த மட்டக்களப்பு நண்பர் ஒருவர் கூறினார். வாசக நேயர்கள் பலரும் இந்தக் கதைகளைக் கேட்டிருக்கலாம். ஆனாலும் ரத்தினபுரியில் உள்ள ரத்தினச் சுரங்கத்தைப் பார்த்தபோது தானே அது நினைவுக்கு வந்தது. மட்டக்களப்பு நண்பர் அவ்வளவு சுவையுடன் இந்தக் கதைகளைக் கூறுவதும் சாத்தியமாயிற்று. எனவே நவரத்தினங்கள் சரித்திரத்தை மாற்றி விடும் என்று கூறுவதில் என்ன தவறு?

நவரத்தினங்கள் மாற்றி அமைத்த சரித்திர சம்பவம் நிறைந்த வரலாறுகளைக் கூறும் அதிசயமான ரத்தினச் சுரங்கத்துக்குப் போக விருப்பமுள்ளவர்கள் ரத்தினபுரிக்குச் செல்ல வேண்டும். ரத்தினபுரி கொழும்பு நகரிலிருந்து ஐம்பத்தாறு மைல். கொழும்பு நகரிலிருந்து பஸ்ஸிலும் செல்லலாம், ரயிலிலும் போகலாம், வசதி இருப்பவர்கள் காரிலும் செல்லலாம். ரயிலில் செல்லுவதை விட, பஸ்ஸில் போவதைவிடக் காரில் பிரயாணமாவது தான் சௌகரியமானது.

ரத்தினபுரிச் சாலை

ரத்தினபுரியைப் பற்றி யாத்திரைப் புத்தகங்களில் படித்தால், ரத்தினபுரி மலைப் பிரதேசம் என்றும் சப்ரகமுவ மாகாணத்தின் தலைநகரம் என்றும் காணலாம். ரத்தினபுரிக்குச் சென்றால் இது உண்மை என்பதையும் அறிந்து கொள்ளலாம். உண்மையில் பல இடங்கள் யாத்திரைப் புத்தகத்தில் எழுதியிருப்பதற்கு எவ்வளவோ மாறாக இருக்கின்றன. அதனால் தான் ரத்தினபுரியைப் பற்றி எழுதியிருந்தது உண்மை என்று சொல்ல வேண்டியதாயிற்று.

மாலை சுமார் மணி ஐந்துக்குக் கொழும்பு நகரிலிருந்து ரத்தினபுரியை நோக்கிக் கிளம்பி



அக்கொடிய
இருமலை
நிறுத்த

பெப்ஸ்

உபயோகியுங்கள்

இருமல், ஜலதோஷம், தொண்டைப் புண், பிராங்கைடிஸ், இன்ப்ளுயன்ஸா, மற்றும் இதர தொண்டை, மார்பு உபாதைகள், ஹிருதயத்தையும், சுவாசப்பைகளையும் அபாயத்திற்குள்ளாக்குகின்றன. இவற்றிற்கு பெப்ஸ் உட்கொண்டு உடனே நிவாரணம் பெறுங்கள். பெப்ஸிலுள்ள குணமளிக்கும் மருந்து சத்துகள் இருமலை நிறுத்தி, ரணத்தை ஆற்றுகின்றன. மேலும் இவைகள் எரிச்சலுக்கு ஹிதமளிப்பதுடன், தீங்கிழைக்கும் கிருமிகளை நாசம் செய்கின்றன. குழந்தைகளும் வயோதிகர்களும் உபயோகிக்கலாம். தீங்கு விளைவிக்கும் மருந்துகள் இதில் இல்லை.



PEPS

பெப்ஸ் தொண்டை, மார்பு உபாதைகளுக்கு சமனமூட்டும் வில்லைகள்.

FPY-39-TAM

சோல் ஏஜண்டுகள் :

தாதா அண்டு கம்பெனி
86, நைனியப்ப நாயக் தெரு. சென்னை—3

சைபால்

CIBOL

வெட்டுக்காயம், சொறி
சிரங்கு, வேனல் கட்டி
தீப்பட்ட புண், முகப்பரு
கரப்பான், சேத்துப் புண்
முதலிய வியாதிகளைப் போக்குவதில்
கைகண்ட களிம்பு

★

தயாரிப்பவர்கள் :

**தி சௌத் இந்தியன்
மான்யுபாக்சரிங் கம்பெனி**
மதுரை

சுலேகா

பவுண்டன் பேனா மை

இப்பொழுது 8 வித கலர்களில்
கிடைக்கும்

ராயல்–புளு, புளு–பிளாக், கறுப்பு
சிவப்பு, நல்ல சிவப்பு, வயலட்
பழுப்பு மற்றும் பச்சை



Contains SOLVENT "S-50"

சுலேகா ஒர்க்ஸ் லிட்.
கல்கத்தா - டெல்லி - பம்பாய் - சென்னை



சென்னை தங்கசாலை வீதியில் உள்ள இந்து தியாலாஜிகல் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் திரு பாலகிருஷ்ண ஜோஷி அவர்களால் எழுதப்பட்ட 'நடைமுறைக் கல்வி' என்னும் புத்தகத்தின் வெளியீட்டு விழா சென்ற ஐந்தாம் தேதி அண்ணாமலை மன்றத்தில் சிறப்பாக நடைபெற்றது. இந்த வைபவத்துக்கு டாக்டர் ஸி. பி. ராமசாமி ஐயர் தலைமை வகித்துத் திரு ஜோஷியின் கல்வித் தொண்டையும், சிறந்த முறையில் புத்தகத்தை வெளியிட்டுள்ள 'லிட்டில் பிளவர்' புத்தக ஸ்தாபனத்தையும் பாராட்டினார். விழாவில் திருமதி பி. சுந்தரம், திருவாளர்கள் டி. வி. சீனிவாசவரதன், கே. நரசிம்மாச்சாரி, வி. கிருஷ்ணசாமி சர்மா, பூஜ்யர் தம்புராமி ஆகியோர் திரு பாலகிருஷ்ண ஜோஷியின் சேவைகளைப் பாராட்டிப் பேசினார்கள். ஆசிரியர் சங்கத்தின் சார்பாக, திரு ஜோஷிக்குப் பொன்னாடை போர்த்தினார்கள். எல்பினஸ்டோன் புத்தக வியாபாரிகள் சார்பில் திரு லோகநாத முதலியார் ஒரு வரவேற்பிதழ் வாசித்தளித்தார். கடைசியாக, திரு ஜோஷி தமக்கு அளித்த பாராட்டுதலுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார். மேலே: திரு ஸி. பி. ராமசாமி ஐயருக்கு அருகில் அமர்ந்திருப்பவர்தான் திரு பாலகிருஷ்ண ஜோஷி.

ளேம். கொஞ்ச தூரம் வரையில் நகருக்குள் நெருக்கமான ஜனக் கூட்டத்துக்கு மத்தியில் மோட்டார் போயிற்று. இரு புறங்களிலும் கடைகளில் தமிழ் நாட்டில் காண முடியாத ஒரு காட்சியைக் கண்டேன். ஒவ்வொரு கடையிலும் குலை குலையாகச் செவ்விளநீர்க் காய்கள் கட்டித் தொங்கவிட்டிருந்தன. அந்த இளநீர்க் குலைகளைப் பார்ப்பதே மனத்துக்குக் குளுமையாக இருந்தது. இளநீரைச் சாப்பிட்டால் எப்படி இருந்திருக்குமோ! பிறகு நகர எல்லையைத் தாண்டி அழகான தார் ரோட்டில் வளைந்தும், நெளிந்தும் மேல் நோக்கி ஏறிக் கொண்டே போயிற்று. வெகு சீக்கிரத்தில் சுற்றிலும் உள்ள காட்சிகளின் தோற்றம் மாறிவிட்டது. பசுமையான மரங்கள், அடர்த்தியான பாக்குத் தோட்டம், ரப்பர் தோட்டம் எல்லாம் தோன்றின. இடையிடையே நெருக்கமான பலா மரங்களும் தென்பட்டன.

பலா மரங்களில் பலாக் காய்கள் காய்த்துக் குலுங்கும் அற்புதமான காட்சியை எழுத்தில் வர்ணிப்பது முடியாத காரியம். அப்படியே வர்ணித்தாலும் நேயர்களின் மனக்கண் முன்னால் அந்தப் பலாமரங்களைக் கொண்டு வருவது அசாத்தியம்.

அதோ பலாக் காய்கள் காய்த்துக் குலுங்கும் சிறிய பலா மரம் தோன்றுகிறது. அதன் அருகில் போய் நின்று அண்ணாந்து பார்த்தாலோ கழுத்து வலி எடுத்துப் போகிறது. அவ்வளவு உயரமான மரங்கள்.

இதிலே என்ன இப்படிப் பிரமாதமான விசேஷம்? நம் ஊரில் பலா மரங்கள் இல்லையா? பலாக்காய்கள் இல்லையா?

நம் ஊர்ப் பலா மரங்களில் இல்லாத ஒரு அபூர்வமான விசேஷம் இங்கு உண்டு.

பலாவிலேயே ஈரப் பலா என்று ஒரு சாதிப் பலா இங்கு ஏராளமாக இருக்கிறது. அது அடி மரத்திலிருந்து மரம் முழுதும் காய்த்துக் குலுங்குகிறது. சிங்கள மக்களுக்குப் பலாக் காய்தான் முக்கியமான உணவு. பலாக் காயை மேலே தோலைச் சீவி எடுத்து விட்டுத் துண்டு துண்டாக வெட்டிச் சமைத்து நாம் சாதம் சாப்பிடுவது போலச் சமைத்துச் சாப்பிடுகிறார்கள். பலாக்காய் சாப்பிடுவதால் தானோ என்னவோ அங்குள்ள பெண்கள் கட்டுமாறா உடல் உறுதியுடனும், அடர்த்தியான கூந்தலுடனும், கடைந்தெடுத்த தந்தப் பதுமைபோலும் விளங்குகிறார்கள்!

சிங்களத்தில் 'தெல்' என்று சொல்லும் ஈரப் பலாவை ஈழத்துக்கு முதன் முதலில் போர்ச்சுகீசியர்கள்தான் கொண்டு வந்தார்களாம். சிங்களவர்களை அடிமை கொள்வதற்காகப் போர்ச்சுகீசியர் இலங்கைக்கு இந்தப் பலாவைக் கொண்டு வந்ததாகச் சொல்லிக் கொள்கிறார்கள். இந்தப் பலாவைச் சாப்பிட்டால் ஒருமாதிரி அதற்கு அடிமையாகி விடவேண்டியதுதானாம். ஈரப் பலா அப்படி ஒன்றும் சுவையாகவும் இல்லை. ஆனால் எப்படியோ சிங்கள மக்கள் இதற்கு அடிமையாகி விட்டார்கள். இந்தப் பலாவின் கதையை ஒரு சிங்களவரே என்னிடம் கூறினார். மிகுந்த பெருமையுடன் கூறினார். இதில் என்ன தான் பெருமை இருக்கிறதோ!

இதுபோன்ற பலாத் தோப்புக்கள், பாக்குத் தோப்புகள், நெல் வயல்கள் எல்லாவற்றையும் கடந்து மோட்டார் பறக்கிறது. நடு நடுவில் சிறு சிறு கிராமங்கள் தென்படுகின்றன. அந்தச் சின்னச் சின்ன கிராமங்களிலும் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. மாலைவேளை

யானதால் குழந்தைகள் பள்ளிக்கூடம் விட்டுக் கூட்டம் கூட்டமாக வீட்டுக்குச் செல்கின்றனர். சிறுவர்கள் ஆணும் பெண்ணும் ஒரே மாதிரியானஉடை அணிந்து சுத்தமாகக்காட்சி தருகிறார்கள். இங்கு வழியில் காணும் இயற்கைக் காட்சிகளைக் காண்பதற்குக் காலால் நடந்து செல்லுவதுதான் சிறந்த வழி. இயற்கையின் அழகைக் கண்டு அனுபவிக்கவேண்டுமென்றால் மோட்டாரில் செல்லக் கூடாது.

ஒரு இடத்தில் மோட்டாரை விட்டு இறங்கிச் சற்றுத் தூரம் நடந்து செல்லும் வாய்ப்பு கிட்டியது. இந்த இடம் மலைப்பாங்கான இடம். ஜம்மு காஷ்மீரத்தில் சில இடங்களைப் பார்ப்பதுபோலவே இருந்தது. மேடு படிப்படியாக இறங்கும் நெல் வயல்கள். மலைகள் இடுக்கு வழியாகத் தொலைவில் தெரியும் நீலவானம். எந்தப் பக்கமும் மலையும், தோட்டமும்தான். இந்த நாட்டில் இப்போதுள்ள அரசியல் நிலைமைபோல வானத்திலும் தெளிவின்மை. சோழநாடு போல் இருந்தால் இதுபோன்ற மாலை நேரத்தில் ஜிலு ஜிலு வென்று காற்று வீசும். பச்சைப் பசேல் என்ற பயிர்கள் அழகாக ஆடி அசையும். இங்கே காணும் மாலை நேரம் நாம் பழகியே அறியாத விசித்திரமான அன்னிய மொழியைப் போல்தான் இருந்தது.

*** *** ***

ரத்தினபுரியை அடைந்ததும் அங்குள்ள வாடி வீட்டுக்குச்சென்றோம். 'ரெஸ்ட்ஹவுஸ்' என்று ஆங்கிலத்தில் கூறுவதைத்தான் ஈழத்தில் வாடி வீடு என்றும் ஓய்வு விடுதி என்றும் சொல்லுகிறார்கள். மலை உச்சியில் அமைந்துள்ள இந்த வாடி வீட்டில் ஜாகை வசதி, சாப்பாட்டு வசதி எல்லாம் குறைவின்றி இருந்தன. ஆனாலும் எங்களுடன் வந்த மட்டக்களப்பு நண்பர் இங்குள்ள தமிழ் அன்பர் வீட்டில்தான் இரவு விருந்துண்ண வேண்டும் என்று எங்களை வற்புறுத்தினார்.

அவருடைய அன்புக் கட்டளைக்கிணங்க ஏழெட்டுத் தமிழ் நண்பர்கள் சேர்ந்து தங்கி இருந்த 'பாரி இல்லம்' என்ற பங்களாவுக்குச் சென்றோம். பாரி இல்லத்தில் உள்ள தமிழ் நண்பர்கள் எங்களை அகமும் முகமும் மலர வரவேற்று உபசரித்தார்கள். ஒவ்வொரு இளைஞரும் எங்களை வந்து கவனித்துக் கொண்டார்கள். அங்கிருக்கும் தமிழ் இளைஞர்கள் எல்லாரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் வேலை பார்த்து வருகிறவர்கள். தங்கமான குணம் படைத்தவர்கள். 'தமிழ்' என்றால் 'அமிழ்தம்' என்று கூறி ஆனந்தமடைபவர்கள். ஈழநாட்டில் மீண்டும் தமிழ் அரசியல் மொழியாகவும், தமிழர்கள் மீண்டும் அமைச்சர்களாகவும் வரவேண்டும் என்று கனவு கண்டு வருகிறார்கள். அவர்கள் கனவு விரைவில் நிறைவேறியே தீரும் என்பதை அவர்களுடைய உற்சாகத்தில் இருந்தும் உணர்ச்சி நிறைந்த சம்பாஷணையில் இருந்தும் தெரிந்து கொள்ள முடிந்தது.

இரவு வெகு நேரம் ஆகிவிட்ட படியால் எல்லாருக்கும் நல்ல பசி உண்டாகிவிட்டது. அது காரணமாக, சாப்பாட்டின்போது உற்சாகம் அபரிமிதமாயிற்று. ஏதேதோ பல மாதிரியான கறிகாய்ப் பதார்த்தங்கள் எங்கள் சாப்பாட்டுக்காகக் காத்திருந்தன. பாரி இல்லத்துத் தமிழ் நண்பர்களே எடுத்து எல்லாவற்றையும் பரிமாற ஆரம்பித்தனர்.

என்னுடன் வந்திருந்த நண்பர் ''அதோ ஒரு தட்டில் ஏதோ இருக்கிறதே, அதைக் கொஞ்சம் வையுங்கள்!'' ''இங்கே என்னமோ இருக்கிறதே, இதைக் கொஞ்சம் வையுங்கள்'' என்றெல்லாம் கேட்டு வாங்கிக் கொண்டார். ஆனால் சாதமும், குழம்பும், ரஸமும், கறிகாய்களும் எல்லாமுமே நாவுக்கு ஒரேமாதிரியான ருசியாகத்தான் இருந்தன.

சாப்பாடு எல்லாம் முடிந்த பிறகு யாழ்ப்பாண நண்பர்களிடம் ''சாதம், ரசம், குழம்பு எல்லாம் ஒரே மாதிரியான சுவையாக இருக்கின்றனவே! ஏன்?'' என்று கேட்கலாம் என்று எண்ணிச் சாப்பாட்டைப் பற்றிய பேச்சை எடுத்தேன்.

பாரி இல்லத்தில் இருந்த ஒரு தமிழ் அன்பர் என்னைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார். ''ஏன் ஐயா! உங்களிடம் ஒன்று கேட்கலாம் என்று எண்ணி இருந்தேன். தமிழ் நாட்டுக்கு வந்திருந்தபோது சில நண்பர்கள் வீட்டில் சாப்பிட்டேன். எதைச் சாப்பிட்டாலும் காரம், மணம், ருசி ஒன்றும் இல்லாமல் எல்லாம் ஒருமாதிரி இருக்கின்றனவே, அது ஏன்?'' என்று கேட்டு வைத்தார்.

எனக்கு ஒரு கணம் மூச்சே நின்று போய் விட்டது. நான் அவரிடம் கேட்க எண்ணி இருந்த விஷயத்தைக் கேட்க விரும்பவில்லை. ஒவ்வொரு தேசத்துச் சாப்பாடும் அந்தந்த தேசத்து மக்களின் பழக்கம் என்ற முடிவுக்கு வந்தோம்.

*** *** ***

பேச்சு மீண்டும் தமிழைப் பற்றியும் தமிழ் நாட்டைப் பற்றியும் திரும்பியது. அவர்களுடன் நீண்ட நேரம் சம்பாஷித்துக் கொண்டிருந்ததிலிருந்து ஒன்று நிச்சயமாயிற்று. ஈழ நாட்டுத் தமிழர்கள் எதில் எப்படி இருந்தாலும் தமிழ் மொழியைப் போற்றுவதில் எல்லாரும் ஒன்றுபட்டு இருப்பார்கள் என்பதுதான். இது எவ்வளவு மகிழ்ச்சியைக் கொடுக்கும் விஷயம் என்பதைச் சொல்ல வேண்டுமா?

கடைசியில் ''காலையில் பொழுது புலருவதற்குள்ளாகவே இரத்தினபுரியில் இருந்து புறப்படலாம் என்று இருக்கிறோம். ஆகையால் இப்பொழுதே உங்களிடமிருந்து விடைபெற்றுக் கொள்கிறோம்'' என்று கூறி நண்பர்களிடம் விடைபெற முயன்றேன்.

''அதெல்லாம் முடியாது. நாளையதினம் இங்குள்ள இரத்தினச் சுரங்கத்தையும் ரத்தினபுரி நகரையும் பார்த்து விட்டுத்தான் போக வேண்டும்'' என்று வற்புறுத்தினார்கள்.

பாரி இல்லத்து நண்பர்கள் வற்புறுத்தலுக்கு இணங்கி ரத்தினபுரி நகரை விட்டுக் காலையிலேயே புறப்படாமல் இருந்தது எவ்வளவு நல்லதாய்ப் போயிற்று என்பதை ரத்தினச் சுரங்கத்தைப் பார்த்த பிறகுதான் உணர்ந்து கொள்ள முடிந்தது.

நாளைக் காலையில் ரத்தினச் சுரங்கத்தையும் அதிலிருந்து ரத்தினங்களை எப்படி எடுக்கிறார்கள் என்பதையும் பார்ப்போம். (தொடரும்)

ஜனவரி மாதப் போட்டியில் நூறு ரூபாய் பரிசு பெற்ற கதை

அம்மா


பானு கன வேகமாக மாடியி லிருந்து இறங்கினுள். 'இன்று எப்படி யும் இதற்கு முடிவு கட்டி விடவேண்டும். மனைவியை அனுசரித்து நடக்காத புருஷனிடம் என்ன வாழ்வு வேண்டிக் கிடக்கிறது? இவர் சொல்வதுபோலவே நான் நடந்து கொள்ள வேண்டுமாமே! பார்க்கலாம்.'


''அம்மா! இன்றிரவு என்ன சமைப்பது?'' என்று கேட்டுக் கொண்டே பானுவிடம் வந்தார் சமையல்காரக் கிழவர் வேம்பு.

பானுவுக்குக் கோபம் பொத்துக் கொண்டுவந்தது. ''சமையலைப் பற்றி என்னைக் கேட்காதீர்கள். மாடியில் இருக்கிறுரே. அவரைப் போய்க் கேளுங்கள். இனி இந்த வீட்டுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை'' என்றுள்.

வேம்புவுக்கு இதெல்லாம் பழக்கம் தான். பானுவுக்கு விவாகமாவதற்கு முன்பே இந்த வீட்டில் இருப்பவர். இதோ, இப்பொழுது பானு மூன்று செல்வக் குழந்தைகளுக்குத் தாயாக இருக்கிறுளே! சொல்லப் போனுல் பானுவின் கணவன் மூர்த்தி வேம்புவின் கையிலேயே வளர்ந்தவன்தான்.

மூர்த்தியின் தந்தை அவனுடைய மூன்ருவது வயதிலேயே இறந்து விட்டார். தாய் காமாட்சி அவனை எடுத்து வளர்ப்பதில் அவ்வளவாகக் கஷ்டமடையவில்லை. சொத்து நிறையக் கிடந்தது. மகனின் படிப்புக்காகச் சென்னையிலேயே தங்கி விட்டாள். ஆனுல் அடிக்கடி கிராமத்துக்குச் சென்று நிலங்களைப் பார்த்துவிட்டுவர வேண்டியிருந்தது. அது சமயம் மக





எஸ். ரங்கநாயகி

னைத் தனியாக வீட்டில் வைத்து விட்டுப் போவது கஷ்டமாக இருந்தது.

அதனால் வீட்டைப் பார்த்துக் கொள்ளவும் சமையல் வேலைகளைக் கவனித்துக் கொள்ளவும் வேம்புவையும் அவர் மனைவியையும் வீட்டோடு வேலைக்கு வைத்துக் கொண்டாள். வேம்புவின் மனைவி சிறிது நாட்களிலேயே இறந்து விட்டாலும், வேம்பு அவ்வீட்டை விட்டு நகரவில்லை.

மெதுவாக மூர்த்தி பெரியவனாக ஆகி, விவாக வயதை எட்டினான். பானுவை அன்பு மனைவியாக ஏற்றுக் கொண்டான். ஆனால் காமாட்சிதான் வெகு நாட்கள் மகன், மருமகளுடன் வாழவில்லை.

மரணப் படுக்கையில் இருந்த போது அவள் மகன், மருமகளுக்கு விஷயம் ஒன்றும் கூறவில்லை. வேம்புவைத்தான் கூப்பிட்டு, ''மாமா மூர்த்தியை இவ்வளவு நாட்கள் எவ்விதம் கவனித்துக் கொண்டீர்களோ, அதேபோல் இனியும் கவனித்துக் கொள்ள வேண்டும். இவன் குடும்பத்தை விட்டு நகரக் கூடாது'' என்று கூறிவிட்டுக் கண்களை மூடினாள். வேம்புத் தாத்தா நிரந்தரமாக மூர்த்தியின் வீட்டில் தங்கிவிட்டார். மூர்த்தி பெரிய கம்பெனி ஒன்றில் மானேஜராக அமர்ந்தான்.

பானுவும் குழந்தைகளும் வேம்புத் தாத்தாவிடம் ஒட்டிக் கொண்டனர்.

பானுவுக்கும் மூர்த்திக்கும் அடிக்கடி கருத்து வேறுபட்டுப் பிணக்குகள் மூண்டுவிடும். அப்பொழுதெல்லாம் வேம்புத் தாத்தாதான் நடுவில் புகுந்து சமரசம் செய்து வைப்பார்.

'' என்னம்மா இது. தினமும் நீதானே சமையலைக் கூறுவாய்?'' என்று மெதுவாக ஆரம்பித்தார் வேம்பு.

'' தாத்தா! வீணாக ஏன் கேள்வி கேட்டுக் கொண்டு நிற்கிறீர்கள்? நான்தான் சொல்லி விட்டேனே! இனி இந்த வீட்டுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை. உங்க எஜமானர் என்னை 'வெளியேபோ' என்றும் சொல்லிவிட்டார்!''

'' அவன் கிடக்கிறான், நீ உள்ளே வந்து சமையலைச் சொல்லு. அவன் கோபம் தன்னால் இறங்கிவிடும்'' என்றார் வேம்பு. மூர்த்தியிடம் அவருக்குப் பூரண சுதந்திரம் உண்டு.

இதற்குள் மூர்த்தி மாடியிலிருந்து இறங்கி வந்தான். '' தாத்தா! நீங்கள் சும்மா இருங்கள். நான் சொன்ன பேச்சைக் கேட்டுக் கொண்டு அவள் இங்கே இருந்தால் இருக்கட்டும். இல்லாவிடில் குழந்தைகள் நலனுக்காக அவளை வெளியே போகச் சொல்லத்தான் வேண்டும்'' என்றான் அளவற்ற கோபத்தோடு.

வேம்பு பயந்து விட்டார். மூர்த்திக்கு இவ்வளவு கோபம் வந்து அவர் பார்த்ததேயில்லை.

'' மூர்த்தி, என்னப்பா விஷயம்? கன்னா பின்னாவென்று பேசுகிறாயே!''

'' அற்ப விஷயம் தாத்தா! அதற்கு இவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்கிறார். இன்று மாதர் சங்கத்தின் ஆண்டு விழா. அதற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தேன். 'குழந்தைக்கு ஜலதோஷம், கிளம்பக் கூடாது' என்கிறார்'' என்றாள் பானு.

''சட், வாயை மூடு. குழந்தைகள் மீது உனக்குச் சிறிதும் அக்கறையில்லை'' என்று இரைந்தான் மூர்த்தி.

''ரொம்ப சரி! நீங்களே குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளுங்கள். நான் என் பிறந்த

வீட்டுக்குப் போகிறேன்'' என்றாள் பானு காரசாரமாக.

வேம்பு பேச்சு மீறிப் போவதைப் பார்த்து நடுவில் புகுந்தார். ''மூர்த்தி, பானு, நீங்கள் இருவருமே குழந்தைகளைப் பற்றிக் கவலைப் படவேண்டாம். நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் குஷியாக இருங்கள்'' என்றார்.

ஆனால் அவர் பேச்சை இருவரும் மதிக்கவில்லை. இருவரும் வரம்பில்லாமல் பேசிக் கொண்டார்கள். கடைசியில் பானு விழுப்புரத்திலிருக்கும் பிறந்த வீட்டுக்கு அப்பொழுதே கிளம்பத் தயாராகி விட்டாள்.

அவள் புறப்படும் போது மூர்த்தி கோபத்துடன், ''இதோ பார், இனி இக்குழந்தைகளுக்கும் உனக்கும் சம்பந்தமில்லை. என்னுடனேயே அவை இருக்க வேண்டும் என்று கோர்ட் மூலம் தீர்த்து விடப் போகிறேன்'' என்றான். பானு அதை லட்சியம் செய்யவில்லை.

இதுவரையில் அம்மா அப்பா சண்டையைக் கலா, மாலா, பாலா மூன்று குழந்தைகளும் வேடிக்கையாகப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தன. கலாவுக்கு ஐந்து வயது, மாலாவுக்கு மூன்று வயது, பாலாவுக்கு இன்னும் ஐந்தாறு நாட்கள் கழித்துத்தான் ஒரு வயது பூர்த்தியாகப் போகிறது.

பானு தன் பெட்டியில் புடவைகளை அடுக்குவதைப் பார்த்த கலா, மடமடவென்று உள்ளே சென்று தன் சொக்காய், பாவாடைகளை எடுத்து வந்தாள். ''அம்மா! என்னுடைய சிவப்புப் பாவாடை உலரவில்லை. அது இல்லாட்டா போகட்டும். ஊரில் உடுத்திக் கொள்ள இது போதும்'' என்று கூறியபடி, மற்றப் பாவாடைகளைப் பெட்டியில் வைக்கப் போனாள். பானு பாவாடைகளை எடுத்து மூலையில் கோபத்துடன் எறிந்தாள். ''போடி அந்தப் பக்கம்! உன் அப்பாவிடமே இரு!'' என்றாள். கலா 'ஓ' வென்று அழ ஆரம்பித்து விட்டாள்.

இதற்குள் குழந்தை பாலா தவழ்ந்து வந்து பெட்டியிலுள்ள சாமான்களை எடுத்து வெளியே வாரி இறைக்க ஆரம்பித்தாள். பானு ஆத்திரத்துடன் அதன் முதுகில் இரண்டு அடி வைத்து, தூரத்தில் உட்கார்த்தி வைத்தாள். கலாவுடன் இரட்டை நாயனமாக, பாலாவும் அழ ஆரம்பித்து விட்டாள்.

மாலாவோ தன்னை அம்மா ஒன்றும் கூற மாட்டாள் என்ற பெருமிதத்துடன் தாயின் தலைப்பைப் பிடித்துச் சுற்றிக் கொண்டிருந்தாள். புறப்படும் நேரத்தில் பானு பெட்டியைத் தன் கையில் எடுத்துக் கொண்ட போது, ''அம்மா! என்னைத் தூக்கிக்கோ'' என்று கூறிய மாலா அவள் முன் வந்து கையை விரித்தாள். பானு அவள் கையைப் பிடித்துத் தரதரவென்று இழுத்து ஒரு மூலையில் தள்ளி விட்டு வாசலுக்கு விரைந்தாள்.

வேம்பு இக்காட்சியைக் காணச் சகியாதவராய்க் கண்ணீர் ததும்ப 'பானு, பானு' என்றார். ஆனால் அது அவள் காதில் விழுந்ததாகவே தெரியவில்லை.

''டிரைவர், காரை எடு. ஸ்டேஷனுக்குப் போக வேண்டும்'' என்று பானு கூறியதும் டிரைவர் முனுசாமி சற்றுத் தயங்கினான். அவனும் வெகு நாட்கள் அவ்வீட்டில் இருப்பவன். அதனால் தம்பதிகள் சண்டை இவ்வளவு தூரம் போவதை அவன் விரும்பவில்லை. ''ஏ, முனுசாமி! ஏன் நிற்கிறாய்? இவளை முதலில் ஸ்டேஷனில் கொண்டு போய் விட்டு விட்டு வா'' என்று மூர்த்தி அதட்டியதும் தான் அவன் வண்டியை எடுத்து வந்தான்.

கார் கிளம்பியதும் குழந்தை பாலா ''..ம்மா ...ம்மா'' என்று அழுது தாவியது. மூர்த்தி குழந்தையை எடுத்துக் கொண்டான். ஆனால் அது வீறிட்டு அழுதது. கலாவும் மாலாவும் வண்டியைப் பின்தொடர்ந்து, ''அம்மா! அம்மா!'' என்று அலறியபடி ஓடினார்கள். வேம்பு அவர்கள் காரில் எங்கேயாவது சிக்கிக் கொள்ளப் போகிறார்களே என்று பயந்து, ஓடிச் சென்று அவர்களைத் தூக்கிக் கொண்டார். அதற்குப் பிறகு அவரே விக்கி விக்கி அழ ஆரம்பித்து விட்டார்.

*

''எந்த ஊருக்கு டிக்கெட்?'' என்று இரண்டு தடவைகள் கேட்டும் பானுவுக்குக் காதில் பட்டதாகக் காணப் படவில்லை.

''என்னம்மா இது, கேட்கக் கேட்கப் பதிலே சொல்லவில்லையே! உங்களுக்கு எந்த ஊருக்கு அம்மா டிக்கெட்?''

''ம்? எந்த ஊருக்கா?.. விழுப்புரத்துக்கு இரண்டாம் வகுப்பு டிக்கெட் கொடுங்கள்'' என்று கூறி டிக்கெட்டை வாங்கிக் கொண்டு 'வெயிடிங்' ரூமுக்குச் சென்றாள்.

அவள் அங்கு உட்கார்ந்ததும், அங்கிருந்த விளம்பரங்களைப் பார்த்தாள். அதோ, ஒரு தாய் எவ்வளவு பெருமிதத்துடன் தன் செல்லக் குழந்தையை அணைத்துக் கொண்டிருக்கிறாள்! அந்தக் குழந்தையின் முகத்திலும் எவ்வளவு பூரிப்பு! தன் பிஞ்சுக் கைகளால் தாயின் கழுத்தைக் குழந்தை இறுக அணைத்துக் கொண்டிருக்கிறது.

சட்டென்று பானு தன் கண்களை அச் சித்திரத்திலிருந்து அகற்றினாள். அவள் மனத்தில் ஏதோ சுமை அழுத்துவது போல் இருந்தது.

''அம்மா!....அம்மா....!''

பானு சுற்றுமுற்றும் பார்த்தாள். யார் கூப்பிட்டது?.. ஒருவரையும் காணவில்லை.

''அம்மா..அம்....மா!''


குழந்தையொன்று சத்தமிட்டு அலறுவது போல் இருந்தது. பானு மீண்டும் சுற்றிலும் பார்த்தாள். ஒருவரும் தென்படவில்லை.

அந்த அறையை விட்டு வெளியே வந்தாள் பானு. ரயிலைப் பிளாட்பாரத்தில் கொண்டு வந்து நிறுத்தினார்கள். பானு அவசரம் அவசரமாக இரண்டாம் வகுப்பில் ஏறிக் கொண்டாள். சிறிது நேரத்துக் கெல்லாம் ஒரு வயோதிக மாதும், பானுவின் வயதுள்ள பெண்ணும் மூன்று குழந்தைகளுடன் அவள் இருந்த பெட்டியில் ஏறிக் கொண்டார்கள். வண்டியில் ஏறியதும், ''எந்த ஊருக்கு அம்மா போறே?'' என்று பானுவிடம் மெதுவாகப் பேச்சுக் கொடுத்தாள் கிழவி.

அக்குழந்தைகளையும், அந்தப் பெண்ணையுமே பார்த்துக் கொண்டிருந்த பானு, ''விழுப்புரம் போகிறேன்'' என்று கூறினாள்.

''கல்யாணம் ஆகிவிட்டதாம்மா?'' என்றாள், மீண்டும் பேச்சுக் கொடுத்த அந்தக் கிழவி. அவள் பழம்போக்குடையவள்.

பளு மிகுந்த இயக்க வேலைகளுக்கு



காஸ்ட்ரால் ஸிஆர் உபயோகித்து

இந்த 6 வித முக்கிய அனுகூலங்களைப் பெறுங்கள்

நீடித்த உழைப்புக் காலம்

டீஸல் எண்ணெயின் எரிபொருள்களால் ஏற்படும் ஸிலிண்டர் தேய்மானத்தையும் ரிங் ஒட்டிக் கொள்வதையும் காஸ்ட்ரால் ஸிஆர் தடுக்கிறது. இதனால் இன்ஜின் நீண்ட காலத்திற்கு உழைக்கும்.

அதிகப்படியான திறமை

மிகக் கடுமையான உழைப்புச் சந்தர்ப்பங்களிலும் காஸ்ட்ரால் ஸிஆரில் உள்ள ஆக்ஸிடேஷன் தடுப்புகள் திப்பியும் வார்னிஷும் சேருவதைத் தடுத்து திறமையை அதிகரிக்கச் செய்கின்றன.

அதிக உஷ்ணநிலை உழைப்புக்கு அதிக பாதுகாப்பு

தற்கால டீஸல் இன்ஜின்களின் உழைப்பால் அதிக உஷ்ணம் ஏறுவதால் பிஸ்டன்களின் ரிங் பெல்ட் பகுதிகள் ஒட்டிக் கொள்ள ஏதுவாகிறது. காஸ்ட்ரால் ஸிஆரில் இருக்கும். இதுவரை கண்டு பிடிக்கப்படாத வன்மையான அடிடிவ்கள் நிலைமிக்க எரிபொருள் வஸ்துக்களை வெவ்வேறாக நீங்கு இல்லாத முறையில் பிரித்து விடுகின்றன. இதனால் பாதுகாப்பு அதிகமாக ஏற்படுகிறது.

பாரமின்றி ஓடுவதிலுள்ள அபாயங்களைத் தவிர்க்கிறது

இலேசான சுமைகளுடன் அல்லது குறைந்த உஷ்ண நிலையில் இயங்குவதால் கரி ஏற்பட்டு எண்ணெய் எரியாமலும் இறுகிய சாறும் குழிக்குள் புகுந்து ரூப்ரிகன்டை கெடுத்து விட ஏதுவாகும். காஸ்ட்ரால் ஸிஆர் மற்றெந்த கன ரக சுத்திகரண எண்ணெயைக் காட்டிலும் சுலபமாக கரி முதலான அழுக்குகளை தனித் தனியாகப் பிரிக்கிறது.

அமில எரி பொருள்களைத் தடுக்கிறது

தற்காலத்தில் அதிக ஸல்பர் சேர்க்கைக் கொண்ட டீஸல் எண்ணெய்களால் ஏற்படும் அமிலமயமான பொருள்களை எதிர்த்துத் தடுப்பதற்கான முறையில் காஸ்ட்ரால் ஸிஆர் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்த விசேஷமான அம்சம் என்ஜினுக்குச் சிறந்த பாதுகாப்பு.

அதிக சிக்கனம்—குறைந்த பராமரிப்பு

காஸ்ட்ரால் ஸிஆர் மேலான பாதுகாப்பு அளிப்பதால் இன்ஜின்கள் புதியனபோல் சுத்தமாக இருக்கும். இதனால் பராமரிப்புச் செலவு குறைவு, பழுதுச் செலவு குறைவு. மேலும் மிகச் சிக்கனமான உழைப்புச் செலவு.

WAKEFIELD Castrol MOTOR OIL

காஸ்ட்ரால்

எண்ணெய்களில் மிகச் சிறந்தது

ஸி. ஸி. வேக்பீல்ட் & கோ., லிட்.

இங்கிலாந்தில் இணைக்கப் பெற்றது அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப் பட்டது

R-66A

''அதுதான் கழுத்திலே மஞ்சள் கயிறு தெரிகிறதே? அதைப் பார்க்காமல் கேட்கிறாயே?'' தாயைக் கண்டித்தாள் அப்பெண்.

''ஆமாம், நான் பார்க்கவில்லை. ஏனம்மா! குழந்தை குட்டியும் இருக்குமே!''

பானுவுக்கு இந்த வீண் வம்பளப்பு பிடிக்கவில்லை. ஆயினும் அவள் தலையை ஆட்டினாள்.

உடனே அக்கிழவி அந்தப் பெண்ணைப் பார்த்து, ''பார்த்துக்கோ மங்களம். இப்ப இந்தப் பெண் தன் குழந்தைகளை விட்டுவிட்டுக் கிளம்பவில்லையா? ஏதோ ஒரு நாளைக்கு விட்டு விட்டு வரக்கூடச் சம்மதிக்க வில்லையே!'' என்று கூறிவிட்டு பிறகு பானுவின் பக்கம் திரும்பி, ''இதோ பாரும்மா, வீடு நிறைய அத்தையும், மாமியாரும் தாத்திமார்களும் இருக்கிறார்கள். அவர்களிடம் இந்தக் குழந்தைகளை விட்டு விட்டுப் பழநி மலைக்குப் போய்ப் பிரார்த்தனையைச் செலுத்தி விட்டு வந்துடலாம் என்றேன். கேட்காமல் இழுத்துக் கொண்டு வந்துவிட்டாள். எப்படி அம்மா மலை ஏற முடியும்?'' என்று குறைப்பட்டாள்.

அதற்குள் அந்த மங்களம் பானுவைப் பார்த்து, ''நீயும் குழந்தையைப் பெற்றவள் தானே? நீயே சொல்லு! சொந்தத் தாயிட்டே ஒட்டுவதுபோல் குழந்தைகள் வேறு யாரிடமாவது ஒட்டுமாம்மா? பெற்ற மனம் தான் கேட்குமா!'' என்றாள். பானுவை யாரோ சாட்டையாலடிப்பது போலிருந்தது.

இதற்குள் மங்களத்தின் சிறு குழந்தை தாய்ப்பாலுக்கு அழுதது. பானு முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அவள் மார்பு குறு குறுத்தது. அப்பொழுதுதான் அவளுக்கு ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது. குழந்தை பாலாவுக்குப் பகலெல்லாம் தாக மெடுக்காது. சொல்லி வைத்தாற்போல் இரவு தூங்கப் போவதற்கு முன், தாயிடம் தாகசாந்தி செய்து கொள்ள வந்து விடுவாள். எவ்வளவோ மறக்கடிக்கப் பார்த்தும் பலனில்லை. பானு மணியைப் பார்த்தாள். ரயில் கிளம்பி விட்டது. 'பாலாவுக்கு இந்நேரம் தூக்கம் வந்து விடும். இன்று குழந்தை என்ன செய்கிறதோ?' என்று நினைத்ததும் அவள் நெஞ்சு விம்மியது. அப்படியே அவள் படுத்துக் கொண்டு விட்டாள்.

விழுப்புரத்தில் மகளை இந்நேரத்தில் எதிர் பார்க்கவே இல்லை திவாகரனும், மீனாட்சியும். பெற்றோர்களைப் பார்த்ததும் அவளுக்குத் துக்கம் பீறிட்டுக்கொண்டு வந்தது. தனக்கும் கணவனுக்கும் நடந்த சண்டையை விவரமாக எடுத்துக் கூறினாள்.

பெற்றோர்களுக்கு அருமையாக ஒரே குழந்தை அவள். அதனால் அவள் பேச்சைக் கேட்டு ஆத்திர மடைந்தார் திவாகரன். ''பானு, நீ வருத்தப்படாதேம்மா. உனக்கு என்ன பணமில்லையா. காசில்லையா? அவன் வழக்கு போட்டுப் பிரித்துக் கொள்ளட்டும். குழந்தைகளும் அவனிடமே இருக்கட்டும். சனியன் விட்டது. பிறகு நீ படித்துப் பட்டம் பெற்று ஏதாவது உத்தியோகத்துக்குப் போகலாம்'' என்றார் அவர்.

மீனாட்சியும், ''ஆமாம், அவனையும் குழந்தைகளையும் மறந்து விடு. இனியை வளர்த்துப் பூனையிடம் கொடுத்தது போலாயிற்று'' என்று ஒத்துப் பாடினாள்.

பொழுது விடியச் சிறிது நேரமிருந்ததால் பானு படுத்துக்கொண்டாள். அவள் தாய் அவளைச் சமாதானப் படுத்தும் முறையில் அணைத்துக் கொண்டாள். சட்டென்று தாயின் கை கனத்தது போலிருந்தது பானுவுக்கு. இதேபோல் இனமும் மாலாவை அவன் கட்டிக் கொண்டு தூங்குவானே! இன்று மாலாவை யார் அணைத்துக்கொண்டிருப்பார்கள்! மாலா அதிகமாகத் தந்தையிடம் ஒட்டமாட்டாளே!

''அந்தப் பாவியிடம் இனி என் செல்வத்தை அனுப்ப மாட்டேன்'' என்று மீனாட்சி முணு முணுத்துக் கொண்டிருந்தாள். பானுவுக்குத் திக்கென்றது. மீனாட்சி தன் செல்வத்தை அங்கு அனுப்ப விரும்பவில்லை; பானுவோ தன் செல்வங்களை அங்கு விட்டே வந்து விட்டாள். நீதி மன்றத்தில் ஏறி அவனுடனேயே நிரந்தரமாக விட்டு வைக்கவும் தீர்மானித்து விட்டாளே! இதை நினைத்ததும் பானுவுக்குப் படுக்கை கொள்ளவே யில்லை.

மெதுவாகப் பொழுது விடிந்தது. மீனாட்சி காப்பியைக் கலந்து முதலில் மகளிடம் கொடுத்தாள். பானுவுக்குக் காப்பி வேம்பாகக் கசந்தது. கலாவுக்குத்தான் முதலில் அவள் காப்பி கலந்து கொடுப்பது வழக்கம். காப்பி குடித்தால்தான் அவள் சமையல் அறையை விட்டு நகருவாள். இன்று என்ன செய்கிறதோ குழந்தை!

பானு சிலையாக உட்கார்ந்திருந்த போது அடுத்த வீட்டிலிருந்து, ''ஐயோ, இனிமேல் இல்லை'' என்ற ஒரு குழந்தையின் அழுகுரல் கேட்டது. பானு பயந்துவிட்டாள். ''என்ன அம்மா அது?'' என்று தாயைக் கேட்டாள்.

''அந்தக் கூத்தை ஏன் கேட்கிறாய்? அடுத்த வீட்டுக் கமலாவை உனக்கு நினைவிருக்குமே. அவள் இறந்து விட்டாள். அவள் கணவன், அந்தப் படுபாவி ராமு, ஒரு மாதத்திலேயே வேறு கல்யாணம் செய்து கொண்டுவிட்டான். அந்த இளையாள்தான் கமலாவின் செல்வக் குழந்தை லதாவை இப்படிப் பாடாகப் படுத்தி . வைக்கிறாள். அந்தக் குழந்தை தனியாய்த் தவிக்கிறது'' என்று கூறின மீனாட்சி சமையலைக் கவனிக்கச் சென்றாள்.

பானு 'ஐயோ' என்று அலறிவிட்டாள். தான் உயிருடன் இருக்கும்போதே தன் குழந்தைகளுக்கும் இக் கதி நேர்ந்துவிடுமா? நீதி மன்றத்தில் ஏறி அவள் செல்வங்களை, மூர்த்தி தனதாக்கிக் கொண்டு, இப்படிப் பட்ட ஒரு அரக்கியிடம் விட்டு விடுவானோ! பானுவின் கண்களில் நீர் தேங்கியது.

மீனாட்சி மகளுக்காகச் செய்யும் ஒவ்வொரு வேலையும் பானுவின் மனத்தைக் குத்தி எடுத்தது. தாய்க்குத் தன்மீது இருக்கும் பாசம், அவளுக்குத் தன் குழந்தைகள்மீது இல்லையா?

ஒரு சம்பவம் அவள் கண்முன் தோன்றியது. முதல் வருடம் அவளுக்கு டைபாய்ட் ஜுரம். மூர்த்தியும் குழந்தைகளும் அவளைச் சுற்றிக் கவலையுடன் உட்கார்ந்திருந்தனர். தன் பட்டுப்போன்ற கைகளால் கலா தாயின் தலையைப் பிடித்து விட்டுக் கொண்டிருந்தாள். மாலா தாயின் கைகளைப் பிடித்துக் கொண்டிருந்தாள். மூர்த்தியின் வருத்தம் தோய்ந்த

முகத்தை அவளால் பார்க்கவே முடியவில்லை. அவள் தலையை வருடியபடி அவன், "பானு! எனக்காக இல்லாவிடினும் இக் குழந்தைகளுக்காகவாவது கடவுள் உன்னைப் பிழைக்க வைத்துவிட மாட்டாரா?" என்று கதறினான். பானுதான் அவனைச் சமாதானப் படுத்தினாள். அவளுக்கும் தன் அன்புக் குழந்தைகளை விட்டுப் போய் விடுவோமோ என்ற பயம் இருந்தது. குழந்தைகளை இறுக அணைத்து "பயப்படாதீர்கள், என் செல்வங்களை நான் விட்டுப் பிரியவே மாட்டேன்" என்றாளே. இப்பொழுது அந்த அன்பு மங்கி மறைந்து விட்டதா? சின்னஞ்சிறு சிசுவையும் விட்டு விட்டு வந்து விட்டாளே! பானு கைகளால் முகத்தை மூடிக்கொண்டாள்.

வீட்டு வேலைக்காரி அஞ்சலை வந்தாள். பானுவைப் பார்த்து ஆச்சரியத்துடன், "என்னம்மா, குழந்தைகளெல்லாம் எங்கே அம்மா? கைக்குழந்தை தவழ ஆரம்பிச்சுடுத்தா? மழலை பேசுதா, அம்மா!" என்று குசலம் விசாரித்தாள். பானு வெறுப்புடன் மறு பக்கம் சென்றாள்.

அன்று முழுவதும் அவள் சாப்பிடவில்லை. அணு, அணுவாக அவள் உடம்பெல்லாம் அவளைச் சித்திரவதை செய்வதுபோல் இருந்தது. மாலை தினசரியைத் திறந்தாள். "பிரபல சினிமா நட்சத்திர வழக்குத் தீர்ப்பு. 'கணவனும் மனைவியும் பிரிந்து வாழலாம். குழந்தைகள் தந்தையிடம் இருக்க வேண்டும்'—தீர்ப்பு" என்றிருந்தது. என்றாவது தன் வழக்கும் இப்படியாகுமோ என்று பானு நினைத்ததும், அத் தினசரியை நூறு சுக்கலாகக் கிழித்துப் போட்டு விட்டு, தன் பெட்டியைத் தூக்கிக் கொண்டாள். பெற்றோர்கள் தடுத்து நிறுத்தினதால் மறுநாள் காலை புறப்படுவதென்று தீர்மானித்தாள்.

*

"வேம்புத் தாத்தா, அம்மா வந்துடுவாளா?" என்று கேட்டுக்கொண்டே கலா உள்ளே ஓடி வந்தாள்.

வேம்பு சோகக் குரலில் "வந்துடுவாம்மா" என்று கூறினார்.

"அம்மா வரவேமாட்டாள். அம்மாவை மறந்துடுன்னு அப்பா சொன்னா, தாத்தா!" என்றாள் கலா.

இதற்குள் பாலா தவழ்ந்து கொண்டே அடுப்புக்குச் சென்று விட்டது. வேம்பு குழந்தையைத் தூக்கிக் கொண்டார். அவர் கண்களில் நீர் நிறைந்தது. என்ன வேலை இருந்தாலும் பானு குழந்தைகளை அடுப்பங்கரையில் விடாமல் தானே பார்த்துக் கொள்வாள். இன்று குழந்தைகள் தாயில்லா அனாதைகள் போல் இருந்தன.

மூர்த்தி மாடியிலிருந்து இறங்கி வந்தான். "சே, சே, சனியன்கள் இரவெல்லாம் தூங்க விடவில்லை; யாரும் காணாத அம்மாவைக் கண்டு விட்ட மாதிரி...." என்று முணுமுணுத்தான். வேம்பு பதிலே கூறவில்லை.

"வேம்புத் தாத்தா, வக்கீலுக்கு 'போன்' செய்து விட்டேன். இனி அவளுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை என்று கோர்ட் மூலம் தீர்த்துவிட்டுக் குழந்தைகளையும் நான்தான் வைத்துக் கொள்ளப் போகிறேன்" என்றான்.

வேம்புவுக்குக் கோபம் வந்தது. "நல்ல வேடிக்கைதான். குழந்தைகளை யார் வளர்ப்பார்கள்?" என்று கேட்டார்.

"நான் உங்கள் கையில் வளர்ந்ததுபோல், இவர்களும் உங்கள் கையில் வளரட்டும்."

"பைத்தியமாகப் பேசாதே! தாய் வீட்டிலிருக்கும்வரை குழந்தைகள் யாரிடமும் பழகும். அம்மா வரமாட்டாள் என்று தெரிந்தால் ஏங்க ஆரம்பித்து விடும்."

"எனக்கு அதெல்லாம் தெரியாது. சட்டம் நமக்குச் சாதகமாக இருக்கிறது. நாம் ஏன் திண்டாட வேண்டும்?"

"இதோ பார் மூர்த்தி, நீ வழக்குப் போட்டால் நான் இன்றே கரண்டியை வைத்து விட்டு வெளியே போய் விடுவேன்" என்று வேம்பு பயமுறுத்தினார்.

மூர்த்தி அலட்சியத்துடன், "பேஷாகப் போங்கள், எனக்கு வேறு ஆள் கிடைக்காதா, அல்லது வேறு விவாகம் செய்துகொண்டு



வளர்க்கிறேன் பாருங்கள்" என்று கூறினான். வேம்புவுக்குத் திக்கென்றது. மூர்த்தியா இவ்வளவு அலட்சியம் செய்கிறான்?

இது ஒன்றும் புரியாத குழந்தை மாலா மூர்த்தியிடம் சீப்பைக் கொடுத்து, "தலை வாரி விடப்பா:" என்றது. வேம்புவின் கண்களில் கண்ணீர் வழிந்தது.

மூர்த்தி மாலாவைத் தூக்கி, "இதோ பார் மாலா, நீயும் கலாவும் இனி பக்கத்து வீட்டு மீனுவைப் போல் வேலைக்காரியிடம் தலை வாரிக் கொள்ள வேண்டும்" என்றான்.

கலா அதற்கு ஒப்பவில்லை. "மீனுவுக்கு அம்மா செத்துப் போயிட்டா! எங்களுக்கு அம்மா இருக்கிறாளே?" என்று வாதித்தாள்.

"இதோ பார் கலா, உங்கம்மாவும் செத்துப் போயிட்டான்னு வெச்சுக்கோ" என்றான் மூர்த்தி அளவற்ற வெறுப்போடு.

வேம்புவின் ரத்தம் கொதித்தது. ''மூர்த்தி! வாயை மூடு. இறந்துவிட்ட உன்னம்மாவை நினைத்து நீ எவ்வளவு நாட்கள் ஏங்கித் தவித்திருக்கிறாய்? அதுபோல் இக் குழந்தைகளுக்கும் தாயாரிடம் அன்பு இருக்காதா? — உயிருடன் இருக்கும் போதே அவளைத் தொலைத்து, குழந்தைகளைத் தாயிடமிருந்து பிரித்த பாபத்தை ஏன் சுமக்கிறாய்?'' என்றார்.

மூர்த்தியை யாரோ ஓங்கிச் சம்மட்டியால் அடிப்பதுபோல் இருந்தது. ஆம், அவன் தன் தாயை நினைத்துஎவ்வளவோ நாட்கள் உருகி மிருகிறானே! முந்தின இரவு கலாவும் மாலாவும் நடுத் தூக்கத்தில் 'அம்மா அம்மா' என்று கதறியது அவன் நினைவுக்கு வந்தது.

வேலைக்காரன் கூடை நிறைய ரோஜாப் பூக்களைப் பறித்து வந்தான். தினம் ஒருவித அலங்காரத்தில் அப்பூக்களைக் குழந்தைகளுக்கு அழகு செய்வாளே பானு! இன்று பாலா அப் பூக்களை வாரி இறைத்துக் கொண்டிருந்தாள். கலா ஓடி வந்து எல்லாப் பூக்களையும் திரட்டிக் கூடையில் போட்டாள்.

''கலா, பூவைத் தலையில் வைத்துக் கொள், அம்மா!'' என்றான் மூர்த்தி.

''வேண்டாம். அம்மாதான் இல்லையே. தலையில் யார் வைத்துவிடுவார்கள்? அதனால் அம்மாவுக்கே இருக்கட்டும்'' என்றபடி கலா கூடையைத் தூக்கிக் கொண்டாள்.

''அம்மாவுக்கா?'' என்றான் மூர்த்தி.

கலா பதில் கூறவில்லை. நேராகத் தன் தாயின் போட்டோவுக்கு அருகில் சென்றாள். அப் பூக்களைப் படத்தின் மீது ஒவ்வொன்றாக ஜாக்கிரதையாக வைத்தாள். பிறகு மாலாவையும் அருகில் நிற்க வைத்துக்கொண்டாள். பாலாவை எடுத்து மடியில் உட்கார வைத்துக் கொண்டு கைகளைக் கூப்பியபடி, ''அம்மா! நாங்க இனிமேல் தப்பே செய்யமாட்டோம். பிடிவாதமே பிடிக்க மாட்டோம். மாலா சமர்த்தாகச் சாப்பிடுவாள். பாலா பாலை மீதம் வைக்காமல் குடித்துவிடுவாள். நானும் சண்டையே போடமாட்டேன். நீ சீக்கிரமாக வந்துடும்மா. வேம்புத் தாத்தாகூட நீ இல்லேன்னு அழறு. அப்பாகூடச் சமர்த்தாகப் போயிடுவா. நீ இல்லாமல் வீடு நன்றாக இல்லேயம்மா. சட்டுனு இன்றைக்கே வந்துடும்மா. மாலா, நீயும் வேண்டிக்கோ'' என்றாள். அவள் கண்களில் நீர் தேங்கி நின்றது.

மூர்த்தியினால் இக் காட்சியைக் கண்டு சகிக்கவே முடியவில்லை. குழந்தைகளுக்குத் தாயிடம் இவ்வளவு அன்பா? அவன் தன் கண்களை இறுக மூடிக் கொண்டான்.

மூர்த்திக்கு நேரம் ஆக ஆகத் தான் ஏதோ பெரிய பாபத்தைச் செய்வது போலிருந்தது. தலைவலி என்று மாடியில் போய்ப் படுத்துக் கொண்டு விட்டான்.

★

பொழுது விடியும் நேரத்தில் மூர்த்தி வாசல் தாழ்வாரத்தில் தினப்பத்திரிகை வைத்துப் படித்துக் கொண்டிருந்தான். போர்டிகோவில் டாக்ஸி ஒன்று வந்து நின்றது. பானு அதிலிருந்து இறங்கினாள். காலையில் புறப்படுவதாக இருந்தவள் மீண்டும் மனம் பொறுக்காதவளாக இரவே புறப்பட்டு விட்டாள். டாக்ஸியிலிருந்து இறங்கி நேராக உள்ளே சென்றாள். மூர்த்தியும் தடுக்கவில்லை. பத்திரிகையைக் கீழே வைத்து விட்டு அவளைப் பின்பற்றி உள்ளே சென்றான்.

உள்ளே நுழைந்ததுமே பானுவின் கண்களில் பூக்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த தன் புகைப்படந்தான் பட்டது. அவள் உள்ளம் நெகிழ்ந்து பெருமையால் நிரம்பியது.

''கலா, மாலா, பாலா! ஓடி வாருங்கள்'' என்று உரக்கக் கூவினாள்.

அவ்வளவுதான். சமையலறையிலிருந்த மூன்று குழந்தைகளும் குதித்துக் கொம்மாளமிட்டு, ''அம்மா வந்துட்டா, அம்மா வந்துட்டா'' என்று ஓடி வந்தன.

கலா அம்மாவை இறுகக் கட்டிக்கொண்டாள். மாலா தன்னைத் தூக்கிக் கொள்ளும்படி கைகளை நீட்டினாள். குழந்தை பாலா 'ம்மா, ம்மா' என்று கூவி அவள் கால்களைப் பற்றிக் கொண்டாள். வேம்பு ஆனந்தக் கண்ணீர் விட்டார். பானு குழந்தைகள் மூன்றையும் அணைத்து முத்தமிட்டாள்.

பானு கலாவுக்குத் தலை வாரிப் பூ வைத்துக் கொண்டிருந்தாள். மாலா அவள் மடியில் படுத்திருந்தாள். பாலா அவள் கழுத்தைக் கட்டியபடி பின் பக்கம் நின்று கொண்டு பொக்கை வாயைத் திறந்து சிரித்துக் கொண்டிருந்தாள். இதை ரசித்தபடி மூர்த்தி அருகில் உட்கார்ந்திருந்தான்.

''என்னம்மா சமைப்பது?'' என்று கேட்டபடி வேம்பு நின்றார்.

''கலாவுக்குக் கூட்டு என்றால் பிடிக்கும். அதனால் அவரைக்காயை கூட்டு செய்துவிட்டு, மாலாவுக்குப் பிடித்தபடி உருளைக் கிழங்கை வறுத்து விடுங்கள். பாலாவுக்குப் பருப்பு சாதம் இருந்தால்போதும். பிறகு இன்று நாள் நன்றாக இருக்கிறது. அந்தப் புது வெண்கலப் பானையில் உங்கள் எஜமானருக்குப் பிடித்த பால் பாயசத்தை வைத்துவிடுங்கள்'' என்றாள் பானு.

மூர்த்தியும் சிரித்தபடி ''பிறகு உங்க எஜமானியம்மாளுக்குப் பிடித்த வெங்காய சாம்பாரையும் செய்து விடுங்கள்'' என்றான்.

இதற்குள் கலா ''வேம்புத் தாத்தாவுக்குப் பிடித்தது ஒன்றுமில்லையா?'' என்றாள்.


''எனக்கா? உங்கள் எல்லோரையும் ஆனந்தமாகப் பார்த்து விட்டால் அதிலேயே என் பசி அடங்கிவிடும்!'' என்றார் வேம்பு.

இதற்குள் வாசலில் மூர்த்தி முதல் நாள் காலை போனில் சொல்லியிருந்தபடி, வக்கீல் குமாஸ்தா வந்தார். வேம்பு கோபத்துடன் கரண்டியை ஆட்டியபடி அவரிடம் சென்று, ''இந்தா ராமையா, உங்கள் வக்கீல் ஐயாவிடம்போய் 'இம்மாதிரி ஆனந்தமான குடும்பத்தைப் பாழடிக்கும் வழக்குகளை எடுத்து வயிறு நிரப்ப வேண்டாம்' என்று நான் சொன்னதாகச் சொல்'' என்று கோபத்துடன் இரைந்தார். குமாஸ்தா ஓடிவிட்டார்.

கலா, மாலா, பாலா மூவரும் ஏதோ பெரியதாகப் புரிந்து விட்டதுபோல் சிரித்தார்கள். பானுவும் மூர்த்தியும் ஒருவரை ஒருவர் பார்த்துத் தலைகுனிந்து கொண்டனர்.

★ இந்தக் கதையில் வரும் ஒரு காட்சிதான் இவ்வார அட்டைச் சித்திரமாகத் திகழ்கிறது.


அவ்வளவு சிக்கனம்! ஒரு முறை தேய்த்தால்
கால்கேட் டெண்டல் கிரீம்
85% கிருமிகளை ஒழிக்கிறது சொத்தையும்
மற்றும் துர்நாற்றமும் ஏற்படுத்தும் கிருமிகள்
அவை
COLGATE
COLGATE
RIBBON DENTAL CREAM


எல்லா விளையாட்டுகளுக்கும்
தெம்புடன் இருங்கள்
அடிபட்ட இடங்கள காயங்கள், சுளுக்குகள், தலைவலிகள், மறத்துப போதல் முதலியவற்றின் சிகிச்சைக்கும், மற்றும் எவ்வித மான ஒத்தடத்திற்கும் உகந்தது.
PHILIPS
பிலிப்ஸ்
இன்பிராயில்
எல்லா பிலிப்ஸ் அங்கீகாரம் பெற்ற வியாபாரிகளிடமும் கிடைக்கும்.
பிலிப்ஸின் விற்பனையும் சேவையும் கை கோர்த்து ஒருங்கே செல்லுகின்றன
ரூ 55 - நிகரம்
(உள்ளூர் வரிகள் தனி)
PSPH 210


நவீன
மாய வித்தை!
லக்மி
டால்கம்
பவுடர்
டாடா தயாரிப்பு
லக்மி

மாலவல்லியின் தியாகம்

எட்டாம் அத்தியாயம்

வைகைமாலையின் தோழி



வைகைமாலையின் நடனத்துக் கேற்ப இளம் வயதுடைய பௌத்த பிக்ஷுணி யாழோடு இழைந்த இனிய குரலில் பாடிக் கொண்டிருந்தாள். அந்தக் கூடத்துக்குப் பூதுகன் வந்த சமயம், அவர்கள் இருவரும் மெய்ம் மறந்த நிலையில் பாடிக் கொண்டும், ஆடிக் கொண்டும் இருந்தார்கள்.

அகன்று வட்ட வடிவமாகத் தோன்றிய அக்கூடத்தைச் சுற்றிலும் சித்திர வேலைப்பாடுகள் அமைந்த தூண்கள் — கூடத்தைச் சுற்றிலுமுள்ள சுவர்களில் பலவித நாட்டிய முத்திரைகளைக் குறிக்கும் சித்திரப் படங்கள் பொருத்தப்பட்டிருந்தன.

வைகைமாலை தன் ஆட்டத்திடையே எதேச்சையாகத் திரும்பியபோது அங்கு பூதுகன் நிற்பதைக் கண்டு மிகுந்த ஆச்சரியம் அடைந்தவள் போல் தன் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டாள். வைகைமாலை தன் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டதும், அந்த பிக்ஷுணி அப்பொழுதுதான் சுயநினைவுக்கு வந்தவள் போல் சட்டென்று தன் பாட்டை நிறுத்திக் கொண்டு நிமிர்ந்து பார்த்தாள். எதிர்பாராதவண்ணம் ஒரு வாலிபன் அந்த இடத்துக்கு வந்ததைப் பார்த்ததும் அவளுக்குச் சிறிது வெட்கமும் திகைப்பும் ஏற்படவே வீணையைக் கீழே வைத்து விட்டு எழுந்து நின்றாள்.

"ஏன்? இன்னும் சிறிது நேரம் ஆடலாமே?" என்று சொல்லிக் கொண்டே பூதுகன் அங்கிருந்த ஆசனம் ஒன்றில் அமர்ந்து கொண்டான்.

எதிர்பாரா வண்ணம் அந்த இடத்துக்குப் பூதுகன் வந்தது





கி.ரா.கோபாலன்

வைகைமாலைக்குச் சிறிது ஆச்சரியத்தையும் திகைப்பையும் தான் கொடுத்தது. அவள் பூதுகனிடம் நெருங்கி, ''நீங்கள் இப்பொழுது இங்கு வருவீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. என் விருப்பப்படி நீங்கள் காரியத்தை நிறைவேற்றாமல் இங்கு வரக்கூடாதென்று சொல்லியிருக்கிறேன் அல்லவா? இப்பொழுது என்ன? எல்லாம் எவ்வளவு தூரம் இருக்கிறது...?'' என்றாள்.

''வைகைமாலா! உன்னுடைய விருப்பத்தை நிறைவேற்றாத வரையில் இந்தப் பூதுகன் உயிரோடு வாழ விரும்ப மாட்டான். உன்னிடம் தனியாகச் சில வார்த்தைகள் பேசவேண்டும்...'' என்று சொல்லியபடியே அவளுக்குச் சற்றுத் தூரத்தில் நிற்கும் பிக்ஷுணியைப் பார்த்தான். அந்த பிக்ஷுணி வெட்கமும் நாணமும் கொண்டவளாகத் தலை குனிந்த வண்ணமே நின்று கொண்டிருந்தாள். அவளுடைய முக நிலை அவள் மனத்தில் எழுந்த கவலையையோ திகிலையோதான் எடுத்துக் காட்டுவதாக இருந்தது. வைகைமாலை அந்த பிக்ஷுணி இங்கு இருப்பதால் தான், பூதுகன் தன்னோடு சில ரகசியங்களைப் பேச அச்சப்படுகிறான் என்பதை உணர்ந்து கொண்டவள் போல், அந்த பிக்ஷுணியைப் பார்த்துக் கண்களால் ஜாடை காட்டினாள். அவளும் உடனே அதை உணர்ந்து கொண்டவள் போல மெதுவாக அவ்விடத்தை விட்டு நகர்ந்து சென்றாள்.


அவள் அந்த இடத்தைவிட்டுச் சென்றவுடன், பூதுகன், ''வைகைமாலா! நான் முயற்சி எடுத்துக் கொண்ட காரியத்தின் நிமித்தமாகவேதான் இப்பொழுது இங்கு வந்திருக்கிறேன். உன் விருப்பப்படி காரியத்தை நிறைவேற்றாத வரையில் இங்கு வரக்கூடாது என்பதுதான் என்னுடைய நோக்கம். நான் உளவு பார்க்க வேண்டிய இடங்களில் ஒன்றாக இந்த இடமே அமைந்து விட்டால் நான் என்ன செய்ய முடியும்? நீயே என்னிடம் சொல்லாமல் பல ரகசியங்களை ஒளித்து வைத்துக் கொண்டு என்னை ஏன் அல்லல்பட வைக்கிறாய்? சதிகாரர்கள் இந்தக் காவிரிப்பூம் பட்டினத்திலேயே இருக்கிறார்கள் என்ற ரகசியம் இன்றுதான் எனக்குப் புரிந்தது.. அதுவும் உன் வீட்டுக்கே இவர்களில் சிலர் வருகிறார்கள் என்ற இந்த ரகசியம் இப்பொழுதுதான் எனக்குத் தெரிந்தது'' என்று கூறினான்.

வைகைமாலை ஆச்சர்யமும் திகிலும் அடைந்தவளாய், ''என் வீட்டிலேயே நீங்கள் உளவு பார்க்க வந்தீர்களா? அப்படி என்ன உங்களுக்குச் சந்தேகம் ஏற்படக்கூடிய நிலையில் காரியங்கள் இங்கே நடக்கின்றன?'' என்று கேட்டாள்.

பூதுகன் சிரித்தான்: ''உன்மீது சந்தேகம் இல்லை. இங்கு வருகிறவர்கள் மீதுதான் எனக்குச் சந்தேகம். இந்த நேரத்தில், அதுவும் இந்த வீட்டில் ஒரு பௌத்த பிக்ஷுணிக்கு வேலையென்ன? அவள் யார்?'' என்று கேட்டான்.

வைகைமாலை சிரித்தாள். அந்த அழகியின் சிரிப்பு பூதுகனை மயக்குவதற்காக ஏற்பட்டதாக இல்லை. அவனுடைய தவறான அபிப்பிராயத்தை ஏளனம் செய்வது போலத்தான் இருந்தது.

''இந்த பௌத்த பிக்ஷுணிக்கு இங்கென்ன வேலையா? இவ்வளவு நேரம் அவள் இங்கு என்ன செய்து கொண்




டிருந்தாள் என்பதை உங்கள் கண்ணுல் தானே பார்த்தீர்கள்? இன்னிசை வித்தையில் தேர்ந்தவர்கள் எத்தகைய நிலையில் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டாலும் அந்த வித்தை அவர்களை விட்டு அகன்று விடாது என்ற ரகசியம் உங்களுக்குத் தெரியுமா? அவளுக்கு இந்த உலகத்தில் ஏதேனும் ஆசை இருந்தால் அது பாட வேண்டும் என்ற ஆசைதான். அவள் பாடுவதற்காகத்தான் இங்கு வருகிறுள்'' என்ருள்.

''தெரிகிறது. அவள் நன்ருகப் பாடக் கூடியவள் என்பதை அறிந்து கொண்ட பின்னும் அதை நான் தெரிந்துகொள்ள முடியாதா? ஆனுல் அவள் பாடுவதற்காக மட்டும் இங்கு வரவில்லை என்றுதான் நினைக்கிறேன். அவள் யார்? அவளுடைய நட்பு உனக்கு எப்படி ஏற்பட்டது?'' என்று வியப்புடன் கேட்டான் பூதுகன்.

''அவளைப் பற்றி ஏன் இவ்வளவு சந்தேகம் உங்களுக்கு?'' என்று வினவினுள் வைகைமாலை.

''சந்தேகப்படுவதற்கு எத்தனையோ இருக்கின்றன. அவளுடைய வாழ்க்கை விவரம் முழுதும் உனக்குத் தெரியுமா? இந்த இளம் வயதில் அவள் ஏன் இத்தகைய துறவுக் கோலம் பூண வேண்டும்? அதுவே எனக்குப் பெரிய சந்தேகமாயிருக்கிறது.''

''உங்களுடைய சந்தேகம் நியாயமானதுதான். அவளைப் பற்றிய வரலாறுகளெல்லாம் எனக்குத் தெரியும். 'அலையூர் நக்கை' என்று நீங்கள் கேள்



விப் பட்டிருக்கலாம். சோழ மன்னர்கள் ஆண்ட காலத்தில் பிரசித்தி பெற்ற நாட்டிய கணிகையாகத் திகழ்ந்தாள். அவளைப் பற்றிய அநேக கதைகள் நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். வேத்தியல் கூத்து ஆடுவதிலும் தேவாலயங்களில் சாக்கைக் கூத்து ஆடுவதிலும் அவளைப் போன்ற திறமைசாலிகள் அந்தக் காலத்திலும் இல்லை, இந்தக் காலத்திலும் இல்லை என்று பேசிக் கொள்வார்கள். அவளுடைய கொள்ளுப் பேத்திதான் இவள். இவள் பெயர் மாலவல்லி. இவளைப் போலப் பாடுகிறவர்கள் இந்தக் காலத்தில் இல்லையென்று நான் நிச்சயமாகச் சொல்லுவேன். இனிமேல் யாரேனும் பிறந்தாலும் பிறக்கலாம். இவளுடைய தாயும் என்னுடைய தாயும் நெருங்கிய தோழிகள். இதன் காரணமாகவே நானும் இவளும் நெருங்கிய நட்பு கொண்டவர்களாகி விட்டோம். இவள் இந்த வேளையில் தர்மத்தை மீறிப் பௌத்த விஹாரத்திலிருந்து இங்கு வருவாளானால், அது எனக்காகவும், உயர்ந்த சங்கீதத்துக்கு உயிர் கொடுப்பதற்காகவும் தான். இதைத் தவிர இதில் ரகசியம் வேறு எதுவுமில்லை. இதைஉளவு கண்டு பிடிப்பதனால் உங்களுக்கு ஒரு லாபமும் ஏற்படப் போவதில்லை'' என்றாள் வைகைமாலை.



''வைகைமாலா! உன்னுடைய பேச்சு இனிமையாக இருக்கிறது. ஆமாம்! உன்னுடைய இதயம் கபடமற்ற இதயம். உன்னைப் போன்ற பெண்கள் உலகில் எதையும் எளிதாக நம்பி விடுவார்கள் என்றால் அதில் ஆச்சர்யப்படுவதற்கு ஒன்றும் இல்லை. இவள் அலையூர் கக்கையின் கொள்ளுப் பேத்தி எனத் தெரிந்து கொண்டதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி. அவள் சிறந்த பாடகி என்று அறிந்து கொண்டதிலும் எனக்குச் சந்தோஷம். ஆனால் எனக்கு ஏற்பட்ட சந்தேகம் எல்லாம் இவை அல்ல. நான் தெரிந்துகொள்ள வேண்டியது வேறு; இந்த இளம் வயதில் அவள் ஏன் துறவுக்கோலம் பூண வேண்டும் என்பதுதான்? அவளிடம் மனத்தைக் கவரும் அழகு இருக்கிறது. அதோடு நெஞ்சையள்ளும் இசைக்கலையும் இருக்கிறது. இப்படிப்பட்ட பெண்ணுக்கு வாழ்க்கையில் என்ன வெறுப்பு ஏற்பட்டிருக்கும்...? ஏன் இந்தக் கோலம் பூண்டு திரிய வேண்டும்?'' என்றான்.

இதைக் கேட்டதும் வைகைமாலைக்குச் சிறிது குழப்பம் ஏற்பட்டது. வைகைமாலை சிறு குழந்தையாய் இருக்கும் காலத்தில்தான் அவளுக்கும் மாலவல்லிக்கும் நட்பு ஏற்பட்டது. வைகைமாலையின் தாய் பல்லவ மன்னரின் ராஜசபையில் ஒரு நாட்டியக் கணிகையாகச் சேவை செய்தபோது வைகைமாலை சில வருடங்கள் காஞ்சியில் போய்த் தங்கி இருக்க நேர்ந்தது. அப்பொழுது பல்லவர் சபையில் சிறந்த பாடகியாகத் திகழ்ந்த மாலவல்லியின் தாய்க்கும் வைகைமாலையின் தாய்க்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. ஆனால் திடீரென்று வைகைமாலையின் தாய் இறந்து விடவே, அவளும், அவள் சகோதரி சுதமதியும் காவிரிப்பூம் பட்டினத்தில் தங்கள் பாட்டியிடமே வந்து வசிக்க நேர்ந்தது. இதன் காரணமாக, மாலவல்லியோடு பல வருஷங்கள் அவளுக்குத் தொடர்பு இல்லாமல் போய்விட்டது. ஒரு நாள் வைகைமாலை பௌத்த விஹாரத்துக்குத் தரிசனத்துக்குச் சென்றிருந்தபோது அங்கு பிக்ஷுணிக் கோலத்தில் மாலவல்லியைப் பார்த்தாள்.

சிறுவயதில் அவளைப் பார்த்தவளே ஆயினும் இப்பொழுது அவளை யார் என்று அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது. மாலவல்லியை ஒருநாள் தன் வீட்டுக்கு வரும்படி, வைகைமாலை வேண்டிக் கொண்டாள். மாலவல்லி தன்னுடைய பால்ய சிநேகிதையாகிய வைகைமாலையின் வேண்டுகோளுக்கு இணங்கி ஒருநாள் அவள் வீட்டுக்த வந்தாள். அந்தச் சமயம் வைகைமாலை பிக்ஷுணிக் கோலம் பூண்டதற்குக் காரணம் என்னவென்று விசாரித்தாள். மாலவல்லி தான் துறவுக் கோலம் பூண்டதற்குச் சரியான காரணங்கள் எதுவும் கூறவில்லை. மணிமேகலையைப் போல் உண்மையாக உலகத்தின்மீது ஏற்பட்ட வெறுப்பினால்தான், பிக்ஷுணிக்கோலம் பூண்டதாகச் சொன்னாள்.

வைகைமாலை அவளிடம் மேலும் சில சமயங்களில் நிர்ப்பந்தித்துக் கேட்டபோது உலகத்தில் இன்பம், செல்வம், இளமை, சுகம் போன்றவைகளின் நிலையாமையைப் பற்றி எடுத்துக் கூறத்

தொடங்கினாள். வைகைமாலையும் அவளுடைய இனிமையான வார்த்தைகளில் மயங்கி அவளை மேலும் வற்புறுத்தாமல் விட்டு விட்டாள். அதன் காரணமாக மாலவல்லியின் வாழ்க்கை வரலாற்றை அறிந்து கொள்ள முடியாமல் போயிற்று. நாளாக ஆக மாலவல்லி ஏன் துறவுக்கோலம் பூண்டாள் என்பதைக் கிளறிக் கேட்கும் நோக்கம் அவளுக்கு இல்லாமல் போய் விட்டது. உண்மையாகவே ஏன் அவள் துறவு மனப்பான்மையோடு பௌத்த சங்கத்தில் சேர்ந்திருக்கக் கூடாது என்று வைகைமாலைக்குத் தோன்றியது. ஆனால் உலகில் எதிலும் பற்றுதல் கொள்ளாதவள்போல் இருந்த மாலவல்லி பௌத்த சங்க விதிகளை மீறி ஒருவருக்கும் தெரியாமல் இரவு வேளைகளில் வைகைமாலையின் வீட்டை நாடி வந்து, கீதம் பாடுவதில் ஏற்பட்டிருக்கும் அடங்காத இச்சையும் மோகமும் வைகைமாலைக்குச் சில சமயங்களில் பேராச்சரியத்தைக் கொடுப்பதுண்டு.



சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய காவியங்களிலிருந்து ரசமான பகுதிகளை எடுத்து அழகாக இசையமைத்துப் பாடியது புத்த மதத்தின் மேல் அவளுக்குள்ள பக்தியையும் பற்றுதலையும் காட்டியது. ஒரு பௌத்த பிக்ஷுணி இசைக் கலையில் பற்றுதல் கொண்டு பாடுவது தர்ம விரோதம் என்று எப்படிச் சொல்ல முடியும்? எப்படியோ பூதுகன் மாலவல்லியைப் பற்றிய சந்தேகத்தைக் கிளப்பி விட்டது வைகைமாலையின் மனத்தில் சிறிது குழப்பத்தை ஏற்படுத்திவிட்டது. 'உண்மையாகவே மாலவல்லியின் வாழ்க்கையில் ஏதேனும் ரகசியம் புதைந்து கிடக்குமோ?' என்ற எண்ணம் வைகைமாலைக்கு ஏற்பட்டது. அவள் குழப்பத்தினிடையே ''நீங்கள் சொல்லியபடியே மாலவல்லியின் வாழ்க்கையில் ஏதேனும் ரகசியம் இருக்கலாம். எனக்கும் அந்தச் சந்தேகம் ஆரம்பத்தில் ஏற்பட்டதுண்டு. ஆனால் அவளோடு பழகப் பழக அந்தச் சந்தேகம் என் மனத்திலிருந்து நீங்கிச் சாதாரணமாகவே அவள் துறவறத்தை விரும்பி ஒரு பௌத்த பிக்ஷுணி ஆகியிருக்கிறாள் என்ற எண்ணத்தில் இருந்து விட்டேன். நீங்கள் சொல்லியதன் பேரில் தான் எனக்குச் சந்தேகம் ஏற்படுகிறது. ஆனால் அவளுடைய வாழ்க்கையில் இந்தத் துறவறத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்னால் ஏதேனும் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் அவள் புத்த சங்கத்தில் சேர்ந்து ஒரு பிக்ஷுணியான பின் அவள் ஏதேனும் ரகசியமான சூழ்ச்சிகளில் ஈடுபட்டிருப்பவளாக எனக்குத் தோன்றவில்லை'' என்றாள்.

''உனக்குத் தோன்றாமற்போனதில் அதிசயம் ஏதும் இல்லை. ஆனால் நானும் அவளைப் பற்றித் திடமாக எதுவும் சொல்வதாக நினைத்துக் கொள்ளாதே. அவள் இங்கு வருவதை உளவு பார்க்கிறான் ஒரு பிக்ஷு. அவனை உளவு பார்த்துக் கொண்டு இங்கு நான் வந்தேன். பொதுவாகவே சொல்லுகிறேன், வைகைமாலா! சாம்ராஜ்ய நோக்கத்தில் ஈடுபடும் சூழ்ச்சிக்காரர்களெல்லாம் துவராடைக்குள் புகுந்துகொண்டு பலவிதமான சூழ்ச்சிகளெல்லாம் செய்வதற்குப் பௌத்த சங்கங்கள் நிலைக்களமாகி விட்டன என்ற வருத்தம் தான் எனக்கு. அந்த பிக்ஷு ஏதோ அரசியல் நோக்கம் கொண்டு தான் பௌத்த சங்கத்தில் சேர்ந்திருக்கிறான் என்று நான் நினைக்கிறேன். அவனை நான் எங்கேயோ பார்த்த ஞாபகமாக இருக்கிறது. அது எனக்குச் சரியாக விளங்க வில்லை. அவன் இவளுக்கு விரோதமாக இவளைக் கவனிப்பதிலேயே நோக்கம் கொண்டவனாக இருப்பதால் இவளும் ஒரு அரசை ஸ்தாபிக்கவோ, அல்லது ஒரு அரசை வீழ்த்தவோ பாடுபடும் ஒருத்தியாகத்தானே இருக்க வேண்டும்? இவள் உன் வீட்டுக்கு வருவது அத்தகைய நோக்கத்தோடு இருக்கலாம்!''

இதைக் கேட்டதும் வைகைமாலையின் சந்தேகமும் குழப்பமும் அதிகமாகி விட்டன. ''நீங்கள் சொல்லிய பிறகு தான் எனக்கும் சந்தேகத்தின் மேல் சந்தேகம் ஏற்படுகிறது. ஆனால் நான் சில புத்திபிசகான காரியங்கள் செய்து விட்டேன். மறுபடியும் இந்நாட்டில் சோழ சாம்ராஜ்யம் ஏற்பட வேண்டும் என்று எனக்குள்ள ஆர்வத்தை அடிக்கடி என் பேச்சின் மூலம் அவளிடம் எடுத்துக்காட்டி விட்டேனே!''

''அப்படியா! அதனால் ஒன்றும் குடி முழுகிப் போய் விடவில்லை. ஆனால்

என்னைப் பற்றி நீ அவளிடம் ஒன்றும் சொல்லி விடவில்லையே?''

''உங்களைப் பற்றிச் சொல்லாமல் என்னால் எப்படி இருக்க முடியும், எப்பொழுதும் உங்களைப் பற்றிய நினைவாகவே நான் இருக்கும்போது?''

''என்னைப்பற்றி அவளிடம் சொல்லி விட்டாயா? நம்முடைய காதல் விவகாரங்கள் மட்டும் தானே அவளுக்குத் தெரியும்? நான் இங்கு எதற்காகப் பாடுபடுகிறேன், என் லட்சியம் என்ன என்ற ரகசியமும் அவளுக்கு....!''

''.........அதெல்லாம் தெரியாது. உங்கள்மீது எனக்குள்ள அன்பைத்தான் நான் அடிக்கடி அவளிடம் சொல்லி இருக்கிறேன். அதைத் தவிர நீங்கள் பெரிய நாஸ்திகர் என்ற உண்மையையும் சொல்லியிருக்கிறேன்.''

''பிழைத்தேன். நீ உன்னுடைய ஆர்வத்தில் என்னுடைய ரகசிய நடவடிக்கைகளையெல்லாம் சொல்லி விட்டாயோ என்ற பயம்தான் எனக்கு. நீ இந்த உலகத்திலேயே மிகவும் சிறந்த சௌந்தர்யவதி என்று மட்டும்தான் இத்தனை நாட்களாக நினைத்துக் கொண்டிருந்தேன். இன்றுதான் நீ இந்த உலகிலேயே மிகவும் சிறந்த புத்திசாலி என்ற உண்மையையும் தெரிந்து கொண்டு விட்டேன். உன்னைக்காதலியாக அடைந்தவன் சோழ சாம்ராஜ்யத்தைப் போல் ஒரு சாம்ராஜ்யமல்ல, முந்நூறு சாம்ராஜ்யங்களை ஏற்படுத்தவும் ஏற்படுத்தலாம்; நினைத்தால் அழிக்கவும் அழிக்கலாம்'' என்றான், அவளுடைய கன்னத்தை மெதுவாகத் தட்டியவாறு.

''வீணாகப் பரிகாசம் செய்யாதீர்கள். நீங்கள் முந்நூறு சாம்ராஜ்யங்களையும் ஏற்படுத்தவும் வேண்டாம்; அழிக்கவும் வேண்டாம் ஒரே ஒரு சோழ சாம்ராஜ்யத்தை இந்த நாட்டில் ஏற்படுத்துவதற்கு உங்களால் ஆன முயற்சிகளையெல்லாம் செய்யுங்கள், அது போதும்'' என்றாள் வைகைமாலை.

''ரொம்ப சரி, முந்நூறு சாம்ராஜ்யங்கள் வேண்டாமென்றால் எனக்குச் சிரமம் குறைவு. சோழ சாம்ராஜ்யத்தை மட்டும் எப்படியாவது ஏற்படுத்தி விடுகிறேன். அதிருக்கட்டும்—நீ இந்நாட்டில் சோழ அரசை ஏற்படுத்த வேண்டும் என்ற வார்த்தைகளைச் சொல்லும் போது அவள் உன் அபிப்பிராயத்துக்கு ஆதரவாகப் பேசுகிறாளா? அல்லது அதற்கு எதிர்ப்பாகப் பேசுகிறாளா?''

''அவளும் என் வார்த்தைகளை ஆதரித்துத்தான் பேசுகிறாள். அதை நினைக்கும் போது அவள் நமக்கு எதிராகச் சூழ்ச்சி செய்கிறவள் என்று தோன்றவில்லை?''

''வைகைமாலை, நீ களங்கமற்ற உள்ளம் படைத்தவள். எல்லாவற்றையும் நம்புகிறாய். உளவு பார்த்து எதிரிகளை ஒடுக்க வேண்டும் என்று நினைப்பவர்கள், எதிரிகளின் கொள்கைகளைத் தாங்களும் ஆதரிப்பது போல் நடித்தால்தான் அவர்களிடமிருந்து இன்னும் பல விஷயங்களை அறிந்து கொள்ளலாம் என்ற சூழ்ச்சியோடு காரியம் செய்பவர்களாய் இருப்பார்கள். பிறர் மாத்திரம் அல்ல. நானும் அப்படித்தான். இன்று மாலை நான் சம்பாதிவன புத்த விஹாரத்துக்குச் சென்றபோது அங்கொரு பௌத்த பிக்ஷுவுடன் நெருங்கி அவருக்கு ஆதரவாகப் பேசுவதுபோல் பேசிப் பல ரகசியங்களைத் தெரிந்து கொண்டேன். அதைப் பற்றிப் பின்னால் உனக்கு விவரமாகச் சொல்கிறேன். இப்பொழுது நீ எப்படி மாலவல்லியிடமிருந்து விஷயங்களைக் கிரகிப்பாய் என்பதுதான் எனக்குத் தெரியவில்லை. அவள் என்னோடு பேசுவாளா? பேசினால் கொஞ்சமாவது அவளைப் பற்றிய உண்மையான விவரங்களைத் தெரிந்து கொள்ள முடியும்..?'' என்று வைகைமாலையிடம் அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போது புத்தபிக்ஷுணியாகிய மாலவல்லி வந்து நின்றாள். (தொடரும்)

மக்ளீன்ஸ் இப்போது

பற்களை முன்னைவிட அதி வெண்மையாக சுத்தம் செய்கிறது!

மகத்தான ஓர் செய்தி! மக்ளீன்ஸ் பற்பசையில் இப்போது வியக்கத் தக்கதோர் புதிய பொருள் சேர்க்கப்படுவதால் அதை உபயோகித்து பற்களைச் சுத்தம் செய்யும் பொழுது பற்கள் முன்னைவிட அதி வெண்மையாகவும் சுத்தமாகவும் விளங்குவதுடன் நல்ல ஆரோக்கியத்தைக் குறிக்கின்றது. நீங்களும் மக்ளீன்ஸ் பற்பசையை உபயோகித்து உங்கள் பற்கள் எவ்வளவு வெண்மையாக விளங்குகின்றன என்று கவனியுங்கள்.



மக்ளீனால் வெண்மையாக்கப்பட்ட பற்கள்

ஆரோக்கியமானதுமட்டுமல்லாமல் பற்சிதைவினின்றும் காப்பாற்றப்படுகின்றன.

மக்ளீன்ஸ் பற்பசையினால் பற்களை சுத்தம் செய்யுங்கள். முதலில் நுரையையும் புதுமை மணம் கமழுவதையும் உணர்வீர்கள். பின்பு பற்கள் முன்னைவிட அதி வெண்மையாக சுத்தம் செய்யப்பட்டிருப்பதை குறிக்கின்றது.

உங்களுடைய பற்களின்மேல் படிந்திருக்கும் வழுவழுப்பான அசுத்தத்தில் 'மேபாஸிட்ஸ்' என்று கூறப்படும் அசுத்தம் கலந்திருக்கிறது. இந்த 'மேபாஸிட்ஸ்' முறையே சரிவர அகற்றப்படாவிட்டால் அமிலங்கள் பற்களின் இனாமலை அரித்து, பற்கள் சிதைவடைகின்றன. 'மேபாஸிட்ஸ்'ஸை அறவே அகற்ற, இவைத் களையச் செய்வதுதான் சரியான வழி. மக்ளீன்ஸ் பற்பசை ஒன்றில் மட்டுமே 'மேபாஸிட்'ஸை கரைக்கக்கூடிய விசேஷ பொருள் சேர்க்கப்பட்டிருக்கிறது. இது 'மேபாஸிட்'ஸை மிருதுவாக, அபாயமின்றி, சீக்கிரத்தில் கரைத்து அப்புறப்படுத்துகிறது. இதுவே பற்சிதைவினின்றும் பற்களைத் தவிர்ப்பதற்கான சிறந்த மார்க்கம்.


சுத்தமான, வெண்மையிற, ஆரோக்கிய பற்களை அடைய தினந்தோறும் காலையிலும் இரவிலும் மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசையை உபயோகித்து பற்களைச் சுத்தம் செய்யுங்கள்.



மக்ளீன்ஸ் பற்களை அதிவெண்மையாக சுத்தம் செய்கிறது.

PITY 41 TAM.

மக்ளீன்ஸ் பிலிம் ரீல் ஷோ — சினிமா உலகத்தில் சம்பந்தப்பட்ட செய்திகளும் சங்கீதமும் சேர்ந்த நிகழ்ச்சியைப் பிரதி திங்கட்கிழமைதோறும் இரவு 8-30 முதல் 9 மணி வரை ரேடியோ ஸிலோன் 41 மீட்டர்களில் கேளுங்கள்.



நாட்டு வைத்தியம்

ஸ்ரீஹரி

2. உலகம் போகும் போக்கு

"ஆஹா! பேஷ், பேஷ்! என்ன ஆனந்தம்! பேரானந்தம்! பிரும்மானந்தம்!" என்று அண்ணா குதிக்க ஆரம்பித்து விட்டார்.

பொழுது போக்காக என் வீட்டுக்கு வந்திருந்தார் அண்ணா. அவருக்காகக் காப்பி கொண்டு வர உள்ளே சென்ற போது ஒரு துணியை விரித்து அதன் மேல் குழந்தை கண்ணனைப் படுக்க விட்டுச் சென்றாள் கண்ணனின் தாயார்.

குழந்தை கவிழ்ந்து கொண்டான். இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் பார்த்தான். தனியே விடப்பட்டதாலோ என்னவோ, முகத்தைச் சிறிது சுளித்துக் கொண்டான். அழத் தொடங்கி விடுவான் போலிருந்தது. அப்போது, சாய்வு நாற்காலியின் மேல் உட்கார்ந்திருந்த அண்ணா கைப் பிரம்பை 'லொட், லொட்' என்று இரண்டு தரம் தட்டினார். குழந்தை அப் பிரம்பைப் பார்த்தான். அதிலிருந்து பார்வையை மேலே ஓட்டித் தலையை நிமிர்ந்து அண்ணாவின் முகத்தைப் பார்த்தான். அண்ணாவின் முகத்தில் ஒரு புன்னகை மலர்ந்தது. குழந்தையும் பொக்கை வாயைத் திறந்து சிரித்தான். 'சொன்னு' ஒழுகியது.

'லொட், லொட்' என்று பிரம்பை மறுபடியும் தட்டினார் அண்ணா.

குழந்தை கண்ணன் பிரம்பை ஒரு விளையாட்டுச் சாமான் என்று எண்ணி இருக்க வேண்டும். அதை எடுத்துக் கொள்ள எண்ணிக் கையை நீட்டி முன்னுக்கு ஊர்ந்து செல்ல முயன்றான். ஒரு முறை, இரண்டுமுறை, மூன்று முறை.

இதை வெகு கவனமாகப் பார்த்தபடி இருந்த அண்ணா மேற்சொன்ன விதம் குதூகலப்பட்டுப் பேசினார்.

"என்ன ஆனந்தத்தைக் கண்டீர்கள்?" என்று கேட்டேன்.

"என்ன ஆனந்தமா? இதோ கண்ணனைப் பார்! முன்னுக்கு நகர இவன் செய்யும் பெரு முயற்சிகள்தான் என்ன அபாரம்! ஆனால் அதன் விளைவு என்ன? பின்னுக்குத்தான் நகர்ந்திருக்கிறான்! இதனால் இன்றைய உலகத்தின் போக்கிலுள்ள ஓர் உண்மை புலனாகிறது. அதை எவ்வளவு அழகாகக் காண்பிக்கிறான் நம் கண்ணன்! குழந்தைகள் பிரும்ம ஸ்வரூபம் என்பார்களே, அது உண்மைதான்" என்று கூறினார் அண்ணா.

இதற்குள் காப்பியைக் கொண்டு வந்து வைத்துவிட்டு, "அண்ணா! இப்படித்தான் தம் கற்பனையாக எதையாவது சொல்லிக் கொண்டே இருப்பார்" என்று பெருமையுடன் சொல்லிச் சிரித்து விட்டுக் கண்ணனை எடுத்துக் கொண்டு உள்ளே சென்றாள் அவன் தாயாரான யசோதை.

இதற்குள் அரைக்கண்ணை மூடியபடி சிந்தனையில் ஆழ்ந்து விட்டார் அண்ணா. காப்பியைப் பார்க்கவே இல்லை.

* * *

தொழில், தொழிற்சாலை, ரஸாயனம், விஞ்ஞானம் என்ற துறைகளிலெல்லாம் முன்னேறி வருகிறது இன்றைய உலகம். மனிதனின் வாழ்க்கைத் தரமும் எவ்வளவோ உயர்ந்து விட்டது.

வானத்தை எட்டும் புகை போக்கிகளுடன் எத்தனையோ தொழிற்சாலைகள் நிர்மாணிக்கப்பட்டன. அவற்றை அடுத்து மாட மாளிகைகளுடன் பெரிய பெரிய நகரங்கள் உண்டாயின. உடல் உழைப்பினால் பல நாட்கள் கஷ்டப்

பட்டுச் செய்ய வேண்டிய வேலையை இன்று மனிதன் சில மணி நேரத்தில் யந்திர சக்தியால் முடித்து விடுகிறான்.


இவ்வகை 'முன்னேற்றங்களை' மக்கள் விரும்பி ஏற்கின்றனர். கிராமங்களை விட்டு நகரங்களில் குடிபுகுகின்றனர். நாகரிக வாழ்க்கையை விரும்பி ஏற்கின்றனர். பழைய வழக்க பழக்கங்களைக் கைவிடுகின்றனர். ஏன்? பழைய கிராமாந்திர வாழ்க்கையில் கடினமான உடல் உழைப்பு அவசியம்; எளிய—ஆடம்பரமற்ற வாழ்வுடன் திருப்தி அடைய வேண்டும். நாகரிகமும் முற்போக்கும் உள்ள நகர வாழ்க்கையிலோ தொழிற்சாலையில் வேலை செய்வோருக்குக்கூட உடல் உழைப்பில் அவ்வளவு களைப்புத் தட்டுவதில்லை; சலிப்பும் உண்டாவதில்லை

நகர வாழ்க்கையை மக்கள் மேற்கொள்ள முற்பட்டதன் காரணம் என்ன? உடலுழைப்பு குறைவு. தனிமை என்பதும் இல்லை. கூடிக் கூடி, கும்பல் கும்பலாகக் குழுமிப் பொழுதை வீணாக்க எத்தனையோ விஷயங்கள் இருக்கின்றன. நகர வாழ்க்கையை விரும்பி ஏற்கும் மக்கள், அதனால் விளையும் எத்தனையோ விபரீத விளைவுகளுக்கு உள்ளாகின்றனர். ஆனால் அவற்றைப் பற்றிச் சிந்திக்கவும் இவர்களுக்கு நேரம் இருப்பதில்லை. களிப்பூட்டும் காட்சிகள், காட்சிச் சாலைகள் — இவற்றிலிருந்து மனத்தைத் திருப்பி வாழ்க்கையின் நன்மை தீமைகளைச் சிந்திக்கவும் அவர்களுக்கு நேரம் ஏது?

பள்ளிக்கூடங்களில் படிக்கும் பிள்ளைகள் தானென்ன? முற்போக்கென்னும் மனப்பான்மையால் பழைய கட்டுதிட்டங்களைக் கைவிட்டு விட்டனர். உரிமை, சுதந்திரம் என்னும் இரண்டு சொற்களையும் அப்பாவிகளாக்கி இஷ்டமான படி வீசிப் பேசி, 'கண்டதே காட்சி, கொண்டதே கோலம்' என்று வாழ்கின்றனர். கட்டுதிட்டங்களைக் களைந்து, நெறி தவறி, நியமத்தைக் கைவிட்டு, நல்வழியினின்றும் பிறழ்ந்து உணர்ச்சி வேகத்தில் தாறுமாறான நடத்தையை மேற்கொள்ளுகின்றனர். பரபரப்பும் பேராசையும் மிளிர ஒரு திட்டமில்லாத போக்கில் போய், விளக்கில் விழும் விட்டில் பூச்சியாகத் தம் நாசத்தைத் தாமே தேடிக் கொள்கின்றனர். படிப்பு முடிந்து பட்டம் பெற்று வருவோர் பலரில் அறிவும், ஆற்றலும் பெற்றுக் கட்டுதிட்டங்களுக்குட்பட்ட மனம், வாக்கு, செயல் இவைகளுடன் கூடியவர்கள், கலங்காத நெஞ்சம், நிரம்பிய பண்பும், பரபரப்பற்ற மனமும், தீர்க்கமாகச் சிந்திக்கும் திறனும் பெற்றவர்கள் வெகு சிலரே தானிருப்பார்கள். பரீக்ஷையில் தேறிப் பட்டம் பெற்றவர்களில் பலருடைய அறிவு எவ்வளவு முதிர்ச்சி யடைந்திருக்கக்கூடும். ஏதோ, முந்தின பத்து வருஷத்திய கேள்வித் தாள்களை எடுத்து அவற்றுக்கு விடைகளை எழுதிப் பழகிக் கொள்வதும் அவற்றில் ஏதேனும் 4-5 கேள்விகள் வந்தால் அக் கேள்விகளுக்கு விடையளித்துப் பரீக்ஷையில் வெற்றி பெறுவதும்தானே அவர்கள் படிப்பாக இருந்திருக்க முடியும்? இந்தப் படிப்பினால் என்ன பயன்? பனையோலையை எரித்துத் தீர்த்த பிறகு நெருப்பு இருக்குமா? அல்லது எருக்குழியில் கொட்டக் கரியும் சாம்பலுந்தான் கிடைக்குமா? நகர வாழ்க்கையின் நாகரிகப் போக்கினால் கிடைத்த பலன் என்ன?

பல துறைகளிலும் விஞ்ஞானம் முன்னேறியது உண்மைதான். வைத்தியத் துறையிலும் முன்னேறித்தான் இருக்கிறது. இளம் பிள்ளைகளுக்கு வரும் வயிற்றுப் போக்கு, டிப்தீரியா என்னும் ரோகிணி, டைபாய்டு என்னும் ஸந்நிபாத ஜுரம், மலேரியா என்னும் விஷம ஜுரம் என்ற பல நோய்களைப் பெரிதும் போக்கியாயிற்று. பிளேக் என்னும் கொள்ளை நோய், பெரியம்மை, விஷூசிகா முதலியவை இல்லவே இல்லை என்றும் சொல்லலாம். இவற்றையெல்லாம் இவ்விதம் போக்க உதவியது வைத்தியத் துறையில் முன்னேற்றம் பெற்ற விஞ்ஞானந்தான். ஆனால்....?

மேற்சொன்ன விதத்தில் விஸ்தாரமாக எழுதிவரும் மேல்நாட்டு விஞ்ஞானி யொருவர் — சுமார் ஐம்பது வருஷ காலம் வைத்தியத் துறையில் ஆராய்ச்சிகளைச் செய்து பல உண்மைகளைத் தெளிந்து உலகத்துக்கு எடுத்துச் சொல்ல முன்வந்த பெரியார்—சஸ்திர சிகிச்சையில் அதற்கு முன் யாரும் செய்யாத புதிய அரிய சிகிச்சைகளை அற்புதமாகவும் வெற்றிகரமாகவும் செய்த கலைஞர்—உலகப் புகழ்பெற்ற சஸ்திர சிகிச்சை வல்லுனராயிருந்தும், தொழிலைத் தொடர்ந்து நடத்திக் கோடி கோடியாகப் பணத்தைக் குவித்திருக்கலாமாயினும், அதை விரும்பாமல் ஆராய்ச்சித் துறையில் தமது இளம் வயதிலே இறங்கிய தியாகி, நோபல் பரிசு பெற்ற கனவான், அலெக்ஸிஸ் காரல் என்பார். தொடர்ந்து எழுதும் போது, ஒரு 'ஆனால்' போட்டே மேலும் எழுதுகிறார்...... அவர் அப்படி என்ன எழுதுகிறார் என்பதை அடுத்த இதழில் பார்க்கலாம். (தொடரும்)



தன்மையில் உயர்ந்த
வெண்மை
METTUR INDUSTRIES
M.81
மேட்டூர்
மல்கள் &
லாங்கிளாத்துகள்
சிக்கனமான விலைகளில் விற்கப்படுகின்றன
METTUR INDUSTRIES LTD
METTUR MULL
மேட்டூர் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்,
மேட்டூர் அணை — சேலம் ஜில்லா
மானேஜிங் ஏஜண்டுகள்
W. A. பியர்ட்ஸெல் & கம்பெனி (பிரைவேட்)
லிமிடெட், மதராஸ்-1.


நோபெயின்
உபயோகியுங்கள்
கால்கெமிகோ வின் வலிநீக்கும் களிம்பு
நோபெயினை சற்றே தேய்த்து லியக்கத்த க்க வலிநிவாரணத் தைப் பெறுங்கள்
நோபெயின் களிம்பின் பல உபயோகங்களில் சில
தலை வலி
மார்புச் சளி
இடுப்பு வலி
NOPAIN
தி கல்கத்தா கெமிகல் கம்பெனி லிட்., கல்கத்தா-29
ஆபீஸ்: 6/149, பிராட்வே, சென்னை -1


நரஸூ காபி
அருந்தி அதன் பிரத்யேகமான ருசியை அனுபவியுங்கள்
நரஸுஸ் மான்யுபாக்சரிங் கோ. பிரைவேட் லிட். சேலம் & சென்னை
NCZ-23 ATM



விறகுக் கடைவேலாயுதம் வெற்றிபெற்று விட்டார் என்னும் செய்தி பத்திரிகைகளில் வெளியாகி விட்டது. அவர் சட்டசபைத் தேர்தலுக்கு எங்கள் தொகுதியில் நின்றிருந்தார். அவருக்கு வெற்றி கிடைத்த விதத்தை வெளிச்சம் போட வேண்டியது அவசியம் என்று தோன்றுவதால் இதை எழுதுகிறேன்.

வேலாயுதத்துக்கு வயது முப்பத்தொன்பது தான் இருக்கும். ஆனால் பார்வைக்கு நாற்பத்தொன்பது வயது ஆனவராகத் தோற்றமளிப்பார். அவருக்கு ஒரு கண் இயற்கையானது; மற்றொன்று செயற்கையானது என்பது சொல்லாமலே விளங்கும். நீட்டுப் போக்கான முகம். தடித்த உதடு. உள்ளடங்கி எழும்பிய மூக்கு. அடர்த்தியான கறுத்த மீசை. அறிவிற் சிறந்த பெரியோர் கோஷ்டியில் அவரைச் சேர்க்க இயலாது என்பதை வருத்தத்துடன் தெரிவித்து விடுகிறேன். அப்புறம் ஒரு தீர்மானத்துக்கு வரவேண்டியது வாசக நேயர்கள் பொறுப்பு. பொதுவாக, அவர் அணிந்திருக்கும் உடைகளில், கரியின் கருமை ஏறுமல் இராது. கல்வியறிவைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். கறுப்பாகத் தோன்றுபவை யெல்லாம் எழுத்துக்கள் என்ற எண்ணம் — அதுவும் அசைக்க முடியாத எண்ணம் கொண்டவர். தொழில்: விறகு, கரி வியாபாரம். இப்பொழுது செங்கல், சுண்ணாம்பும் சிறிது காலமாகச் சேர்ந்திருக்கின்றன. எனவே அவரது துணிமணிகளில் சிற்சில சமயம் காவிக் கறையையும் காணலாம்.

வேலாயுதம் அவர்கள் எங்கள் தொகுதியில் சுயேச்சை அபேட்சகராகத்தான் நின்றார். அவருக்கு ஒரு கட்சியின் சார்பில் நிற்கலாம் என்னும் விஷயம் தெரியாது. தெரிந்த பொழுது தபாலாபீஸிலும், புகை வண்டி நிலயத்திலும் சினிமா கொட்டகைகளிலும் போய் நின்று நின்று அலுத்துப் போனார். காரணம் யாரோ ஒருவர் 'ஒரு கட்சியின் சார்பில் தேர்தல் டிக்கட்டைத் தாக்கல் செய்திருக்கலாமே!' என்று சொல்லி யிருக்கிறார். 'டிக்கட்' என்ற சொல் அவர் கேள்விப்பட்ட சொல் ஆதலால், அது கிடைக்கக்கூடிய இடங்களில் எல்லாம் தேடிப் பார்த்திருக்கிறார்.

ஜனவரி மாதம் இருபதாம் தேதி அன்று இரவு இரண்டு மணிக்கு, உலகம் அனைத்தும் நல்ல நித்திரையில் ஆழ்ந்திருந்தது. அப்பொழுது வேலாயுதத்துக்கு விழிப்புக் கொடுத்தது. 'நாமும் தேர்தலுக்கு நின்றால் என்ன?' என்ற எண்ணம் உதித்து உள்ளத்திலே ஆலம் வேராக உறுதிப்பட்டது. உடனே தம் படுக்கையிலேயே தனிமையாக நிற்க ஆரம்பித்து விட்டார். அதுவும் அவர் செய்த அந்தச் சிரசாஸனம் எத்தனை நேரம் என்கிறீர்கள்; அவரது கால்கள் தாமாக ஓய்ந்து படுக்கையில் சாயும் வரைக்கும். இரவு இரண்டு மணிக்கு விழித்தவருக்கு அப்புறம் உறக்கமே கொள்ளவில்லை. மறுநாள் தமது அபேட்சைப் பத்திரத்தைத் தாக்கல் செய்த பின்தான் நிம்மதியான நீண்ட தூக்க விட்டார். ஆனால் அந்த நீண்ட தூக்கத்துக்குப் பின் அவர் சுவாசித்த காற்று அவர் உள்ளத்திலே பெரும் கவலையையும் ஓயாத தலைவேதனையையும் புகுத்தி விட்டது.

அன்று பதினொரு மணி இருக்கும். வழியில் நான் அவரைச் சந்திக்க நேரிட்டது. ஏதோ கவலையுற்றவராய்க் காணப்பட்டார். "முதலாளி! என்னவோ ஒரு மாதிரி இருக்கிறீர்களே, என்ன விஷயம்?" என்று அவரைக் கேட்டு வைத்தேன்.

"ஒரு விசித்திரமான சங்கடத்தில் மாட்டிக் கொண்டிருக்கிறேன்!" என்றார் அவர்.

"என்ன? விசித்திரமான சங்கடமா? அப்படி என்ன ஐயா உங்களுக்கு ஒரு சங்கடம்?"

"தேர்தலுக்கு ஒரு சின்னம் அவசியம் தேட வேண்டுமாம்!"

"தேர்தலா யிருந்தால் உங்களுக்கு என்ன? நீங்கள் பாட்டுக்கு உங்கள் வியாபாரத்தைக் கவனியுங்கள். தேர்தலுக்கு நிற்கிறவர்கள் தேடிக் கொண்டு போகிறார்கள்!"

"தினம்தான் வியாபாரம் பண்ணுகிறோம்; ஆனால் தினம் தினம் தேர்தல் வருமா?"

"நீங்கள் சொல்வதைப் பார்த்தால், கடவுள்தான் உங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று தோன்றுகிறது. நீங்கள் தேர்தல் கிர்தலுக்கு நின்று வைக்கவில்லையே?" என்றேன்.

"என்ன அப்படிச் சொல்லி விட்டீர்கள்? நிற்பது என்று முடிவு செய்து அபேட்சைப் பத்திரமும் தாக்கல் செய்து விட்டேனே!"

"அட! இதென்ன தாக்கலா மோக்கலா செய்து விட்டீர்கள்? உங்களுக்கு எதற்குங்க இந்தத் தேர்தல் சங்கடம்?"

"ஏன் என்று கேட்கிறீர்கள்? ஊர் பேர் தெரியாதவர்க ளெல்லாம் நிற்கிறார்கள். இந்த விறகுக்கடை வேலாயுதம் என்ன பாவம் செய்து விட்டான், தேர்தலில் நிற்கக் கூடாது என்று சொல்வதற்கு!" என்றார்.



"உண்மையான வார்த்தை! உங்களுக்கு என் வாழ்த்து!"

"வாழ்த்தெல்லாம் அப்புறம் ஆகட்டும். முதலில் சொல்லுங்கள், என்ன சின்னம் வைத்துக் கொள்ளலாம்?"

"சின்னங்களுக்கா பஞ்சம்? எத்தனையோ இருக்கின்றன. ஒன்றைப் பொறுக்கிக் கொண்டால் போயிற்று!"

"முதலில் உதாரணத்துக்கு ஒன்று இரண்டு சொல்லுங்களேன், பார்ப்போம்!"



"தம்பட்டம்: இதைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?"

"நல்ல சின்னம்தான். ஆனால் நல்லமுத்து முந்திக் கொண்டு விட்டார்!"

"ஜாலரா?"

"அதற்கு ஒருவன் முனைந்து விட்டானே!"

"விட்டுத் தள்ளுங்கள்! நாயனத்துக்கு ஒரு ஒத்து உண்டே, அது!"

"நாயனத்துக்கும் ஒத்துக்கும் வித்தியாசம் தெரியாதுங்களே!"

"அப்படியானால் வாலில்லாக் குரங்கைப் போட்டுக் கொண்டு விடுங்கள்!"

"இதற்காக இரண்டு பேருக்கிடையே பெரிய போட்டி ஏற்பட்டு விட்டது. மயிர் பிடிச் சண்டையே வந்து விடும் போலாகி விட்டது. கடைசியில் திருவுளச் சீட்டு போட்டுத் தீர்மானித்தாங்க!"

"கலை மான்....?"

"கலை, மகாலை எல்லாம் கூடாதுங்க!"

"வேங்கைப் புலி...."

"பெயரைக் கேட்கவேபயமாயிருக்கிறது!"

வேலாயுதத்துக்கு நான் சொல்லாத சின்னங்கள் இல்லை. ஆனால் ஒன்றுகூட அவருக்குப் பிடிக்கவில்லை. கடைசியில் நானே அலுத்துப் போய், மாலையில் யோசித்துச் சொல்வதாகக் கூறி விடைபெற்றுக் கொண்டேன். வேலாயுதத்துக்கு உகந்த சின்னத்தைப் பற்றி யோசிப்பதிலேயே பகல் பொழுது முழுவதும் போய் விட்டது. வேலாயுதம் எனக்கு மிகவும் வேண்டியவர். விறகு, கரி மட்டும் கடன் கட்டாக வாங்குவதில்லை; காசும் கைமாற்றாக வாங்குவது உண்டு. அவருக்குச் சின்னம் பொறுக்கும் விஷயத்தில் சின்ன உதவிகூடச் செய்யவில்லை என்றால்....? சொறி நாய், வெறி நாயிலிருந்து வாலறுந்த நரி வரையிலும், வௌவாலிலிருந்து மூட்டைப்பூச்சி, கொசு வரையிலும், கூஜாவிலிருந்து லோட்டா வரையிலும் என்னவெல்லாமோ சின்னங்களை யோசித்துப் பார்த்தேன். ஒன்றுகூட அவருக்கு உகந்ததாக என் அறிவுக்கு எட்டிய வரையில் அமையவில்லை.

"சின்னம் பொறுக்குவது ரொம்பச் சிரமமான காரியம்தான். என்ன செய்வது, சொல்லுங்கள்! ஒரு சின்னமாவது உங்களுக்கு உகந்ததாக அமையவில்லையே!" என்றேன்.

"அது எப்படிங்க அமையாமல் இருக்க முடியும்?" என்று உணர்ச்சி வேகத்தில் உரக்கக் கிறீச்சிட்டார் வேலாயுதம். அதோடு தமது இயற்கை - செயற்கைக் கண்களால் என்னை ஒரு முறை ஊன்றிக் கவனித்தார்.

என் உள்ளத்திலே ஒரு உணர்ச்சி புகுந்தது. நான் என் வாழ்க்கையில் உயிருள்ள ஆந்தையை இவ்வளவு நெருக்கத்தில் நின்று பார்த்தது கிடையாது. அவர் பார்த்த பார்வைக்கும் உண்மை ஆந்தையின் பார்வைக்கும்



ஒரு சிறுநூல் அளவுகூட வித்தியாசம் இருக்க முடியாது என்ற முடிவுக்கு வந்தேன். உடனே நானும் மகிழ்ச்சி வெறியில் கிறீச்சிட்டேன். "கிடைத்துவிட்டது, முதலாளி, கிடைத்து விட்டது!" என்றேன் நாலு ஊருக்குக் கேட்கும்படியாக.

"கிடைத்து விட்டதா? சொல்லுங்கள் எனக்கும்!" என்று துரிதப்படுத்தினார் வேலாயுதம்.

"ஆண்டவன்மீது ஆணை! மிக மிகப் பொருத்தமான சின்னம்!"

"என்னவென்றுதான் சொல்லுங்களேன்!"

"ஆந்தை!"


"ஆந்தையா?"

"ஆம். ஆந்தையேதான். உங்களுக்கு உகந்த பொருத்தமான சின்னம் அதுவேதான்!"

"என்னங்க? என்னைக் கேலி கிலி செய்யுறீங்களா, என்ன?"

"புத்தி, புத்தி! உங்களை நான் கேலி செய்வேனா? இந்தச் சின்னம் உங்களுக்கு ரொம்ப ரொம்பப் பொருத்தம். இப்படி ஒரு சின்னம் வைத்துக் கொள்ளலாம் என்று யாருமே நினைத்திருக்க மாட்டார்கள். அதோடு இந்தக் கவர்ச்சிகரமான சின்னத்தை ஒரு தடவை வாக்காளர்களிடையே பிரபலப் படுத்தி விட்டால், அப்புறம் அவர்கள் இலேசில் மறக்க மாட்டார்கள்!"

"இருந்தாலும் நீங்கள் சொல்லும் அந்தச் சின்னம் கொஞ்சம் விசித்திரமாக...."



"அதெல்லாம் ஒன்றும் இல்லை. கேலி பண்ணக் கூடியதாக இருக்கிறது என்பதற்காக நீங்கள் யோசிக்கிறாற் போலிருக்கிறது; இதில் ஒரு தவறும் கிடையாது, முதலாளி! அதோடு ஆந்தையையா நாம் சின்னமாகக் கொள்கிறோம். உணர்ச்சியற்ற மரக்கட்டையாலான ஆந்தையைத்தானே பிரசாரத்துக்காக உபயோகிக்கப் போகிறோம்? ஆந்தைக்கும் மர ஆந்தைக்கும் உள்ள வித்தியாசம் உங்களுக்குத் தெரியாததல்லவே!"

நான் என்ன சொல்லியும் வேலாயுதத்துக்குத் திருப்தி உண்டாகவில்லை. ஒரு மணி நேரம் விவாதம் நடத்திய பிறகு அரை மனத்தோடு ஒருவாறு அந்தச் சின்னத்தை ஒப்புக் கொண்டார்.

"அது சரி. சின்னம் பற்றிய பிரச்சினை ஒரு படியாக முடிந்தது. தேர்தலில் வெற்றி பெறுவதற்கு என்ன செய்ய வேண்டும்? முதலில் அதைச் சொல்லுங்கள்!" என்று கம்பீரமாகக் கேட்டார் வேலாயுதம்.

"முதன் முதலில் பிரசாரத்துக்குச் சரியான ஒரு ஆளைத் தேடிப்பிடிக்க வேண்டும்!"

"அதற்குப் பிறகு?"

"வாக்காளர்களின் நம்பிக்கையைப் பெற முயற்சிக்க வேண்டும்!"

"அது எப்படி?"

"அதுதான் சற்றுச் சிரம சாத்தியமான காரியம். வேறென்ன?"

"இருந்தாலும் காரியத்தில் இறங்கியபின் சிரமத்தைப் பார்த்தால் கட்டி வருமா?"

"வராதுதான். என்னதான் 'வோட்டுப் போடுங்கள்' 'வோட்டுப் போடுங்கள்' என்று கரடியாகக் கத்தினாலும், இந்த வாக்காளர்கள் இருக்கிறார்களே, இவர்கள் ஆடு சாய்ந்த வழி, மாடு சாய்ந்த வழியாகத்தான் நடந்து கொள்ள முயற்சிக்கிறார்கள். எது எப்படி இருந்தாலும் நம்மைக் காட்டிலும் நல்ல

அபேட்சகர் அந்தத் தொகுதிக்குக் கிடையாது என்ற நம்பிக்கையை நாம் ஊட்டியே தீர வேண்டும்; பாலடையினலாவது வலுக் கட்டாயமாகப் புகட்டியே தீர வேண்டும்!''

''நம்பிக்கை ஊட்ட நம்மாலான முயற்சி களைச் செய்து பார்க்கலாம்!''

''அப்படியானால் கவலை இல்லை. ஆண்டவன் பெயரைச் சொல்லிக் கொண்டு தேர்தல் களத்தில் குதித்து விடுங்கள். அப்புறம் அவன் விட்ட வழி விடட்டும்!''

வேலாயுதம் சட்டி மூளையின் ஆசிரியர் கோணி ஊசியாரைப் பிரசார மந்திரியாக உடனடியாக நியமனம் செய்து விட்டார். இதனால் அவருக்கு இரட்டை லாபம் கிடைத்தது. ஒன்று அவரை ஆதரித்துத் தினம் தினம் சட்டி மூளை ஏதாவது எழுதி வந்தது. இரண்டாவது நல்ல தேர்ந்த எழுத்தாள—ஆசிரியரின் பணிகள் அவருக்குக் கிடைத்தன.

கோணி ஊசியாரின் கெட்டிக்காரத்தனம் கவரொட்டி விளம்பரத்துக்கு அவர் எழுதிய வாசகங்களிலிருந்தே விளங்கலாயிற்று. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறுதானே பதம்? வேலாயுதத்தை ஆதரித்து அவர் எழுதிய ஒரு கவரொட்டி விளம்பரம் போதாதா, அவர் மேதா விலாசத்தை எடை போடுவதற்கு? இதோ அவர் எழுதிய முதல் கவரொட்டியைப் பாருங்கள்!



வோட்டு ஏன் போடவேண்டும்? அதுவும் ஆந்தையாருக்கு ஏன் போட வேண்டும்?

இந்தக் கேள்வியுடன் ஆரம்பித்திருந்த தலைப்புக்கு அதன் கீழேயே கச்சிதமான பதிலும் தரப்பட்டிருந்தது.

ஏன்? இது ஒரு கேள்வியா?

ஆந்தை ஆந்தை ஆயிற்றே! அதற்காக வோட்டுப் போடக் கூடாதா?

ஆந்தை அரசியல் ஞானசூன்யமாயிற்றே! அதற்காக வோட்டுப் போடக் கூடாதா? அரசியல் அறிவு மட்டும் என்ன? மற்ற எந்த அறிவுமே அதற்குக் கிடையாதே! அதற்காகவாவது ஆந்தைக்கு வோட்டுப் போடக் கூடாதா? நீங்கள் உங்கள் வோட்டைப் புத்திசாலித்தனத்துடன் ஆந்தைக்கு அளிப்பீர்களானல், நாடு நகராமல் அலுங்காமல், தான் இருந்த இடத்திலேயே இருக்கும். அதாவது நாடு நலம் கெட்டு நலிவுறாது; வீழ்ச்சியுறாது. இது திண்ணம்.

அதோடு ஆந்தையே தகுந்த, உகந்த, சிறந்த அபேட்சகர் என்பது ஒன்று. இதைக் காட்டிலும் பெரிய ஆந்தை வேறு கிடையாது என்பது மற்றொன்று.

இவ்வளவையும் சிந்தையில் வைத்துக் கொண்டு ஆந்தைக்கே வோட்டுப்போடுங்கள்.

இரண்டாவது விளம்பரத்தையும்தான் ஒரு கண்ணோட்டம் பார்த்து வைப்போமே! அதில் அபேட்சகர் ஆந்தையார் தேர்தல் பிரகடனம் வெளியிட்டிருந்தார். ஆரம்பம் வருமாறு:

நான் உறுதி கூறுகிறேன்.

சட்டசபை அங்கத்தினராக ஆனதும் முதல் காரியமாக நான் நிலவரியை வஜா செய்து விடுவேன்; நீர் வரியை உயர்த்தி விடுவேன்.



வரப்போகும் ஐந்து ஆண்டுகளுக்கு யாருக்குமே வருமான வரி கிடையாது என்று ஒரு சட்டம் செய்வேன்.

விஷமாக ஏறிவரும் அரிசியின் விலையை விஷமமாகவே இறக்கி வைப்பேன். அதாவது மூட்டை பதினைந்து ரூபாயாக விற்கும் அரிசியைப் பத்தே நாட்களில் பதினைந்தணுவுக்குக் கொண்டு வந்து விடுவேன்.

உண்மை நெய்யின் விலையை வீசை ஒன்பதணுவாக்கி விடுவேன்; போலி நெய்யின் விலையை ஒன்பது ரூபாயாக்கி விடுவேன்.

வீடுகளில் புகுந்து கொட்டம் அடிக்கும் எலிகளை ஒவ்வொன்றாகப் பொறி வைத்துப் பிடித்து விரட்டியடிப்பேன்.

பட்டிக்காட்டுப் பெண்டிர்களைக் கணவன்மார்கள் அடிக்காமல் இருக்க ஒரு சட்டம் இயற்றச் செய்வேன்.

நாகரிகப் பெண்மணிகளின் விழி வீச்சுக்குப் பயந்து சாகும் ஆண்சிங்கங்களுக்குக் கட்டாய பி. ஸி. ஜி ஊசி ஏற்றச் செய்வேன்.

இந்தக் கவரொட்டிகள் ஒருநாள் இரவு இரண்டு மணிக்கு நகரத்துச் சந்துபொந்துகளில் எல்லாம் ஒட்டப்பட்டன. மறுநாள் காலையில் பார்த்தால் ஒரே அல்லோல கல்லோலப்பட்டது. அப்படி அல்லோல கல்லோலப்படக் காரணமும் இருந்தது: கவரொட்டியின் வலப்புறத்தில் வேலாயுதத்தின் படம்; இடதுபுறத்தில் திருவாளர் ஆந்தையாரின் படம். சைத்திரிகரின் கைவண்ணம், யார் வேலாயுதம், யார் ஆந்தையார் என்பதைப் பாகுபடுத்த முடியாதபடி இருவரையும் இணைத்து இழைத்திருந்தது. இந்தச் சித்திரங்கள் வரைந்தது யார் என்கிறீர்கள்? பேயாந்தையார் சித்திரக் கல்லூரியைச் சேர்ந்த புகழ்பெற்ற ஏமாந்தையாராக்கும். இல்லாவிட்டால் இவ்வளவு அழகாகக் கலைவேலைப்பாடு செய்ய வருமா? இரண்டு கவரொட்டிகளுமே மக்களின் மனத்தைக் கவர்ந்தன. இச்கவரொட்டிகளைப் பார்த்த ஒவ்வொருவரும், ஒரு கணமாவது உற்றுப் பார்க்காமல் நகர்ந்ததில்லை என்றால், அதன் கவர்ச்சியைப் பற்றி நீங்களே யூகித்துக் கொள்ளுங்களேன்!

நமக்கு அரசியல் அறிவு இல்லை என்பதைப் பகிரங்கமாக ஒப்புக் கொண்டு, திருவாளர் வேலாயுதம் நேர்மைக்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்குகிறார் என்பதைப் பெரும்பாலான வாக்காளர்கள் ஐயந்திரிபுக்கு இடமின்றி ஒப்புக்கொண்டு விட்டார்கள்!

வேலாயுதத்தின் 'நான் உறுதி கூறுகிறேன்' என்ற விளம்பரத்துக்கு ஈடாக வேறு யாருமே விளம்பரப்படுத்திக் கொள்ளவில்லை என்ற எண்ணம் ஏகமனதாக வாக்காளரிடையே பரவியது. ஆயினும் விறகுக்கடை வேலாயுதம் தமது கவரொட்டி விளம்பரங்களை மட்டுமே நம்பியிருக்கவில்லை. மக்களின் நம்பிக்கையைப் பெறுவதற்காக, ஆரம்பித்து ஐந்தே வருஷங்கள் ஆகியிருந்த தமது விறகுக் கடைக்கு வெகு விமரிசையாக வெள்ளி விழா கொண்டாடி விடுவதென்று திட்ட



விட்டார்: வெள்ளி விழாவை உத்தேசித்துப் பிரமாதமான விருந்து ஒன்றும் வைக்கப் பட்டது. நகரத்துப் பிரமுகர்கள் அனைவரும் அதில் கலந்து கொண்டனர். ஆட்சி பீடத்தில் அமர்ந்திருந்த மந்திரிகள், ஆட்சி பீடத்தைப் பிடிக்கக் கனவு கொண்டிருந்தவர்கள், அதைப் பிடித்தே தீருவது என்று திட்ட மிட்டுத் தேர்தலில் குதித்திருந்தவர்கள், எல் லோருமே வந்திருந்து சிறப்பித்தனர். எனவே ஊர் முழுவதும் விறகுக் கடை வேலா யுதத்தைப் பற்றியே பேச்சாக இருந்தது.

தேர்தலுக்காகப் பதினைந்து நாட்களே பாக்கி இருக்கும் பொழுது, நாள் தவறாமல் வேலாயுதத்தை வைத்து ஊர்வலமே விடத் தொடங்கி விட்டார்கள். ஒரு ஜீப் காரின் முன்புறத்தில் மரத்தால் ஒரு பெரிய ஆந்தை செய்து வைத்து அதன்மேலேயே விறகுக் கடை வேலாயுதத்தை உட்கார வைத்து விட்டார்கள் என்றால், உற்சாகம் எவ்வளவு தூரம் எல்லைமீறிப் போயிருந்தது என்பது சொல்லாமலே விளங்குகிறதல்லவா? ஆயிரக்



கணக்கான மக்கள் ஆந்தை ஊர்வலத்தைக் காணக் கூடிவிட்டார்கள்.

நகரத்துப் பள்ளிகளில் மாணவர்கள் அதிக மாக உள்ளதாக நான்கைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு மிட்டாய் வழங்குவதாக ஆசை வார்த்தைகள் காட்டி மாணவர் படை ஒன்றைத் தயாரித்தார்கள்.

'' ஆந்தை! ஆந்தை! அன்பான ஆந்தை!
ஆந்தை! ஆந்தை! இமைகொட்டா ஆந்தை!
ஆந்தை! ஆந்தை! இம்மியும் தோல்விகாணு ஆந்தை!
ஆந்தையின் மேலோர் ஆந்தை! அற்புத மான ஆந்தை!''

அந்தப் படை, கோணி ஊசியார் இரவு இரண்டு மணி வரை கண்விழித்துக் கஷ் டப்பட்டு எழுதிய இந்தக் கோஷத்தை வானம் அதிரக் கோஷித்தவாறு முன்னே சென்றது.

நகரத்தின் பல பகுதிகளிலும் ஆந்தை யாரை ஆதரித்துக் கூட்டங்கள் நடந்தன: ''ஆந்தையாருக்கு அரசியல் அறிவு கிடை யாதுதான்; மக்கள் பிரச்னையைப் புரிந்து கொள்ளத் தெரியாதுதான். பெரிய பெரிய அரசியல் ஞானிகளே புரிந்துகொள்ள முடி யாமல் திக்குமுக்காடும்பொழுது ஆந்தையா ரைக் குறை கூறுவது எவ்வளவு மதியீனம்?''

''டில்லி பாரதத்தின் தலைநகரா, பாரதம் டில்லியின் தலைநகரா என்னும் பூகோள அறிவு ஆந்தையாருக்குக் கிடையாதுதான். அதற் காக அவர் தேர்தலுக்கு நிற்கக்கூடாது என்று சொல்ல யாருக்குமே உரிமை கிடையாது: தேர்தலில் நிற்பது அவரது ஜீவாதார உரிமை. அதேபோல வோட்டுப் போடுவது வாக்காளர்களின் உரிமை!''

இதுபோன்ற சொற்பொழிவுகளைக் கேட்ட மக்கள் வேலாயுதத்தை வெறும் விறகு வியா பாரி என்று எண்ணவில்லை; தீர்ந்த அரசியல் மேதை என்றே முடிவு கட்டி விட்டனர். அதோடு அவரிடம் அன்பும் அநுதாபமும் மேலிடவே, அவர் கடையிலேயே விறகும், கரியும் வாங்கலாயினர். சிறுக ஆரம்பித்த அவரது வியாபாரம் நகரத்தின் பல பகுதி களிலும் கிளைக் கடைகளாக உருவெடுத்தது.

வேலாயுதத்துக்கு எதிராக இரண்டே இரண்டு அபேட்சகர்கள் மட்டுமே நின்றனர். தேர்தலுக்குச் சில நாட்களுக்கு முன்பாகக் கோணிஊசியார் அவர்களில் ஒருவரைக் குத்தி எடுத்து வாபஸ் வாங்கிக் கொள்ளுமாறு செய்து விட்டார். அதன்பலனாக அந்த நபரின் கையில் சில பச்சை நோட்டுக்கள் துள்ளிய தாகக்கூடக் கேள்வி. அதையெல்லாம் விட மேலாகக் கோணி ஊசியாரின் பேச்சுத்தான் அந்த நபரைக் குத்த வைத்துவிட்டது என்ற வதந்தியே பலமாக உலாவுகிறது. கோணி ஊசியார் அவரிடம் சொன்னாராம்: ''நீங்கள் வெற்றி பெற்றுவிட்டால், 'பிரமாதமாக யாரிடம் வெற்றி பெற்று விட்டார், ஆந்தை யாரிடம்தானே?' என்று மக்கள் கூறுவார் கள். நீங்கள் தோற்றுவிட்டால்; 'இந்தப் பெரிய புள்ளி ஆந்தையிடம் தோற்றுவிட் டது, ஐயா!' என்று கேலி செய்வார்கள். அதனால் மரியாதையாக வாபஸ் வாங்கிக் கொண்டு விடுங்கள். தட்டாதீர்கள்!''

ஆனால் இரண்டாவது நபர் சொன்னதைக் கேளாமல் கடைசி வரை நெஞ்சுறுதியோடு எதிர்த்து நின்றார். அதன் பலன் ஆந்தை யாருக்கு எதிராக அவருக்கு ஏழு சத விகிதமே தான் வோட்டுக் கிடைத்தது. அதோடு அவரது ஜாமீன் தொகையும் பறிமுதலா யிற்று. அந்த அபேட்சகர் படித்தவர்; புத்தி சாலி. அரசியல் அறிவும் படைத்தவர். தேர்ந்தெடுக்கப்பட்டால், மக்களுக்குத் தம்மால் இயன்ற சேவையும் செய்யக்கூடி யவர்தான். ஆனால் அவர் செய்த ஹிமாலயத் தவறு என்னவென்றால், அவர் தமக்குத் தகுந்த சரியான சின்னத்தைத் தேர்ந்தெடுக் காததுதான். அவர் தமக்குச் சின்னமாக அன்னப் பட்சியைக் கொண்டிருந்தார். அன்னம் நீரைப் பிரித்துப் பாலை உண்ணும் திறன் வாய்ந்ததல்லவா? அதைப்போல் நம் நாட்டு மக்களும் நல்லதை ஏற்றுத் தீயதைத் தள்ளி விடுவார்கள் என்று அவர் எண்ணினார். அந்தத் தவறுதான் அவரைக் குழி தோண்டிக் குப்புறத் தள்ளிப் புதைத்து விட்டது.

ஒருவர் அரசியல் மேதையாக மட்டும் இருந்தால் ஆயிற்றா? உயர்ந்த பண்பும் உன்னத நோக்கமும் கொண்டவராக மட்டும் இருந்தால் போதுமா? மக்களைப் புரிந்து கொள்ளும் மாபெரும் திறமையல்லவா வேண்டும்? ஊருடன் ஒத்துப் போகத் தெரி யாத மனிதனும் ஒரு மனிதனா?

நம் நாட்டு நிலைமையைக் கவனியுங்கள். இப் பொழுது ஆந்தையாருக்குத்தானே அதிக செல்வாக்கு இருக்கிறது? அன்னத்தை யார் கேட்கிறார்கள்? [ஆதாரம்: உருதுக் கதை]



தமிழ்நாட்டிற்கு ஏஜண்டுகள் : மெஸர்ஸ் சீதாராம ஜெனரல் ஸ்டோர்ஸ், மேலக் கோபுர வீதி, மதுரை



எங்கள் வீட்டு மகாலக்ஷ்மி

காந்தன்

"நம் தமிழ்ப் படங்களில் நவரஸங்களும் ததும்புகின்றன....'' என்று நான் ஒரு சமயம் என் நண்பர் ஒருவரிடம் சொன்னேன்.

உடனே அவர் வெருண்டு, ''என்ன ஸார், யோசிக்காமல் பேசுகிறீர்களே! தமிழ்ப் படங்களிலாவது நவரஸங்கள் ததும்பவாவது!'' என்று அலட்சியமாகக் கூறினார்.

''அடாடா! நான் சொன்னதைத் தவறாகப் புரிந்து கொண்டு விட்டீர்கள்! ஒவ்வொரு படமும் பார்ப்பவர்கள் உள்ளங்களில் எழுப்பும் உணர்ச்சிகளைத்தான் நவரஸங்கள் என்று கூறினேன். சில படங்களைப் பார்த்தால் 'இதுவும் ஒரு படமா!' என்று ஆத்திரம் பொங்கி வருகிறது; சில படங்களைப் பார்த்தால் 'ஐயோ, பாவம்! இதையும் ஒரு படம் என்று எடுத்திருக்கிறார்களே!' என்று அநுதாபம் உண்டாகிறது; இன்னும் சில படங்களைப் பார்த்தால் சிரிக்கத் தோன்றுகிறது.

விக்ரம் புரொடக்ஷன்ஸ் தயாரித்த ''மார்க்கண்டேயா'' படத்தைப் பார்த்ததும் எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னால் பார்த்திருக்க வேண்டிய படம் என்று தோன்றியது! உண்மையிலேயே பார்த்தும் இருக்கிறோம். பரம பக்தரான நாரத முனிவரையும், அவரது தேவகானத்தையும், காலனைக் காலால் உதைத்த கருணாமூர்த்தியையும், அன்னை அம்பிகையையும் திரைப்படத்தில் பழி வாங்கும்படி அவர்கள் செய்த பிழைதான் என்ன! குழந்தைப் பேறின்றி வருந்திய மிருகண்டு முனிவர் சரித்திரத்தில், நிறையக் குழந்தைகளைப்பெற்றவன் கதையையும் சேர்த்துச் சிரிக்க அடித்திருப்பதன் நோக்கமென்ன?

இந்தப் படத்தில் நாகையாவைப் பொறுத்த வரையில் நன்றாக நடித்திருக்கிறார். அவரைத் தவிர, இப்படத்தில் பிரமாதமாக நடித்திருக்கும் இன்னொருவரையும் குறிப்பிட்டாக வேண்டும். வீட்டிலும், திவ்விய ஸ்தலங்களிலும், காட்டிலும் எழுந்தருளி யிருந்து மார்க்கண்டேயனை யமனிடமிருந்து காத்தருளிய சிவலிங்கத்தையே சொல்லுகிறேன்!

''மூன்று பெண்கள்'' என்ற படம் பார்த்தேன். படம் மூன்றுமணி நேரத்துக்குமேல் ஓடியும் கதை என்னவென்றே புரியவில்லை. படம் புரியவில்லை என்றால் அது படாதிபதியின் தவறு ஆகாது. அதைப் புரிந்து கொள்ளாதது என்னுடைய தவறுதான்!

அன்னபூர்ணா பிக்சர்ஸ் தயாரித்த ''எங்கள் வீட்டு மகாலக்ஷ்மி'' படத்தைப் பார்த்ததும் மனசுக்குக் கொஞ்சம் திருப்தியாயிருந்தது.

கல்யாணமான இளந் தம்பதிகளின் குடும்ப வாழ்வைச் சித்திரிக்கும் கதை இது. ஆமாம். நீங்கள் யாரும் சந்தேகப்படவே வேண்டாம். இந்தப் படத்தின் மூலக்கதை வட நாட்டுக் கதைதான். சரத்சந்திரரின் ''நிஷ்க்ருதி'' என்ற கதையிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. திரைக்கதைக்கு வடநாட்டை எதிர்பார்ப்பதுதான் தமிழ்ப் படாதிபதிகளின் மரபாகி விட்டதே!

இந்தத் திரைக் கதையில் வக்கீல் கணபதி ஒரு விநோதமான சித்திரம். சதா வழக்கு, நீதிமன்றம் இவைதான் அவர் நினைவில் இருப்பவை. அதனால் இப் படத்தில் பல இயற்கையான ஹாஸ்யங்கள் நிகழ



கின்றன. கணபதியின் ஒன்றுவிட்ட தம்பி கோபுவும், அவன் மனைவி சுசீலாவும் கணபதியுடன் இருக்கின்றனர். கணபதியின் மனைவி—நோயாளி—இருக்கிறாள். கணபதியின் பிள்ளைகள், கோபுவின் மகன் பாபு முதலியவர்கள் கலகலவென்று வீட்டை விளங்க வைக்கிறார்கள். கிராமத்திலிருந்து நிலங்களைக் கவனித்து வந்த சுப்பு—கணபதியின் இன்னொரு தம்பி—தன் மனைவி குழந்தைகளுடன் அண்ணன் வீட்டுக்கு வருகிறான். சுப்புவின் மனைவி அனசூயா சுசீலாவின் மேல் இல்லாததையும் பொல்லாததையும் சொல்லிக் கொடுத்து, குடும்ப அமைதியைக் கெடுத்து விடுகிறாள்; இவர்களுக்குத் துணையாக மில் மானேஜர் வைகுண்டம் இருந்து நல்லவர்களின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்கிறான். அவன் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளுவதற்கு, கோபுவின் நாய் தயாராய்க் கடைசி வரையில் காத்திருக்கிறது.

கணபதியாக நடித்த எஸ். வி. ரங்காராவ் மிகவும் தத்ரூபமாக நடித்திருக்கிறார். குடும்பத்தில் அக்கறையின்மை, எதையும் மறந்து விடும் சுபாவம், சதா தொழில் நினைப்பு முதலிய குறைகளையெல்லாம் அவரிடம் காண முடிகிறது. கணபதியின் மனைவி அன்னபூர்ணாவாக வந்த கண்ணாம்பா அமைதியாக நடித்துப்பெயரை அள்ளிக்கொண்டுவிட்டார்.

சினிமா வானில் தனித்து மின்னும் நட்சத்திரமான சாவித்திரி சுசீலாவாக நடிக்கிறார். அமைதி தவழும் முகமும், ஆடம்பரமற்ற ஆடை ஆபரணங்களும், நிதானமான பேச்சும் அவர் நடிப்பை இயல்பாக்கி விட்டன. ஏ. நாகேசுவரராவ் சுசீலாவின் கணவன் கோபுவாக நடிக்கிறார்; அவர் நடிப்பு படத்துக்கு உயிர் ஊட்டுகிறது. கோபுவும் சுசீலாவும் கிராமத்துக்குச் சென்று பயிர்த்தொழிலை மேற்கொண்டு வயலில் உழைக்கும் காட்சி, ''காலம் மாறிப்போச்சு'' படத்தை நினைவூட்டினாலும், நன்றாயிருக்கிறது.

கணபதியின் சகோதரன் சுப்புவாகத் தோன்றிய தங்கவேலுவும் அவர் மனைவியாக வந்த சுந்தரிபாயும் அமைதியான இரைக் கதையை ஒரு கலக்குக் கலக்கித் திருப்பி விடுகின்றனர். சுந்தரிபாயின் தொடிப்பும், இடிப்பும், வெட்டுப் பார்வைகளும் இப் படத்தில் நிறைய இடம் பெற்றிருக்கின்றன; வில்லன் வைகுண்டமாக நடிக்கும் நம்பியார் வழக்கமான தம் வேலைகளைக் காட்டுகிறார்.

பாராட்டப்பட வேண்டிய கட்டங்கள் :— ஓரகத்தியின் மகனைக் கடிந்து கொண்டதற்காகச் சுசீலாவைக் கண்டிக்கிறாள், அன்னபூர்ணா. அதற்குச் சுசீலா, ''அவன் என் குழந்தை இல்லையா? அவனைக் கண்டிக்க எனக்கு உரிமையில்லையா?'' என்று கேட்கிறாள். அப்போது கண்ணாம்பா (அன்னபூர்ணா)வின் நடிப்பு பிரமாதமாயிருக்கிறது;

வக்கீல் கணபதி ஞாபக மறதியினால் தாறுமாறாகப் பேசும் பேச்சு இயல்பாயிருக்கிறது;

சுசீலாவும் கோபுவும் வீட்டை விட்டு வெளியேறியபின் அன்னபூர்ணா உண்மையை அறிந்து விம்மியது தத்ரூபமாயிருக்கிறது.


தளுக்குக்காரி சஞ்சலாவின் எதிரில் வைகுண்டத்தினிடம் மிடுக்காகப் பேசிய சுப்பு அவளது கரஸ்பரிசம் பட்டமாத்திரத்தில் நெகிழ்ந்து குழைந்துவிடுகிறான். தங்கவேலுவுக்கு (சுப்பு) அதில் பூரண வெற்றி.

படத்தின் ஆரம்பத்தில், ஊரிலிருந்து சுசீலா வருகிறாள். உடனே பையன்கள் அவரவர்கள் இடங்களுக்கு ஓடுகின்றனர்; பாடப் புத்தகங்களை எடுத்துக் கொள்ளுகின்றனர். இந்தக் காட்சியினால் படமே களை கட்டி விடுகிறது. இந்தப் படத்தில் பாடல்கள் நன்றாயமைந்திருக்கின்றன. ''செந்திருமாதும் கலைமாதும்—சிவகாமி என்றோதும் மலைமாதும்.......'' என்ற கும்மிப் பாட்டு நயமாயிருக்கிறது.

ஸ்ரீதர் எழுதியிருக்கும் வசனம் நன்றாயிருக்கிறது.

சஞ்சலாவாக நடிக்கும் ராஜசுலோசனா வலை விரிக்கும்வஞ்சகப் பாவையாக ஆடிப் பாடி அபிநயம் பிடித்து நடித்திருக்கிறார். படத்தின் கவர்ச்சிக்கு ஈ. வீ. சரோஜாவின் ரோமிய நடனம் நன்கு உதவுகிறது. 'ரூட்' என்ற நாயின் நடிப்பு இப் படத்தின் சிகரம்;




டீ-நான் உங்களை ஊக்குவிக்கிறேன்...
...ஐந்து பொன் விதிகளை நீங்கள் பின்பற்றும்போது
TEA BOARD INDIA

ரகுபதி  ராகவ

[அகமதாபாத் நவஜீவன் காரியாலயத்தினர் பிரசுரம் செய்திருக்கும் 'சத்தியமே தெய்வம்' என்னும் காந்தி வசன மஞ்சரியிலிருந்து ராஜாஜி எடுத்து எழுதியது]

66

ஒரு நண்பர் கேட்கிறார்: "பிரம்மசரியம் என்றால் என்ன? அதை முற்றிலும் பழுதின்றிக் காப்பாற்றுவது சாத்தியமா?"

பிரம்மசரியம் என்றால் பிரம்மத்தை அடையப் பார்ப்பது. அந்த முயற்சிக்கு வேண்டிய விரதமே பிரம்மசரியம். ஈசுவரன் உள்ளத்தில் உளன். ஒவ்வொரு உள்ளத்திலும் உளன். அவனைக் காண வேண்டுமானால் உள்ளத்தைச் சோதித்து அந்தராத்மாவைக் காண வேண்டும். புலன்களை முற்றிலும் வசப்படுத்தினாலன்றி அந்தக் காட்சியை அடைய முடியாது.

ஆகவே, பிரம்மசரியம் என்றால் மனோ வாக்கு காயங்களை வசத்தில் நிறுத்தி வைப்பது. எப்போதும் எந்தச் சூழ்நிலையிலும் அந்தப் புலனடக்கம் நிலைகுலையாதிருக்க வேண்டும். பிரம்மசரியத்தை வெற்றியுடன் நடத்தினால் காமமாவது கோபமாவது கிட்டே நெருங்காது. ஆண்டவன் அண்மையிலேயேஎப்பொழுதும் வாழ்க்கை நடைபெறும். ஈசுவரத் தன்மையை அடைந்தே விடுவோம். இத்தகைய பிரம்மசரியம் சாத்தியம் என்பது என்னுடைய உறுதியான நம்பிக்கை. மனோவாக்கு காயங்களை முற்றிலும் அடக்கியாள்வது முடியும்.


[யங் இந்தியா, 5—6—24]

சத்தியத்துக்கென்று தன் வாழ்க்கையை ஒப்புவித்த ஒருவன் சத்தியத்தை வழிபடுவதிலேயே எப்போதும் ஈடுபடுவான். வேறு விஷயத்தில் தன் மனத்தை எவ்வாறு செலுத்துவான்? செலுத்தினால், கொண்ட மனைவிக்குத் துரோகம் செய்தவாறு ஆவான். சிற்றின்பத்தில் மனம் செலுத்தமாட்டான். சத்தியத்துக்கென்று தன் உயிரை அர்ப்பணம் செய்த ஒருவனுக்குக் குழந்தைகளைப் பெற்றுக் குடும்பத்தை நடத்த அவகாசமே இராது. சத்திய வாழ்க்கையும் புலன்களின் வழி இன்பம் தேடுவதும் ஒன்றுக்கொன்று நேர் விரோதமானது.

சத்தியத்தை விட்டு விட்டு அஹிம்சையை வைத்துப் பார்த்தாலும் சுயநலமும் புலன்கள் வழி இன்பம் தேடுவதும் அஹிம்சைக்கு முற்றிலும் முரணாகும். அஹிம்சை என்றால் ஜீவராசிகள் அனைத்தினிடத்துமே அன்பு செலுத்த வேண்டும். ஒருவன் தன் மனைவிக்கு மட்டும் முற்றிலும் அன்பைத் தந்து விட்டால், உலகத்துக்கு என்ன மிஞ்சும்? அவ்வாறே ஒரு ஸ்திரீயானவள் தன் புருஷனுக்கே தன்னுடைய அன்பையெல்லாம் செலுத்திவிட்டால் ஜீவராசிகள் அனைத்துக்குமே செலுத்த வேண்டிய அருள் எஞ்சி நிற்காது. தாம் இருவர்தான் உலகம் என்று முடிந்து விடும். கற்புள்ள ஸ்திரீயாவது புருஷனாவது அஹிம்சை முறையில் உலகம் முழுவதையும் தன் இனமாகப் பார்க்க வேண்டிய தருமத்தை நடத்த இயலாது. தங்கள் அன்புக்குச் சுவர் எழுப்பி வரம்பு கட்டினவர்களாவார்கள். குடும்பம் பெருகப் பெருக உலகம் மறைந்து போகும். அஹிம்சா தத்துவத்தைக் கடைப்பிடிக்க விரும்புகிறவர்களுக்கு விவாகம் செய்து கொண்டு இன்பம் நுகர்வதற்கு இடமில்லை. இல்லறத்தைத் தாண்டிய இன்பங்களைப்பற்றிச் சொல்ல வேண்டியதே யில்லை.

ஆகவே, விவாகம் ஆகிய மக்களுக்கு என்ன வழி என்கிற கேள்வி எழலாம். அவர்களுக்குச் சத்தியம், அஹிம்சை என்கிற மார்க்கம் சாத்தியமே இல்லையா? உலகம் முழுவதற்கும் செலுத்த வேண்டிய அருள் அவர்கள் விஷயத்தில் முற்றிலும் முடியாததா?

அவ்வாறல்ல. விவாகம் ஆகியிருந்த போதிலும், விவாகம் ஆகாத தனிப்பட்டவர்களைப் போலவே நடந்து கொள்ளலாம். இதைச் சிலர் செய்து பார்த்து வெற்றியும் அடைந்திருக்கிறார்கள். நான் சொல்லும் முறையை அனேகம்பேர்கள் வெற்றியுடன் கடைப்பிடித்திருக்கிறார்கள். இருவரும் சகோதர சகோதரிகளாகப் பாவித்துக் கொண்டு ஜீவராசிகளின் சேவையில் தங்கள் வாழ்க்கையைச் செலவிடலாம்.






ஒன்பதுக்குள் ஏதாவது ஒரு எண்ணை எடுத்துக் கொள். அதை ஒன்பதால் பெருக்கி வரும் விடையை 12345679 ஆல் பெருக்கவும். அப்படிப் பெருக்கி வரும் விடையில் ஒவ்வொரு எண்ணும் நீங்கள் முதலில் எடுத்துக் கொண்ட எண்ணாகவே இருப்பதைக் காணலாம்.



கண்ணாடி டம்ளரில் மெழுகுவர்த்தியை உருகிய மெழுகினால் ஒட்டி நிறுத்திக் கொள்ளுங்கள். பிறகு வர்த்தி அணையாதபடி தண்ணீர் ஊற்றுங்கள். வர்த்தி கடைசிவரை எரியும். தண்ணீர் அதை அணைக்காது!




குட்டிக் கதை



குரங்கும் கழுதைக் குட்டியும்

கழுதைக்குட்டி ஒன்று தன் தாயைப் பிரிந்து அழுது கொண்டு இருந்தது. இதைப் பார்த்துக் கொண்டிருந்த குரங்கு அதன்மேல் அனுதாபப்பட்டு, "அழாதே! நான் உன் தாயாரைக் கண்டு பிடித்துக் கொடுக்கிறேன். அது வரை நீ என்னுடன் இரு" என்று கூறியது. கழுதைக் குட்டியை அழைத்துச் சென்று நிறையப் புல்லையும் இலைகளையும் பறித்துப் போட்டு அதில் படுக்க வைத்தது. பிறகு குரங்கு அதன் தாயாரைத் தேடச் சென்றது. தூரத்தில் இதை வேடிக்கை பார்த்த ஒரு நரி அக் கழுதைக் குட்டியிடம் வந்தது. "அடாடா! உன்னை அந்தக் குரங்கு ஏமாற்றி விட்டதே! போயும் போயும் உன்னை இந்தப் புல் படுக்கையில் படுக்கச் செய்துவிட்டதே! நான் உன் தாயாருக்கு ரொம்ப நெருங்கியவன். என்னுடன் வந்தால் உனக்குப் படுக்க மெல்லிய பஞ்சு மெத்தை தருகிறேன்!" என்றது. கழுதைக் குட்டியும் நரியின் ஆசை வார்த்தைகளை நம்பி நரியுடன் சென்று விட்டது.

குரங்கு திரும்பி வந்தது. "கழுதைக் குட்டியே! உன் தாயாரைக் கண்டு பிடித்து விட்டேன். உடனே வா!" என்று அழைத்தது. ஆனால் அந்த இடத்தில் கழுதைக் குட்டியைக் காணோம். அப்பொழுது அங்கு ஒளிந்திருந்த முயல், "ஏ, குரங்காரே! தன் நிலை தெரியாமல் அக்கழுதைக் குட்டி நரியின் ஆசை வார்த்தையைக் கேட்டு அதனுடன் சென்றுவிட்டது. நரி அதைச் சிங்கத்துக்கு இரையாக்கவே அழைத்துச் சென்றிருக்க வேண்டும், பாவம்!" என்று வருந்தியது.




மிருங்காவதி
சித்திரத் தொடர்கதை
4
① அழகசுந்தரியின் விருப்பத்துக்கு இணங்கி
தேவிதத்தன் வீரச் செயல் புரியப் புறப்பட்டான்.
தன்னோடு அவன் அரக்கப் பெண்களையும்
அழைத்துக் கொண்டு அவர்கள் நகருக்குச்
சென்றான்.
② சிங்கத்தைப் போரிட்டு வென்றான்.
சிங்க உருவில் இருந்த யக்ஷன் சாபம்
நீங்கித் தன் சுய உருவம் பெற்றான்.
③ தேவிதத்தனுக்கு நன்றி
செலுத்தித் தன்னிடமிருந்த
மிருங்கா என்னும் வாளைப்
பரிசாக அளித்தான். பிறகு
யக்ஷன் விடைபெற்றுக் கொண்டு
மறைந்து விட்டான்.
④ தேவிதத்தனது வீரத்தை மெச்சிய
அழகசுந்தரி அவனுக்கு ஒரு மோதிரத்தை
அன்பளிப்பாகக் கொடுத்தாள்.
வெற்றிப் பெருமிதத்தோடு எல்லோரும்
நகருக்குள் சென்றார்கள்.
அந்நகரில் தங்கியிருந்த காலத்தில்
தேவிதத்தன் அரக்கப் பெண்ணான
அழகசுந்தரியின் மீது காதல் கொண்டான்.


ஒருநாள் தெவிதத்தனும் அழகு சுந்தரியும் ஒரு குளக்கரைக்குச் சென்றார்கள். தெவிதத்தனுக்கு நீராட வேண்டுமென்ற ஆசை தோன்றியது. அப்பொழுது அழகு சுந்தரி சொன்னாள்.
இந்தக் குளத்தில் முதலைகளின் உபத்திரவம் அதிகம். தற்காப்புக் காக 'மிருகங்கா' என்னும் உங்கள் வாளையும் எடுத்துச் செல்லுங்கள்.
சரி! அப்படியே செய்கிறேன்.
என்ன ஆச்சரியம்! குளத்தில் குளிக்க இறங்கியவன், தான் முதலில் குதித்த அதே கங்கைக் கரையில் இருப்பதைக் கண்டான்.
அவன் கையில் வாளும் மோதிரமும் அப்படியே இருந்தன. பாதாளத்திலிருந்து அந்த அசுரப் பெண் தன்னை ஏமாற்றி அனுப்பி விட்டாள் என்பதை எண்ணிய பொழுது அவனுக்கு அளவற்ற துயரம் ஏற்பட்டது. அவன் நண்பன் சாரங்கன் அவனைத் தேடி அங்கே வந்து சேர்ந்தான்.
பிறகு சாரங்கன் சொன்னான்...
நண்பா, நீ கங்கையில் குதித்த பிறகு உன்னைப் பல நாட்கள் தேடினோம். துயரம் மேலிட்டு நாங்கள் எங்களையே பலியிட்டுக் கொள்வது என்று கூட முடிவு செய்து விட்டோம். 'வேண்டாம்! உங்கள் நண்பன் திரும்பி வருவான்' என்று அசரீரி கூறியது.
ஏது?
இதைக் கேட்டதும் நாங்கள் உன் தந்தையிடம் செய்தியைச் சொல்ல ஓடினோம். அப்பொழுது ஒரு மனிதன் வெகு வேகமாக ஓடி வந்து, 'நீங்கள் நகருக்குள் பிரவேசிக்கக் கூடாது. ஏனெனில் மாலவ நாட்டு அரசர் வல்லப சக்தி இறந்து விட்டார்' என்றான். எங்களுக்கு என்ன செய்வது என்று விளங்கவில்லை.
(தொடரும்)
சாரங்கன்

வியாபாரியின் மகன்



ருஷ்ய நாட்டு நாடோடிக்கதை

3. அரண்மனை வாழ்வு!

வியாபாரி ராட்சத மன்னனின் நிபந்தனைக்கு ஒப்புக் கொண்டான். உடனே மன்னன் அந்த மைதானத்துக்குவந்தான். ஏதோ மாயமந்திரம் செய்தான். அந்தப் பெரியமாளிகை நொடியில் அந்த மந்திரப் பெட்டிக்குள் போய் விட்டது. அதை யெடுத்துக் கொண்டு வியாபாரி தன்னுடைய வீட்டை நோக்கி நடந்தான்.

பல நாட்கள் நடந்து கடைசியில் அவன் தன் வீட்டை அடைந்தான்.

வீட்டுக்குப் போனதும் அவன் மனைவி அகமும் முகமும் மலர வரவேற்றாள். "அன்பே! எங்கேயெல்லாம் போயிருந்தீர்கள்? எனக்குச் சொல்லுங்கள்!" என்று பரிவுடன் கேட்டாள்.

வியாபாரி மிகுந்த சலிப்புடன், "நான் எங்கே போனால் என்ன? இங்குதான் திரும்பி வந்த சேர்ந்து விட்டேனே!" என்று கூறினான்.

வியாபாரியின் சலிப்பு அவளுக்குப் புரியவில்லை. மீண்டும் பழைய உற்சாகத்துடனேயே, "கடவுளின் பெருங் கருணையினால் நமக்கு ஒரு குழந்தை பிறந்திருக்கிறது!" என்று சொல்லிக் குழந்தையை உள் அறையிலிருந்து எடுத்துக்கொண்டு வந்து கணவனிடம் காண்பித்தாள்!

"ஓ! இதுதானா, நான் புதிதாக என் வீட்டில் காணக்கூடிய பொருள்! இதைத்தானா ராட்சத மன்னன் கேட்டான்!" என்று வியாபாரி நினைத்தான்.

அவன் மனைவிக்குத் தன் கணவனின் நடத்தை ஒன்றுமே புரியவில்லை. "உங்களுக்கு என்ன மனக் கவலை? ஏன் என்னமோ மாதிரி இருக்கிறீர்கள்? வீட்டுக்குத் திரும்பி வந்ததில் உங்களுக்கு மகிழ்ச்சி இல்லையா?" என்று வியாபாரியிடம் பலவாறு கேட்டாள்.

"எனக்கு வீட்டுக்கு வந்ததில் எவ்வளவோ சந்தோஷந்தான்! நீண்ட நாட்களுக்குப் பிறகு எனக்கு ஒரு மகன் பிறந்திருப்பதில் எவ்வளவு மகிழ்ச்சி, தெரியுமா?

ஆனால் அப்படியெல்லாம் நான் சந்தோஷப் பட முடியாதபடி எனக்குப் பெரு விபத்து சேர்ந்துள்ளது!'' என்று ஆரம்பித்து வியாபாரி எல்லா விவரங்களையும் சொன்னான்.

இதைக் கேட்டாளோ இல்லையோ, அவளும் பெரும் துயரத்தில் ஆழ்ந்து 'ஹோ' என்று கதறி அழ ஆரம்பித்தாள்! ஆனால் எத்தனை நாட்கள் அழமுடியும்? வியாபாரி தனது மந்திரப் பெட்டியைத் திறந்தான். அங்கே ஒரு பெரிய அழகிய அரண்மனை போன்ற மாளிகை எழுந்தது. அந்த மாளிகையில் வியாபாரியும் அவன் மனைவியும் தங்கள் குழந்தையுடன் சந்தோஷமாக வாழ்ந்து வரலானார்கள்.

பத்து வருஷங்கள் ஆயின. வியாபாரியின் மகன் அழகிய சிறு பையனாக வளர்ந்து கொண்டிருந்தான். அப்போது வழியில் சிறு குடிசை தென்பட்டது.

"குடிசையே! குடிசையே! உன் வாசலை என் பக்கமாகத் திருப்பேன்!'' என்றான்.

குடிசை திரும்பியது. ஐவான் உள்ளே நுழைந்தான். குடிசைக்குள் பாபாயாகா என்ற மந்திரவாதிக் கிழவி உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

"ருஷ்ய ரத்தம் வாசனை வருகிறதே! யாரோ என் குடிசைக்குள் வருகிறாற்போலிருக்கிறதே? வருவது யார்? எதற்கு? ஏன்?'' என்று கிழவி கேட்டாள்.

ஐவான், "பாட்டி! ஒருவன் உன் வீட்டைத் தேடி வந்தால் அவனைச் சாப்பிட்டாயா என்று கேட்டுச் சாப்பாடு கொடுப்பதற்குப் பதில் ஆயிரம் கேள்விகள் கேட்கிறாயே! இது முறையா?'' என்றான்.



இருந்தான். ஒரு நாள் காலை வியாபாரியின் மகன் மிகுந்த கலவரத்தோடு தன் படுக்கையை விட்டு எழுந்திருந்தான்.

"அப்பா, நேற்று இரவு ராட்சத மன்னன் கனவில் தோன்றி, 'உடனே நீ என்னிடம் புறப்பட்டு வா! எத்தனை நாள் என்னைக் காக்க வைக்கிறது?' என்று மிரட்டினான், அப்பா!'' என்றான் வியாபாரியின் மகன்.

இதைக் கேட்டதும் வியாபாரியும் அவன் மனைவியும் கண்ணீர் பெருக்கினார்கள். பிறகு வேறு வழி இன்றித் தங்கள் மகனுக்கு விடை கொடுத்து வழியனுப்பி வைத்தனர்.

ஐவான்,—அதுதான் வியாபாரியின் மகனுடைய பெயர். அவன் காடுகளையும் மலைகளையும் பல நாடுகளையும் நகரங்களையும்

மந்திரவாதிக் கிழவிக்கு ஐவான் சொன்னது நியாயந்தான் என்று பட்டது. ஐவானுக்குச் சாப்பாடு போட்டாள்.

பொழுது விடிந்ததும் கிழவி மீண்டும் கேள்வி மேல் கேள்வி போட ஆரம்பித்தாள். ஐவான் எல்லா விவரங்களையும் கூறி விட்டுக் கடைசியில், "பாட்டி! நான் ராட்சத மன்னனின் தேசத்துக்குப் போக வேண்டும். வழி சொல்லு!'' என்றான்.

"நல்ல வேளை! நீ இந்த வழியாக வந்தாயே! வேறு வழியாகப் போயிருந்தாயானால் இதற்குள் நீ இறந்து போயிருப்பாய். அதோ தெரிகிறது பார், பாதை, அந்தப் பாதை வழியாகவே நேரே போ. அங்கே ஒரு குளம் இருக்கும். அந்தக்

குளத்துக்கு மூன்று புருக்கள் வரும். அந்தப் புருக்கள் மூன்றும் அழகிய ராஜ குமாரிகள். அவர்கள் தங்கள் இறகுகளை அவிழ்த்து வைத்து விட்டுக் குளத்தில் இறங்கிக் குளிக்கப் போவார்கள். அது வரை நீ அங்கே ஒரு மரத்தின் மறைவில் ஒளிந்து நிற்க வேண்டும். அவர்களில் ஒருத்தியின் இறகுகளில் புள்ளிகள் விழுந் திருக்கும். அவற்றை நீ எடுத்துக்கொண்டு விடு! அவள் என்ன கெஞ்சினாலும் கொடுக் காதே. உன்னைக் கல்யாணம் செய்து கொள்வதாக வாக்களித்தால் மட்டும் கொடு. பிறகு எல்லாம் சுலபம்!'' என்றாள்.

கிழவி சொன்னபடியே வியாபாரியின் மகன் செய்தான். குளக்கரையை அடைந் தான். புள்ளி போட்ட இறகுகளை எடுத் துக்கொண்டு ஒரு மரத்தின் மறைவில் இவான் நின்று கொண்டான்.

குளத்தில் நீண்ட நேரம் குதூகலமாகக் குளித்துவிட்டு வந்த அந்த ராஜகுமாரி தன் இறகுகளைக் காணாமல் காடெல்லாம் தேடினாள் கிடைக்கவில்லை. ''என் இறகு களை யார் எடுத்துக் கொண்டிருக்கிறீர் கள்? சொல்லுங்கள். கிழவனாக இருந் தால் அவரைத் தந்தையாக மதித்து ஏற்றுக் கொள்ளுகிறேன். நடுத்தர வய தினராக இருந்தால் என் மாமாவாக உறவு கொண்டாடுகிறேன். அழகிய இளைஞராக இருந்தால் என் கணவ ராகவே ஏற்றுக் கொள்கிறேன்'' என்றாள்.

இவான் தன் மறைவிடத்தை விட்டு வெளிப்பட்டு, ''இதோ உன்னுடைய இறக்கைகள்!'' என்றான்

அதை வாங்கிக் கொண்ட ராஜகுமாரி அவனைப் பார்த்து, ''அன்பே! தாங்கள் யார்? இங்கே எங்கே வந்தீர்கள்? எங்கே போகிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''நான் ஒரு வியாபாரியின் மகன். என் பெயர் இவான். நான் உன் தந்தையைப் பார்க்கத்தான் புறப்பட்டேன்'' என்றான்.

''என் பெயர் புத்திசாலி வாஸிலிஸா'' என்று அவள் கூறினாள்.

வாஸிலிஸா ராட்சத மன்னனின் மிகச் செல்லமான பெண். எவ்வளவு அறிவு பெற்றிருந்தாளோ அந்த அளவுக்கு அழகை யும் பெற்றிருந்தாள். அவள் தான் வரித்த மணாளனுக்கு தன் தந்தையை அடையும் வழியைக் கூறி விட்டு மீண்டும் புறுவாக மாறி மாயமாய் மறைந்து விட்டாள்.

இவான் ராட்சத மன்னனின் அரண் மனைக்கு வந்தான். அவனைச் சமையற் கட்டில் வேலை செய்யும்படி அரசன் அனுப்பி வைத்தான். அங்கு தலைமைச் சமையற் காரன் அவனை விறகு வெட்டிக் கொண்டு வரும்படியும், தண்ணீர் இழுத்து நிரப்பும் படியும் கடுமையான வேலைகளைச் செய்ய வைத்தான். அப்பொழுதும் சமையற்கார னுக்கு ஏனோ திருப்தி ஏற்படவில்லை. மன்னனிடம் போய் இவானைப் பற்றிக் கோள் சொல்லத் தொடங்கினான்.

''மகாராஜா, புதிதாக வேலைக்கு வந் துள்ள இவான் இருக்கிறானே, அவன் மிகுந்த தற்பெருமைக்காரனா யிருக்கிறான். அவன் தான் விரும்பினால் ஒரு இரவுக்குள் ஒரு பெரிய காட்டையே அழித்து, நிலத் தைச் சீர்திருத்தி, கோதுமை விதைத்து, பயிருண்டாக்கி, அறுவடை செய்து, பொழுது விடிவதற்குள் ராஜாவுக்கு ரொட்டி செய்து கொண்டு வந்து விடு வானாம்! கர்வக்காரன்!'' என்றான்.

மகாராஜா இவானை வரவழைத்து, ''என்னவெல்லாமோ பெருமை அடித்துக் கொண்டாயாமே! அப்படியானால நீ போய்ப் பொழுது விடிவதற்குள் எனக்கு ரொட்டி செய்துகொண்டு வா!'' என்றான்.

''மகாராஜா, நான் அப்படியெல்லாம் சொன்னதே இல்லை!'' என்று மன்றாடிக் கூறினான். ராட்சத மன்னன் கேட்பதாக இல்லை. முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு சோகத்துடன் இவான் தன் இருப்பிடத்துக்கு வந்து சேர்ந்தான்.

வாஸிலிஸா அவன் துயரத்துக்குக் காரணம் என்ன என்று விசாரித்தாள். இவான் முழு விவரங்களையும் கூறினான். ''இதற்காக இவ்வளவு துயரப்படுவா னேன்? நான் ஏற்பாடு செய்கிறேன்!'' என்றாள் வாஸிலிஸா. அப்படியே பொழுது விடிவதற்குள் ரொட்டி செய்து இவானிடம் கொடுத்து விட்டாள். இவான் அதை எடுத்துக் கொண்டு போனான்.


மற்றொருநாள் சமையற்காரன் இவானைப் பற்றி இன்னொரு கோள் சொன் னான். ''ஒரு இரவுக்குள் ஒரு பெரிய கப்பலைச் செய்து விடுவானாம்! அந்தக் கப்பல் வானத்தில் கூடப் பறக்கக் கூடிய தாம். இப்படிப் பெருமை யடித்துக் கொள் கிறான் இவான்'' என்று கூறினான்.

மன்னன் அதைக் கேட்டு அப்படியே செய்யும்படி இவானுக்குக் கட்டளையிட் டான். இவானும் வாஸிலிஸாவின் உதவி யினால் செய்து முடித்தான். மறுநாள் மன்னன், இவான், சமையற்காரன் மூவரும் அதில் ஏறி வானவீதியில் பறந்தனர். அப்போது இவான் மன்னனுக்குத் தெரி யாமல் அந்தச் சமையற்காரனைக் கீழே தள்ளிவிட்டு, ''ஐயோ! விழுந்து விட் டானே!'' என்று அலறினான்.

''கவலைப்படாதே! அயோக்கியன்! அவன் அப்படித்தான் சாக வேண்டும்'' என்று கூறினான் மன்னன்! (தொடரும்)



எங்கள் புதிய தயாரிப்பு
உகந்த முறையில் உன்னத சுகந்தம்
TSR
கோகுல் மாலா பத்திகள்
GOKUL MALA BATHIS
டி.எஸ்.ஆர் & கம்பெனி, கும்பகோணம்.



நான்
ஒருபொழுதும் அவை
இல்லாமல் இருப்பதில்லை
WILLS'S
Berkeley
CIGARETTES



பானுவின் காதலன்

ராஜம் கிருஷ்ணன்

14. வாழ்வு கசந்தது!

ராஜாவைப் பற்றிச் சின்னத்துரை கேட்டதும், பானு அந்தக் கேள்விக்குப் பதிலளிக்காமல் சின்னத்துரையையே உற்றுப் பார்த்தாள்.

சின்னத்துரைக்குப் பாழ் மண்டபத்துச் சாமியார், அந்த விழிகள், மூக்கு எல்லாம் மனக் கண்ணில் பளிச்சிட்டு மறைந்தன.

தன்னையும் அறியாமல் சின்னு நெற்றியில் இன்னும் அடையாளமாக இருந்த தழும்பை, அன்றிரவு விபத்தில் சம்பாதித்துக் கொண்ட தழும்பை, தடவிப் பார்த்துக் கொண்டான்.

''ம், சொல்லு, பானு!...'' என்று சின்னத்துரை தூண்டினான்.

பானு பெருமூச்செறிந்தாள். ''என்னத்தைச் சொல்லுவது? அவரை நான் பார்க்கவில்லை. நீங்கள் பார்த்தீர்களா, அண்ணா?'' என்று கேட்டாள்.

''இல்லையே? அது கிடக்கட்டும். நீ மறுபடியும் அவர்கள் வீட்டோடு ஏன் போனாய்? சுந்தரியம்மாள் எப்படிச் சம்மதித்தாள்?''

''சம்மதித்தாலும் சம்மதிக்காமல் போனாலும் அவர்களுக்கும் வேறு வழி இல்லை. எனக்கும் வேறு இடம் இல்லையே? அங்கு நான் பத்து நாட்கள் குடித்தனம் செய்கையிலேயே ஊர் கொல்லென்றாகி விட்டது. மாமாவின் மேல் அபாண்டத்தைப் போட்டது. நானில்லாமல் அங்கே சமாளிப்பது யார்? அத்தை பத்து நாட்கள் பொங்கி வைத்து விட்டு என்னிடம் என்ன சொன்னாள், தெரியுமா?....''

''உம்!''

'''நீ எப்படித்தானம்மா இவளிடம் இருந்து பேர் சொன்னாயோ? ஐயையோ! நூறு ரூபாய் கொடுத்தாலும் இவள் கீழே இருக்க முடியாது. சின்னு நல்லபடியாய் எழுந்து விட்டால் நான் உதறி எறிந்து விடுவேன்' என்றாள்.''

சின்னத்துரை புன்னகை செய்தான். ''அதென்னமோ, எங்கம்மாவுக்கும் உனக்கும்தான் நல்ல பேர் வாங்கிக் கொள்ளத் தெரியவில்லை. நான் ஒரே நாளில் அவளிடம் எவ்வளவு நல்ல பேர் சம்பாதித்துக் கொண்டேன், பார்....'' என்றான் பெருமை பொங்கி வழிய.

''ரொம்பக் குறுகின அற்ப புத்தி அவளுக்கு. நீங்களும் இன்னும் பத்து நாட்கள் தொடர்ந்து இருந்தால் புளித்திருப்பீர்கள்...''

''நீதான் போனாயே? பின்னே அவர் என்னை ஆஸ்பத்திரியில் வந்து பார்த்த போதும், விடைபெற்றுக் கொண்ட போதும், உடம்பு குணமானதும் அங்கே அம்மாவுடன் புறப்பட்டு வந்து விடு என்று ஏன் வரவேற்றார்?...'' என்று சின்னத்துரை கேட்டான்.

''அதுவா?....எனக்குச் சொல்லக் கூட நாக் கூசுகிறது...ஒரு நாள் நானும் மாமாவும் உங்களை ஆஸ்பத்திரியில் பார்க்க வந்தோம். அப்போது சித்தம் பேதலித்திருந்தது உங்களுக்கு. என் மீது பாய்வது போல் குதித்தீர்கள். என்னவெல்லாமோ சொல்லிப் பிதற்றினீர்கள். நான் ஓடியே போய் விட்டேன். அவரை அடிக்கப் போனீர்களாம். மாமா இதைச் சிறிதும் எதிர்பார்த்திருக்கவில்லை.....''

''எதை?...''

''உங்கள் நடத்தையைத்தான்..... நான் காரணம் ஊகித்து ஒருவாறு சொன்னேன். அப்புறம்...'' என்று பானு தயங்கினாள்.

''ம..?''

''எப்படியோ உங்களுக்கு அப்போது என்னைப் பற்றிய விஷயம் தெரியாதே? மானநஷ்ட ஈடு போல் ஏதோ காசு பணம் கொடுத்து, என்னை உங்களுடன் வாழ வைத்து ஓரளவு சுமையைக்



கழித்து விடலாம் என்று அவர் முடிவு செய்திருப்பார் என்று நினைக்கிறேன். மாமியோடு பேசிய பேச்சை ஒருநாள் கேட்டேன்...உங்களுக்கு ரயிலில் வேலை கூடக் கிடைத்திருக்கும் அண்ணா, நீங்கள் வந்திருந்தால். நீங்கள் ஏனோ தலை காட்டவில்லை!''

''நான் வந்திருந்தால் நீ என்ன செய்திருப்பாய், பானு?'' என்று ஒரு குறுக்குக்கேள்வியை விடுத்தான் சின்னு.

பானுவின் கண்கள் ஒளிர்ந்தன. ''அப்பேர்ப்பட்ட துரோகியாக, மோசமாக நான் இருப்பேன் என்று நினைக்கிறீர்களா, அண்ணா? ஊர் உலகம் சிரிக்க மேல் அந்தஸ்தில் உள்ளவர்கள் ஏழைகளுக்கு இழைக்கும் கொடுமையை வாய் விட்டுக் கத்தி அம்பலப் படுத்தியிருக்க மாட்டேனா? தலை மறைவாய்த் திரியும் பரிதிமால் என் வாழ்வைப் பாழ்படுத்தியவர் என்று என் மானம் போனாலும் போகட்டும் என்று கத்தி யிருக்க மாட்டேனா?...''

சின்னு சிரித்தான். ''பானு! நெருப்புக் கக்கும் புரட்சிக்காரரின் பேச்சு உன்னுடைய நாவிலும் நடமாடுகிறது. சரி...! அப்புறம்?''

''அப்புறமென்ன? அவர் மீண்டும் பிடிபட்டார். குற்ற விசாரணை, காவல் எல்லாம் முடிந்தன. விடுதலையானார். ரயில் தண்டவாளத்துப் பக்கமே தலை காட்டக் கூடாது என்ற கண்காணிப்பில் இருந்தார். கோயமுத்தூரில் அம்மா, பிள்ளை, நாங்கள் மூவருமாகத் தனிக் குடித்தனம் நடத்தினோம்...''

''சொன்ன வாக்கை நிறைவேற்றி விட்டாரல்லவா?...''

''ம், நிறைவேற்றினார்...அண்ணா! உணர்ச்சிக்குப் பேய்த்தன்மை கொடுக்கலாமா? நெருப்பு சுடர்க் கொழுந்தாக எரிகிறது; ஒளி தருகிறது மங்களமாக. ஆனால் அதே நெருப்பைப் பேய்க் காற்றில் அலைய விட்டு உணவும் கொடுத்தால் நன்மையாகுமா? அவர் படபடப்புக்காரர்; துடிதுடிப்புக்காரர். அவருடைய சக்தி யெல்லாம் நன்மைக்காகாமல் வீணுக்கு இரையாகிறது. போனதெல்லாம் போகட்டும். இனிமேல் இந்த அவதி ஒன்றும் வேண்டாம். வீட்டோடு வாசலோடு இருங்கள் என்றால் கேட்கக் கூடாதா? மறுபடியும் கிளம்பி விட்டார். தேர்தலாம், கட்சியாம், பிரசாரமாம். பெரியவர் நயமாய், பயமாய்ச் சொன்னார், அண்ணா! அவர் பேசாமல் இருந்தாலும் அவரைச் சும்மா இருக்க விடடால்தானே? தினம் விடிந்தால் பத்துப் பேர்கள் அவரைத் தேடி வந்து விடுகிறார்கள்!'' என்று வெறுப்பை வெளியிட்டாள் அவள்.

''பானு! உனக்கு எத்தனை பெருமை இது? அவர் பேச்சைக் கேட்க எத்தனை கூட்டம் கூடி யிருந்தார்கள்? நான் கூடக் கேட்டேன்...'' என்றான் சின்னு.

"அண்ணா....!"

அவளுக்கு எப்படித்தான் கண்களில் அவ்வளவு சடுதியில் நீர் நிறையுமோ?

"! என்ன, பானு?"

"கட்சி, கொள்கை என்று ஒரு பெண் பேய் வேறு அவருடனேயே சுற்றுகிறது. எனக்கு வாழ்வு கசந்து போயிற்று, அண்ணா! பெரிய இடத்திலிருந்து 'சீரும் செனத்தி'யுமாகப் பெண் வரவில்லையே என்ற ஆத்திரத்தை எல்லாம் தாயார்க்காரி என்னிடம் உமிழ்ந்து என்னைப் புண்ணாக்குகிறான்; என்னைச் சித்திரவதை செய்கிறான்."

பானு கண்ணீரைப் பிழியலானாள் மறுபடியும்.

சின்னத்துரைக்கு ஏனோ சிரிப்புத்தான் வந்தது.

அவளுக்குப் பொறுமை எல்லை மீறியது. அவருடன் இன்னொருத்தி சுற்றுகிறாள் என்ற எரிச்சலை அவளால் சகிக்க முடியவில்லை.

"ஏன் சிரிக்கிறீர்கள்? எனக்கு இப்பொழுதெல்லாம் சிரிக்கிறவர்களைக் கண்டாலே ஆத்திரம் பற்றிக் கொண்டு வருகிறது, அண்ணா!" என்றாள்.

"சரி, சிரிக்கவில்லை. நீ என்ன செய்ய வேண்டும் என்கிறாய் பானு?"

"அவள் யாரோ பணக்காரர் வீட்டுப் பெண்ணாம். துளியாவது உடலில் கூச்சம் இருக்காதோ? ஒன்றாக வெளியே போகிறதும், சிரிப்பதும்பேசுவதும், ஊர் சுற்றுவதும் ...... சொல்லி முடியாது. இந்தத் துரோகம் நீங்கள் செய்யலாமா என்று கேட்டால் ஒரு சிரிப்புச் சிரிக்கிறார். நான் குறுகிய புத்தி உள்ளவளாம். முட்டாளாம். உலகை விசாலமாகப் பார்க்கத்தெரியாத பைத்தியமாம். இந்தக் குணத்தை நான் வைத்துக் கொண்டிருக்கும் வரையில் என்னோடு வாழ்வதில் அவருக்கு நன்மையே கிடையாதாம். போதுமா?"

ஒரு விசும்பலுடன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு தொடர்ந்தாள்:


"பெரியவர் ஒன்றையும் காதில் போட்டுக் கொள்வதில்லை. 'ரிடையர்' ஆனாலும் ஆனார், பாகவத சமாஜம் எங்கே, பக்தர்கள் கோஷ்டி எங்கே என்று போய் விடுகிறார். அப்பாவும் பிள்ளையும் சந்திப்பதும் இல்லை; சந்தித்



புதிய கோடக்

'வெரிக்ரோம்'

எவ்வித வெளிச்சத்திலும் சிறப்பாகப்






சூரிய வெளிச்சத்திலும், மங்கிய வெளிச்சத்திலும், பிளாஷ் வெளிச்சத்திலும்—எந்த வெளிச்சத்திலும்—கோடக் 'வெரிக்ரோம்' பான் பிலிம் கொண்டு மிகவும் அழகாகப் படங்கள் எடுக்கலாம். ஏனெனில், இந்த பிலிமில் எல்லா வர்ணங்களும் தெளிவாகப் பதிவேறுன! போட்டோ எடுப்பதைத் தொழிலாகக் கொண்டவர்கள் உபயோகிக்கும் ரகத்தைச் சேர்ந்த இந்த பிலிமை சாதாரண காமிராக்களில் உபயோகிப்பதற்காக வழங்குவது இதுதான் முதல் தடவையாகும்.

எந்த வெளிச்சத்திலும் படம் எடுப்பதற்கேற்ற பிலிம்களில் புதிய கோடக் 'வெரிக்ரோம்' பான் பிலிம் தனிசிறந்து விளங்குவதற்கு அதன் கீழ்க் காணும் 3 விசேஷ அம்சங்களே காரணமாகும்.

* அற்புதமாக வர்ணங்களை பதிய வைக்கும் தன்மை: இந்த பிலிம் ஒரே வர்ணத்தில் சாயை பேதங்களைக் கூட நன்கு எடுத்துக் காட்டுகிறது
* அதிவேகமான பிலிம்: சூரிய வெளிச்சத்தில் 80, செயற்கை வெளிச்சத்தில் 64
* பைன்க்ரெயின்: இந்த பிலிமின் பைன் க்ரெயின் அமைப்பு என்லார்ஜ்மெண்டுகள் செய்வதற்கேற்ற மிகத்தெளிவான நெகட்டிவ்களை கிடைக்கச் செய்கிறது.

போட்டோ எடுப்பதைத் தொழிலாகக் கொண்டவர்கள்போல் கவர்ச்சியூட்டும் படங்கள் எடுக்க எப்பொழுதும் கோடக் 'வெரிக்ரோம்' பான் பிலிம் உபயோகியுங்கள்!

கோடக் லிட். (இங்கிலாந்தில் இணைக்கப்பெற்றது: கம்பெனி அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது) பம்பாய் - கல்கத்தா - டில்லி - மதராஸ


பான் பிலிம் கொண்டு
படங்கள் எடுக்கலாம்!
கோடக் 'வெரிக்ரோம்' பான் பிலிம் எந்த காட்சியையும் எந்த வெளிச்சத்திலும் தத்ரூபமாக படம் பிடிக்கும். இன்றே ஒரு பிலிம் சுருள் வாங்குங்கள்!
Kodak
Kodak
Verichrome Pan
PANCHROMATIC FILM
120

தாலும் பேசுவதில்லை. எனக்கு வாழ்க்கை வெறுத்துக் கசந்து போய் விட்டது அண்ணா......'' என்று கூறிமுடித்தாள்.

'' அதற்காக? நீ இந்த நிலையில் ஓடி வரலாமா, பானு? சொல்லிக்கொள்ளாமல் இப்படி வருவதா? நீ செய்தது மிக மிகத் தப்பு!'' என்றான் சின்னத்துரை.

''நீங்களும் வெறுத்தால் நான் எங்கேனும் போகிறேன்....''

மறுபடியும் குழந்தை போல் முகத்தை மூடிக் கொண்டு அவள் கண்ணீர்க் கங்கையைப் பெருக விடுவதற்கு முன், கோயிலுக்குப் போயிருந்தவர்கள் திரும்பி வந்து விட்டார்கள்.

தோளில் குழந்தையைத் தூக்கிக் கொண்டு முன்னே வந்த ரன்னர் ரங்கசாமியும், கமலம்மாளும் வியப்புடன் நெருங்கியவர்களாய், ஏதோ மிருகக் காட்சிச்சாலையிலிருந்து தப்பி வந்த பிராணிகள் தங்கள் வீட்டில் உட்கார்ந்திருந்தாற்போல் பார்த்தார்கள்.

*　　　*　　　*

''செல்லப்பாட்டியின் பேத்திபோல் இருக்கிறதே?'' என்று மங்களம் கமலம்மாளின் காதில் முணுமுணுத்தாள்.

''நான் யாரோ என்று பயந்து போய் விட்டேன், இருட்டிலே யாரு இப்படி உட்கார்ந்திருக்க முடியும் என்று..?'' என்றான் ரங்கசாமி. குழந்தைகள் சிறிது தூரத்தில் தள்ளி நின்றார்கள்.

கிட்டு அவளருகில்வந்து, ''பானுவா? ஆச்சரியமாயிருக்கே! யார் வந்திருக்கிறாங்க கூட?'' என்றார்.

பானு மலங்க மலங்க விழித்தாள்: சின்னத்துரையோ கையைப் பிசைந்து கொண்டு தவித்தான்.

கமலம்மாளுக்குச் சுருக் கென்றது. அவர்கள் இருவருக்கும் இடையே வந்து நின்று, ''ஏண்டி, பானுவா? எங்கேயடி வந்தாய் இங்கே?'' என்று விசாரித்த வண்ணம் ஏற இறங்கப் பார்த்தாள் அவளை.

பானுவுக்குக் குபு குபு வென்று கண்களில் நீர் பொங்கி வந்தது. சின்னு, ''அம்மா, நாம் கூடத்துக்குப் போகலாமே? வழியை விடு, பானு!'' என்று கூறிக்கொண்டே, என்ன பொய் சொல்லலாம் என்று யோசனை செய்தான்.



ஸ்ரீ ஜீனுபாய் தேவிதாஸ் பெங்களூர் நகரசபையின் புதிய மேயராக ஏகமனதாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

''நீ இருடா. ஏன், பானு! யார் வந்தார்கள் உன்னுடன்கூட?'' என்று மறுபடியும் கடுமையான குரலில் விசாரித்த கமலம்மாள் அவள் நிலையையும் ஆபரணங்களையும், சந்தேகத்தைக் கண்களில் நிரப்பிக்கொண்டு அருவருப்போடு பார்த்தாள்.

''என்னம்மா, அதட்டுகிறாய்? அவள் எஜமானர் வந்திருக்கிறாரே கூட. முன்பு இன்ஸ்பெக்டர் இல்லையோ? அவர் பையனுக்கேதான் இவளைக் கல்யாணம் பண்ணிக் கொண்டிருக்கிறார். அவர் ராகவபுரத்திலே பேசப் போய் விட்டார். நம்மை யெல்லாம் பார்க்க வேண்டும் என்ற ஆசையிலே வந்திருக்கிறாள்..'' என்று சின்னத்துரை ஒரு போடு போட்டான்! கமலம்மாள் அயர்ந்து போய் விட்டாள் ஒரு கணம்.

''ஏண்டா? தேர்தலுக்கு நிற்கிறாரே? அவர் பிள்ளை என்று சொல்லிக் கொள்கிறார்களே, அவரைத்தானே?'' என்று கூறிக் கிட்டு அதிசயித்தார்.

''ஆமாம், நீங்கள் ஊரெல்லாம் என்னென்னவோ கதை கட்டினீர்கள், அந்த மனிதரைப் பற்றி. இங்கே ஏன் நிற்கிறாய், பானு? உள்ளே வா!'' என்றான் சின்னு தைரியமாக.

''அப்படிச் சொல்லு? அதுதானே நானும் பார்த்தேன்? மனிதர் முகத்தைப் பார்த்தாலே பெருந்தன்மையும் தயாள குணமும் தெரியவில்லையா? ஏனம்மா, ராகவபுரத்திலிருந்து தனியாகவா வந்தாய்?'' என்று அக்கறையோடு விசாரித்தார் கிட்டு.

''அதுதானே? அவர் போகக் கூடாது என்று தடுத்தாராம். விவஸ்தை இல்லாமல் வம்பளந்த ஊர்; ஜனங்கள், கண்டிப்பாகப் போகக் கூடாது என்றாராம். இவள் மனசு கேட்காமல் திருட்டுத்தனமாய் அவர் புறப்பட்டுப் போன பிறகு வண்டியில் ஏறி வந்திருக்கிறாள். நானும் கோபித்துக் கொண்டாயிற்று'' என்று முடித்தான் சின்னு.

''அடியா? இப்போது எல்லாரும் எங்கேயம்மா இருக்கிறீர்கள்?''

''கோயமுத்தூரில் இருக்கிறார்களாம்'' என்றான் சின்னு முந்திக்கொண்டு.

''அந்த மனிதர் இருந்த காலத்திலே ரயில்வே ஸ்டேஷன் பக்கம் போனாலே

தனியான கலகலப்பு இருந்தது. இப்போது பார், அழுது வழிகிறது. ம்... செல்லப் பாட்டி மட்டும் 'என் பேத்தி அதிர்ஷ்டக்காரி. அவள் ஜாதகம் யோக ஜாதகம்' என்று சொல்லிக் கொண்டே இருந்தாள். அவள் இருந்து பார்க்கக் கொடுத்துவைக்க வில்லையே?'' என்று அங்கலாய்த்தார் கிட்டு.

''பானு, போ! நேரம் ஆகிவிட்டது. போய் உள்ளே படுத்துக் கொள்'' என்று சின்னு உபசரித்தான். அந்த மறைந்த கூடத்தில் ஒரு பாயையும் தலையணையையும் கொண்டுபோட்டான்.

கமலம்மாள் ''உன் மாமியார் சௌக்கியமா?'' என்று விசாரித்து அவளை இன்னும் சந்தேகக் கண்களால் பரிசீலனை செய்தாள். ''உம்...'' என்றாள் பானு.

''கல்யாணம் என்று கால் கடுதாசி கூடப் போடவில்லையே? எங்களுக்கு ஒரு சேதிதான் தெரியக் கூடாதோ? ஏண்டி? எங்கே வைத்துக் கல்யாணம் நடந்தது?'' என்று கேட்ட கமலம்மாவின் விசாரணையில் அளவற்ற இகழ்ச்சி நிறைந்திருந்தது.

''ஒருவருக்குமே தெரிவிக்கவில்லை. மாமியாருக்கு உடம்பு ரொம்ப அதிகமாக இருந்தது அப்போது. பேரூரில் வைத்து நடந்தது'' என்றாள் பானு கம்மிய குரலில்.

''இது எத்தனை மாசம்? வீட்டில் யார் இருக்கிறார்கள்?'' கமலம்மாளின் கேள்வியில் துளி பரிவு இருக்க வேண்டுமே!

இந்தக்கேள்வி வந்ததுதான் தாமதம், பானுவின் கன்னங்களில் வெம்பனி உருகி ஓடியது.

''அம்மா, அவள் படுத்துக் கொள்ளட்டும். நீ இப்படி வா'' என்று அழைத்தான் சின்னு.

வாசல் ரேழி நடையில் அவர்கள் இருவரும் விடிய விடியப் பேசினார்கள். சின்னு அவள் கதையை எவ்வளவு உருக்கமாகத் தாய்க்குக் கூறிப் புரிய வைக்க முடியுமோ, அவ்வளவு உருக்கமாக எடுத்துச் சொன்னான்.

''அநாதையம்மா. இந்தச் சமயத்தில் நாம் மனசு நோகப் பேசக் கூடாது. ஏற்கனவே அனிந்து போயிருக்கிறது. கொஞ்சம் ஆறட்டும். நாலைஞ்சு நாட்கள் ஆனதும் நானே அழைத்துப் போய் விட்டு விடுகிறேன்'' என்றான்.

அவன் இப்படிப் பானுவிடம் பரிவு காட்டியதைக் கமலம்மாள் கொஞ்சமும் ஆதரிக்கவில்லை. (தொடரும்)

திருவேற்காட்டில் கும்பாபிஷேகம்

தமிழ்நாட்டின் தலைநகரமான சென்னை நகர எல்லையிலிருந்து ஐந்து மைல்களுக்கு அப்பால் திருவேற்காடு என்ற புண்ணியஸ்தலம் இருக்கிறது. இங்குள்ள கருமாரி அம்மன் என்ற சக்தியுள்ள தெய்வத்தின் திருக்கோயிலுக்குப் பக்த கோடிகள் ஆயிரக்கணக்கில் சென்று கொண்டிருக்கிறார்கள். இக் கிராமம் சென்னைக்கு அருகில் இருக்கிறதே ஒழியச் சிறிதும் போக்குவரத்து வசதியே இல்லாமல் இருக்கிறது: சரியான சாலையும் கிடையாது. தலை நகருக்கு வெகு அருகில் இருக்கும் கிராமம் இத்தனை கேவலமான நிலையில் இருந்த பொழுதிலும் இந்தத் தொல்லைகளையெல்லாம் பொருட்படுத்தாமல் பக்தர்கள் சென்று தேவி கருமாரி அம்மனைத் தரிசித்து வருகின்றனர். திரு பி. நடேச சுவாமிகளின் தலைமையில் பல பக்தர்கள் கடந்த பதினைந்து ஆண்டுகளாகப் பெருமுயற்சி செய்து தேவி கருமாரியம்மன் கோயில் திருப்பணியைப் பூர்த்தி செய்து கும்பாபிஷேகமும் செய்தனர். இந்தக் கும்பாபிஷேக வைபவம் ஜனவரி 20-ந் தேதி சிறப்பாக நடைபெற்றது. கும்பாபிஷேகத்தின்போது மந்திரி பக்தவத்ஸலம், திருமதி மரகதம் சந்திரசேகரன் முதலியோர் விஜயம்செய்திருந்தனர். திருவேற்காடு கிராமத்துக்கு நல்ல சாலை அமைக்கும்படி சர்க்கார் கருணைபுரிய, தேவி கருமாரியம்மன் கடைக்கண்பாலித்து அருளவேணும் என்று அன்றைய தினம் வந்திருந்த ஆயிரக்கணக்கான மக்கள் வேண்டிக் கொண்டனர். தேவி கருமாரியம்மன் திருக்கோபுரத்தையும், அம்மன் கோயிலுக்குக் கும்பாபிஷேகம் நடைபெறும் காட்சியையும் படத்தில் காணலாம்.



காசியாத்திரை

சுகி

தில்லைநாயகம் குறுக்கும் நெடுக்குமாக நடந்துகொண்டிருப்பதை எதிர்வீட்டுக்காரர் பார்த்து ஆசையை அடக்க முடியாமல், ''என்ன தில்லை அண்ணாச்சி, பலத்த யோசனை! எந்தக் கோட்டையைப் பிடிக்க இவ்வளவு யோசனை?'' என்று கேட்டார்.

''நம்ம காசி-அத்தான் விசுவநாதம் வருகிறாங்க'' என்றார். திருவாளர் விசுவநாதம் காசிக்குப் போக வேண்டுமென்று ஒவ்வொரு தடவையும் சொல்லுவார். அவர் போகாமல் இருந்த காரணத்துக்காகவே, அவருக்குப் பட்டப் பெயர், 'காசி அத்தான்' என்று எல்லோரும் கூப்பிடுவார்கள்.

''நிசமாகவே காசிக்குப் போகிறாங்களா? எங்கே நான் நம்பல்லே.''

''நிச்சயமாகப் போகிறாங்க. இன்றைக்கு இரவு அவங்க வருகிறாங்க. நாளை ஒருநாள் இங்கே தாமதம்.''

''அப்போ நாளை வடை பாயசத்தோடு விருந்து இருக்குமே?''

தில்லைநாயகத்துக்கு உண்டென்று சொல்வதற்கும் கூச்சம்; இல்லையென்று சொல்வதும் அநுசிதம். இதற்காக உதட்டிலே ஒரு புன்முறுவலை நெளிய விட்டார். அதேசமயம் அடுக்களைப் பக்கம் சமையல் தடபுடல்கள் சத்தமாகவும் வாசனையாகவும் மிதந்து கொண்டிருந்தன. காசி அத்தான் விசுவநாதம் உணவுப் பிரியர். சல்லாபமாகப் பேசுவார்; கலகலவென்று இருப்பார்; அவர் வந்துவிட்டால் அந்த ஸ்டோர் மகாஜனங்கள் அத்தனை பேருக்கும் பொழுது போகும். காசி அத்தான் வந்து விட்டால் அவர் போகும் வரை எதிர் வீட்டுக்காரர் வெற்றிலை வாங்கும் பொறுப்பை மறந்து இரவினிலேயே தம்முடைய காலத்தைக் கடத்தி விடுவார்.

தில்லைநாயகம் வீட்டுக்குள்ளிருந்து சாம்பார் வாசனை வந்தது; பூண்டு ரசத்தின் தாளித மணம்; ஏதோ ஒரு வறுவல்-உருளைக் கிழங்கு என்று எதிர் வீட்டுக்காரர் எண்ணினார். இத்தனை வாசனையும் வரவே, 'காசி அத்தான்' இன்னும் சிறிது நேரத்தில் வரப் போகிறார், சாப்பாட்டுக்கு அப்பால் தளிர் வெற்றிலை, வாசனைப் பாக்கு, பன்னீர்ப் புகையிலை கிடைக்கும் என்ற அற்ப ஆசை.

அரை மணியில் ''வே, தில்லை'' என்ற அன்புக்குரல் தெருவில் கேட்டது. வண்டி வந்து நின்றது. தில்லை ஓடினார்.

''வாருங்கள் அத்தான்!'' என்றும் ''வா அக்கா!'' என்றும் அருமையாகக் கூப்பிட்டார். அத்தான் கையிலே உள்ள பையை வாங்கினார். தில்லையின் குழந்தைகள் இரண்டு 'மாமா, மாமா' வென்று ஓடின. ஸ்டோர் குடிகள் ஒரு சிலர் ஆங்காங்கே இருந்தபடியே 'வாருங்கள்' என்றார்கள். எல்லாவற்றுக்கும் சிரிப்பும் மரியாதையுமாகக் 'காசி அத்தான்' ''ஆமாம்'' என்று சிரித்துக் கொண்டு உள்ளே வந்தார். அவர் மனைவியும் அடக்க ஒடுக்கமாக இறங்கி வந்தாள். மருமக்கப் பிள்ளைகளில் எத்தனையைத் தூக்க முடியுமோ, அத்தனையும் தூக்கி முத்தம் கொடுத்தாள்.

''வே, தில்லை! வண்டியிலே டின்னும் மூட்டை முடிச்சுமாக இருக்குது. வண்டிக் காரனைக் கொண்டு வரச் சொல்லும். அவற்றை நின்று கவனியும்.''

தில்லைநாயகம் ஒவ்வொரு பொருளையும் ஆடாமல் அசங்காமல் தூக்கிக் கொடுத்தார். வத்தல், வடகம், மாவு வகைகள், பண்டங்கள், பட்சணங்கள் என்று பலவித டின்களில் இருந்தன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு மணம். துணிமணிக்காகக் கனமில்லாத தோல் பெட்டி-இவ்வாறு அவர் சிறிய ஒட்டுக் குடிக்கு வேண்டிய பொருள்கள் கொண்டு வந்திருந்தார். காசிக்கு யாத்திரை என்றால் அதுவும் மூன்று மாதம் தங்குவதற்குரிய பொருள்கள் வேண்டாமா?

விசுவநாதம் வீட்டுக்குள்ளே வந்து கலகல வென்று பேச ஆரம்பித்தார். பிள்ளைகளுக்குத் தகர டின்னைத் திறந்து முறுக்கு வகைகள் கொடுத்து விட்டதால் அவர் பேசுவதற்கு இடையூறு இல்லை. எதிர் வீட்டுக்காரர் குசலம் விசாரிக்க வந்தபோது, ''இந்தாருங்கள், உங்களுக்குப் பிடித்தமான வெற்றிலை!'' என்று தள்ளினார். அவர் வரவு ஸ்டோர் மகாஜனங்களுக்குத் தெரிந்து விட்டது. எல்லோரும் எட்டி நின்றபடியே விசாரித்துவிட்டு விலகிக் கொண்டார்கள்.

''ஆமாம்! அந்த நரிவளையிலுள்ள குண்டன் எங்கே?'' என்று கேட்டார் விசுவநாதம்.

எல்லா வீடுகளுமே அந்த ஸ்டோரில் சின்ன வீடுகள். சொப்பு மாதிரி மிகவும் சின்ன வீடு ஒன்று. அதிலே உள்ள குண்டன், காப்பி கிளப் சர்வர். அவனுக்கும் விசுவநாதத்துக்கும் ரொம்ப நட்பு. அவன் வரவில்லை என்று ஆதங்கம் அவருக்கு. ஆனால் அந்த வீட்டில் வேறு குடியிருக்கிறார்கள் என்ற தகவல் வந்தது. 'அங்கே இருப்பவர்கள் நாங்கள்' என்று சொல்வதைப் போல, தில்லைநாயகத்தின் வீட்டுக்குள் ஒரு அம்மாள் வந்தாள். அவள் ஏதோ சாமான் இரவல் பெற வந்தாள்.

ரகசியமாக, ''அவங்க போகட்டும்'' என்று கண் ஜாடை காட்டினார் எதிர்வீட்டுக்காரர். அந்தம்மாள் ஒரு வெள்ளித்தட்டு, இரண்டு பளபளக்கும் தம்ளர், தம்ளருக்குள் ஏதோ ஒரு பொருள் இத்தனையும் இரவல் வாங்கிச் சென்றாள். நரி வளை வீட்டுக்குக் குடி வந்த குடும்பத்தில் நாலு பேர்கள் இருந்தனர். ஒருவர்கூட வசிக்க முடியாத இடத்தில் அவர்கள் நாலு பேர்களும் வசித்தார்கள். அந்த வீட்டுக்கு அவர்கள் வந்த நாள் முதலாய் ஒன்று விட்டு ஒன்று பெண் பார்க்க மாப்பிள்ளைகள் வருவார்கள். அவர்களுடன் ஒரு கூட்டமும் வரும். பெண் பார்க்க வரும் போதெல்லாம் தில்லைநாயகம் வீட்டு வெள்ளித் தட்டு தம்ளர் வகையரா போய் மீளும்.

இந்த விருத்தாந்தத்தை எவ்வளவு சுருக்கமாகவும் நையாண்டித்தனமாகவும் சொல்ல

லாமோ, அவ்வாறு சொன்னார் எதிர்வீட்டுக்காரர். தாம் சர்வ ஜாக்கிரதையாக இருந்தும் 'நொண்டிப் பெண்' என்ற பதத்தை நாக்குச் சொல்லி விட்டபோது பல்லைக் கடித்தார்.

''பெண்ணுக்குக் கால் நொண்டியா, கையா?'' என்று கேட்டார் காசி அத்தான்.

''கால் நொண்டியென்று சொல்ல முடியாது. பிறவியிலேயே அப்படி. ஏழை வீட்டுப் பெண்; உடம்பிலே சத்தும் சௌகரியமும் இருந்தால் இந்த வயசுக்குக் குதிரைக் குட்டி போல இருக்கும்.''

காசி அத்தான் வெற்றிலையில் அழுத்தமாகச் சுண்ணாம்பைத் தடவினார். அவர் உள்குரலில், மனசில் அந்தப் பெண் மானசீகமாகப் புகுந்தாள். 'பாவம்' என்று அவர் சொல்லிக் கொண்டார்.

''அத்தான்! சீக்கிரம் எழுந்திருங்கள். சாதம் ஆறிப் போகும்.''

''உம்...''

விசுவநாதத்தின் மனசில் நரி வளைக்குள் குடியிருக்கும் குடும்பத்தின் நபர்கள், அவர்கள் பெறும் ஏமாற்றம், தரித்திரம், வருகின்ற மாப்பிள்ளைகள் வரிசை இடம் பெற்றன.

''நீங்களும் ஏழெட்டு வருஷங்களாகக் காசிக்குப் போகணும், போகணும் என்று சொல்லிச் சொல்லி, ஒரு மட்டும் இந்த வருஷம் போகவே போறீங்க. வரும்போது நம்ம வீட்டிலே இதை விடப் பலத்த விருந்து!'' என்று சொன்னார் தில்லை நாயகம்.



''ஏனு, இல்லே'' என்றாள் விசுவநாதத்தின் மனைவி, தன் தம்பியைப் பார்த்து. ''இவங்க இந்தத் தடவையும் புறப்பட மாட்டேன் என்று சொன்னாங்க. ஒவ்வொரு சமயம் ஒவ்வொரு செலவு வந்திடும். இந்தத் தடவை பணம் பல ஆபத்தைத் தாண்டி, ரயிலேறி வந்திருக்குது. உங்க அத்தான் காரியம் தெரியுமே. கஷ்டம் என்றால் கையிலே இருப்பதைக் கொடுத்து விடுவாங்க; எனக்கும் ஒரு ஆசை, காசிக்குப் போய் வந்து விடலாம் என்று. காசிக்குப் போய் வந்தோம் என்றால்......''

அவள் பெருமூச்சுக்கு அர்த்தம் அங்கே இருப்பவர்களுக்குத் தெரியும். போய் வந்த பத்தாவது மாதம் தனக்கு ஆண் குழந்தை பிறக்கும் என்பது அந்த அம்மாள் நம்பிக்கை.

''உன்னுடைய தொந்தரவுக்கு மசிந்து காசிக்கு வரேன். என்ன காசி, கன்னியாகுமரி? மனிதனுக்கு உள்ளதுதான் என்றும் கிடைக்கும். நான் சொல்லுறேன். காசியிலே இருந்து திரும்பும்போது, சின்னப்பயலை நம்மோடு அழைத்துக் கொண்டு போய்விடலாம். இரண்டு வருடங்கள் பொறுத்துப் பார்க்கலாம் என்ற உன் யோசனை வேண்டாம்'' என்ற விசுவநாதம் குட்டை உடைத்து விட்டார்; தில்லை நாயகத்தின் கடைக்குட்டிப் பயலை 'தத்து' எடுத்துக் கொள்ளலாம் என்று அவருக்கும் அவர் மனைவிக்கும் முன்பு நடந்த வாக்குவாதத்தை உடைத்து விட்டார்.

★

காலைப் பொழுது விடிந்தபொழுது, தமக்குப் பிரியமான நரி வளை வீட்டை நோட்டம் விட்டார் விசுவநாதம். அங்கே யாரோ ஒரு வாலிபன் பரபரப்பாக ஓடிக் கொண்டிருந்தான். யாரையோ எதிர்பார்க்கும் குறி முகத்தில் சலனமிட்டது. அந்த அறைக்குள்ளிருந்து ஒரு பெண்; சற்று ஒல்லி; வயசு காரணமாகத் தேகத்தில் பசுமை; ஊட்டம் இருந்தால் இன்னும் தெம்பும் பளபளப்பும் அதிகம் இருக்கலாம். காலைச் சற்று விந்தி நடந்தது; முகத்திலே களை. யாரும் விரும்பக் கூடிய அழகுதான். அதற்கு மாப்பிள்ளை வராமல் போவதை எண்ணி வருந்தினார்.

சில்க்குச் சட்டையும் அங்கவஸ்திரமுமாக ஒரு பையன் வாட்டசாட்டமாக வந்தான்; அவன் பின்னால் வயதான ஒருவர் நிழலாகப் போனார். அவர்கள் இருவரும் குனிந்து அந்த நரி வளைக்குள் நுழைந்தார்கள். பெண்ணுக்கு அத்தை வரவேற்கும் குரல், பதில் வணக்கம் ஒவ்வொன்றும் விசுவநாதத்தின் காதில், மனசில் விழுந்துகொண்டிருந்தன. பெண்ணுக்கு அண்ணன் உள்பக்கமும், வெளிப் பக்கமும் ஓடிக் கொண்டிருந்தான். காப்பி தம்ளர்களைத் தண்ணீரில் அலசுவதற்காக ஓடி வந்தான். பக்கத்து வீட்டு இரவல் ஜமுக்காளத்தை உதறி விரித்தான். வந்தவர்கள் அங்கே அமர்ந்தார்கள். தட்டிலே வெற்றிலைப் பாக்கு, பழம் இருந்தன.

''அத்தை! பெண்ணை வரச் சொல்லு.''

விசுவநாதம் சிரித்துக் கொண்டார்; அந்த வளைக்குள் எழுபது கட்டுகள் இருக்கின்றனவா? இல்லையே. ஒரே அறையில் சாக்குத் திரைக்கு அப்பால் பெண் நின்று கொண்டிருக்க வேண்டும். விசுவநாதம் இதை எண்ணிச் சிரித்தார்.

''பெண், நாங்கள் வரும்போது உள்ளே போனாளே, அவள்தானே?'' என்றார் உடன் வந்த பெரியவர். இதற்கு அப்பால் நடந்த பேச்சுக்கள் மெல்லிய குரலில் நடைபெற்றதால் விசுவநாதத்தின் காதில் விழவில்லை; தில்லைநாயகம் சட்டையைப் போட்டுக் கொண்டு, சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு டிக்கெட்டு ரிசர்வ் செய்யப் புறப்பட்டார்; குழந்தைகளில் ஏதோ ஒன்று மோட்டார் கேட்டு அழுது கொண்டிருந்தது.

''ஒரு பொம்மை மோட்டார் வாங்கிக் கொடும், தில்லை!''

''அதுக்கு என்ன? எப்போதும் அப்படித்தான் ஏதாவது கேட்டுக்கொண்டே யிருக்கும்!'' என்றார் தில்லை.

தில்லைநாயகம் தயங்கியது டிக்கெட்டுக்குப் பணம் வேண்டும் என்பதற்காகவும் என்ன

வருப்புக்கு எடுக்க வேண்டும் என்ற விவரங்களை அறிந்து கொள்வதற்காகவும்.

''உம் அக்காளிடம் கொடும் பணம். காசிக்குப் போயும் அந்தக் கருமம் நமக்கு எதற்கு? பணத்தை உம் அக்காள் கையில் ஒப்படைத்து விட்டேன். மூன்றும் வருப்பே போதும். இல்லை, உம் அக்காள் மேல் வருப்பு வேண்டுமென்றால் அதையே வாங்குங்கள்'' என்று பட்டுக் கொள்ளாமல் சொன்னார். அவர் மனைவி நூறு ரூபாய் நோட்டுகள் பல எண்ணியவள் ஒரு நோட்டை எடுத்துக் கொடுத்தாள். வேறு ஏதேனும் சாமான்கள் வேண்டுமா வென்று கேட்டுக் கொண்டு தில்லைநாயகம் புறப்பட்டார்.

அந்த வேளையில், நரி வளைக்குள்ளிருந்து வந்த வாலிபன், ''சார், நீங்கள் இருந்தால் நலம். என் தங்கைக்குப் பேச்சு நடக்கிறது. உடன் இருந்து 'செட்டில்' செய்து விடுங்கள்'' என்று கெஞ்சினான். தில்லைக்குக் கஷ்டம்; தட்ட முடியாத தாக்ஷிண்யம்.

''டிக்கெட் ரிசர்வ் செய்து விட்டு வர வேண்டுமே?''

''பத்து நிமிஷம்'' என்று கூறிய வாலிபன் கையைப் பிடித்துக் கொண்டு தன் வீட்டுக்குள் இழுத்தான். வாசற்படியில் போகும் தில்லையைப் பார்த்துக் கொண்டிருந்தார் விசுவநாதம். அந்த வேளையில் எதிர்வீட்டுக்காரர், மெதுவாக எட்டிப் பார்த்து, ''என்ன சாவகாசமாய் உட்கார்ந் திருக்கிறீர்கள்? தில்லை டிக்கெட் எடுக்கப் போய் விட்டாரா?'' என்று கேட்டுக் கொண்டே வந்தார். வெற்றிலையின் துளிர் அவரைத் தம் வீட்டுக்குள் இருக்க விடவில்லை.

''அதற்குத்தான் புறப்பட்டான்; அந்தப் பக்கத்து வீட்டுத் தம்பி வந்து கூப்பிட்டான். அங்கே போயிருக்கிறான்'' என்றார் காசி அத்தான்.

எதிர்வீட்டுக்காரர் நமட்டு விஷமத்தனமாய்ச் சிரித்தார். அவர் சிரிப்புக்குள் ஆயிரம் அர்த்தம். அந்தக் கலியாணம் பிரம்மதேவன் வந்தாலும் நடக்காது என்று உதட்டைப் பிதுக்கினார். சென்ற வாரத்தில் வந்த கிழவன் பேசியது போல நொடித்துப் பேசிக் காட்டினார். கேட்டுக் கொண்டிருந்த விசுவநாதத்துக்கு ஒரு பக்கம் இரக்கம்; மற்றொரு பக்கம் சிரிப்பு.

''பையனை எமகாதகன் என்று சொல்ல வேண்டும். தங்கைக்குக் கல்யாணம் செய்து விட்டுத்தான், தான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்றிருக்கிறான்.''

''அது நல்லதுதானே? ஏழைப்பட்ட குடும்பம். அதோடு பெண்ணுக்கு ரணம். வறுமையால் அழகும் தேய்ந்திருக்கிறது.''

''ஆமாம். எவன் பணம் இல்லாமல் இந்த நொண்டிப் பெண்ணைக் கட்டிக் கொள்வான்? ஊரில் ஒவ்வொருவன் பெண்ணோடு ஆயிரம் இரண்டாயிரத்தை வைத்துக் கொண்டிருக்கிறான். நடக்கவில்லை. இதற்காவது, கலியாணம் ஆவதாவது?'' என்று கூறி எதிர்வீட்டுக்காரர் ஏளனமாகச் சிரித்தார்.

தில்லைநாயகம் சமாதானம் செய்யும் குரல் கேட்டது. மாப்பிள்ளையின் சார்பாக அவருடன் வந்தவர் ஏதோ சொன்னார். இரு



வருக்கும் ஊடாகப் பெண்ணின் தமையன் கெஞ்சுதல் குரலில் ஏதோ நயமாக வேண்டிக் கொண்டான். இருவருமே வெளியே எழுந்து வந்து விட்டார்கள். அவர்களுக்குள் நடைபெற்ற பேச்சை ரசிப்பதற்காக ஒரு சிலர் ஜன்னல் அருகில் வந்து நின்று கொண்டிருந்ததைப் பார்த்தார் காசி விசுவநாதம்.

"எப்படியும் போகிறது. ஐந்நூறு கொடுத்து விட்டால் எல்லாம் முடிந்துவிடும். மேலே ஒரு தம்பிடி சீர் செட்டு கேட்கப்படாது."

தில்லைநாயகம் மூச்சைப் பிடித்துக்கொண்டு கத்தினார். மாப்பிள்ளைப் பிள்ளையாண்டானின் கரங்கள் தில்லையின் கரத்துள் சிக்கிக் கொண்டிருந்தன. உடன் வந்தவர் கண்டித்தார். பையன் 'சம்மதம்' என்றான். ஆனால், பெண்ணின் தமையன் "அது ரொம்ப அதிகம். முடியாது. எனக்கே மாதம் நாற்பத்தைந்து ரூபாய் சம்பளம். எப்படி அவ்வளவு தொகை கடன் கிடைக்கும்? வாங்கிய கடனை எப்படிக் கட்டுவது? முடியாது; முந்நூறு என்று வைத்துக் கொள்ளுங்கள்" என்று கெஞ்சினான்.

மாப்பிள்ளை மசியவில்லை. உடன் வந்த பெரியவரும் மசியவில்லை.

"தில்லை, இங்கே வாரும்" என்றார் காசி அத்தான். தம் நாமதத்துக்குத் திட்டுக் கிடைக்கும் என்ற பயத்தால், "இதோ டிக்கெட் ரிசர்வ் செய்யப் போகிறேன்.." என்றார் தில்லைநாயகம்.

"என்ன அபிப்பிராய பேதம், அங்கே?" என்று அன்பாகச் சொன்னபோது இடமனசோடு தில்லைநாயகம் வந்தார். அவரைப் பின்பற்றி அந்தக் கூட்டமும் அங்கே வந்துவிட்டது. வந்தவர்களை உட்காரச் சொன்னார். அவர்கள் வசதியாக உட்கார்ந்தார்கள். மாப்பிள்ளைப் பிள்ளையாண்டானாக வந்தவனை ஒரு நோட்டம் விட்டபோது, மானமுள்ளவன், பெண்ணை வைத்துக் காப்பாற்றுவான், ரசிகன் என்ற அபிப்பிராயம் விழுந்தது. அவர்கள் என்னவென்று ஆதியோடு அந்தமாய்க் கேட்கப் போக இரு தரத்துக் குடும்ப விவகாரங்களும் முளைத்தன. பெண்ணின் ஊனம், ஏழைமை இரண்டுக்கும் ஈட்டுத் தொகையாக மாப்பிள்ளை ஐந்நூறு கேட்கிறான்; கொடுக்க முடியாத நிலைமையைச் சொல்லி அழுகிறான் உடன் பிறந்த தமையன்.

விசுவநாதம் மாப்பிள்ளையாக வரப்போகிறவனை மீண்டும் ஊடுருவிப் பார்த்தார். "ஏனய்யா, பெண்ணின் அழகையும் அந்தஸ்தையும் நன்றாகப் பார்த்துக் கொண்டீரா? நாளைக்கு அதை அழ வைக்க மாட்டீரே?" என்று மறைமுகமாகப் பெண்ணின் அங்கஹீனத்தைச் சொன்னார். "மனிதனுக்கு நாக்கு ஒன்றா, இரண்டா?" என்று சொன்னான் பெண் பார்க்க வந்தவன்.

"நீர் என்னய்யா?" அண்ணன்காரனைப் பார்த்துக் கேட்டார்.

"பணத்தைத் தவிர, மற்றபடி சம்மதம்."

"பணம் கிடக்குது, இருவருக்கும் சம்மதம். சரி, முடித்து விடும், தில்லை!"

"என்ன அத்தான்! பணத்துக்குத்தான் தாவா. ஒத்துப்போக மாட்டேன் என்கிறார்கள்" என்று விளக்கினார் தில்லைநாயகம்.

"என்ன, பணம்? டேய்! உள்ளே பெட்டியைத் திறந்து இன்னும் நானூறு கொண்டு வந்துகொடு" என்று ஆக்ஞை போட்டார். அவர் பேச்சுக்கு எதிர்ப் பேச்சு பல நாட்கள் பேசலாம். உடனடியாகக் கீழ்ப்படிய வேண்டும். அவர் மனைவி முணுமுணுத்துக் கொண்டே பணத்தை எடுத்து வந்து கொடுத்தாள். அவள் முகத்தில் காசியாத்திரை தடைப்பட்டதில் வருத்தம். மற்றவர்கள் ஆச்சரியத்தால் திகைத்தார்கள்.

"பணத்தைக் கொண்டுபோய்க் கல்யாணம் ஜாம்ஜாம் என்று நடத்துங்கள். இந்தாய்யா, ஏழைப்பட்ட உமக்கு ஏழையின் கண்ணீர் தெரியும். பிறகு தொல்லை செய்யாதீர். போங்கள், எதற்காக இங்கே நிற்கிறீர்கள்?" என்று எதுவும் நடக்காதவர் போன்று உள்ளே வந்து விட்டார் காசி அத்தான்.

ஒவ்வொருவராக நன்றியைத் தெரிவித்து விட்டுப் போனார்கள். எதிர் வீட்டுக்காரர் பிரமை பிடித்தவர் போலிருந்தார்.

"தில்லை! ஊருக்கு ரிசர்வ் செய்துவிட்டு வந்துவிடும்" என்று சொன்னார் காசி அத்தான். தில்லைநாயகம் தமக்கையிடம் பணம் கேட்கப் போனபோது அவள் எரிந்து விழுந்தாள்.

"அவனுக்கு என்ன உலகம் தெரியும்? காசியும், ராமேசுவரமும்! தள்ளும் குப்பையிலே. 'பாவம் ஒரு நொண்டிப் பெண் நல்வாழ்க்கைக்குப் பணம் கொடு' என்று அந்தக் காசி விசுவநாதன் இந்தச் சமயம் என்னைக் கொண்டு வந்து வைத்திருக்கிறான். உம் அக்காளின் வருத்தம் கிடக்கட்டும். நமக்குக் காசியும் வேண்டாம், கீசியும் வேண்டாம்" என்று சொன்னவர் தாமே எழுந்து வந்து, பெட்டியைத் திறந்து டிக்கட்டுக்குப் பணத்தை எடுத்துக் கொடுத்தார்.

அன்றிரவு மெயிலுக்கு அவர்கள் புறப்பட்டபோது விந்திக் கொண்டு வந்த பெண் தன் நன்றியறிதலைக் காட்ட ஓடோடி வந்து தம்பதிகள் காலைப் பிடித்துக் கண்ணீர் வடித்து வழியனுப்பினாள். காசியில் அப்படி நன்றிகூறி யாரும் வழியனுப்ப மாட்டார்கள் என்பதைக் காசி அத்தான், அவர் தர்மபத்தினி இருவரும் உணர்ந்து கொண்டார்கள். கோபங் கொண்ட அவரது மனைவியின் முகத்தில்கூட அந்தப் பெண்ணுக்குக் குங்குமம் இடும்போது சாந்தமும் அன்பும் நிலவின.

ஸ்டோர் மகாஜனங்கள்—முன்பு வேடிக்கை பார்த்தவர்கள், பக்தி நிறைந்த கண்களோடு அவர்களை வழியனுப்பினார்கள். காசிக்குக் கொண்டுவந்த உணவுப் பண்டங்கள் அனைத்தும் தில்லைநாயகத்துக்குச் சேர்ந்தன. மிச்சமுள்ள தொகையில் நூறு ரூபாய் தேறும்.

நடையைக் கடந்தபோது, "ஒரே ஒரு விஷயம் கோபிக்க மாட்டீர்களே?" என்று ரகசியமாகக் கேட்டாள் அவர் மனைவி.


"என்ன?"

"கடைக்குட்டிப் பயலைக் கூடவே அழைத்துக் கொண்டு போவோம். காசிக்குத்தான் போகவில்லையென்றால்....?"

"உம்..."

பையனுக்குக் குஷி. அவர்களுடன் அவன் பிரயாணமானான். காசி யாத்திரை போய், முடித்துக் கொண்ட பலனைக் கைமேல் பெற்றவர்கள்போல உற்சாகமாக வண்டியேறினார்கள் தம்பதிகள். எல்லோர் கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் வடிந்தது.


பிரகாசமுள்ள
வெண்ணிறப் பற்கள்
மட்டுமல்ல
அத்துடன்
ஆரோக்கியமான
ஈறுகளும்!
ஈறுகளை கெட்டியாகவும் ஆரோக்கியமாகவும் வைக்கவும் மற்றும் பற்களுக்கு ஸ்படிகத்தைப் போன்ற வெண்மையை அளிக்க வேண்டும் என்றே போர்ஹான்ஸ் டூத்பேஸ்ட் விசேஷமாய்த் தயாரிக்கப்படுகிறது. உங்களை ஈறுகள் சம்பந்தமான நோய்கள் தொற்றிக்கொண்டு அவதி கொடுக்காதிருக்கவே யாவரும் அறிந்த இப்பற்பசையில் டாக்டர் ஆர். ஜெ. போர்ஹான் டி. டி. எஸ் அவர்கள் பக்குவப்படுத்திய முறையில் விசேஷ காரப் பொருள் கலக்கப்படுகிறது. ரத்தக்கசிவு வீங்கிய ஈறு புண்ணானதும் மற்றும் கூசும் ஈறுகளை லேசாக போர்ஹான்ஸ் கொண்டு தேய்க்க வேண்டும். அவை உடனே கெட்டியான ஆரோக்கிய நிலைக்குத் திரும்பி விடும் ஆனபடியால் இந்த இரட்டைக் காரியமுள்ள பற்பசையை நீங்கள் உபயோகித்து பளிச்சென இருக்கும் வெண் பற்களையும் நல்ல ஆரோக்கியமான ஈறுகளையும் உடையவரெனப் பெருமைப்படலாம்.
தன்த்வைதிரால்
செய்யப்பட்ட டூத்பேஸ்ட்
M-10



சேற்றில் மலர்ந்த செந்தாமரை



எங்கிருந்தோ மேள வாத்தியத்தின் இன்னிசை வந்தது. இதைத் தொடர்ந்து "கெட்டி மேளம்" கொட்டிய சத்தம் கேட்டது.

தனிமையில் இருந்த தியாகராசனின் மனத்தில் பல ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த தன்னுடைய திருமணச் சம்பவத்தை யொட்டிய நினைவுகள் எழுந்தன.

அப்போது அவனுக்குப் பதினெட்டு வயது இருக்கும். எப்பொழுதும் துரு துரு என்றிருப்பான். பழைய மூடப் பழக்க வழக்கங்கள் எல்லாம் அவனுக்குக் கட்டோடு பிடிக்காது. இருந்தாலும் அவனுடைய தந்தை "குலம், குடும்ப கௌரவம்" என்றெல்லாம் அடிக்கடி சொல்லிக் கொண்டு அதற்காக ஆயிரக்கணக்கான ரூபாய்களை வாரி இறைத்துக் கொண்டிருந்ததும், யாரோ அவர் தந்தையைச் சாதிப் பிரஷ்டம் செய்து விட்ட கொடுமையை நினைத்து அதற்குப் பழி வாங்குவதற்காக ஒரு இளம் பெண்ணின் வாழ்வையே குலைக்க முன் வந்ததும் அவன் நினைவுக்கு வந்தன!

அவன் தந்தை தம்முடைய அப்பா தாத்தாவின் வாழ்க்கைக் கதைகளைச் சொன்னது இன்றும் சங்கிலித் தொடர்போல அவன் கண்முன்னே தோன்றியது. மூன்று தலைமுறையின் கதையை ஒரு தரம் நினைத்துப் பார்த்துக் கொண்டான்.

**　　　**　　　**

கிராமத்தில் வாழும் சில பெரிய குடும்பங்களின் சரித்திரம் நூறு இருநூறு ஆண்டுகளுக்குக் குறைந்ததாயிருக்காது. அவர்களை அந்தக் கிராமத்தில் பூர்வீகக் குடி என்றுகூடச் சொல்லிவிடலாம். நல்ல பண்பாட்டை வளர்த்து வருவதும் கிராமங்கள் தான். பல அக்கிரமங்களைச் செய்வதும் கிராமங்கள் தான். ஆனாலும் கிராமத்தின் அமைதியை அவ்வளவு சுலபமாகச் சீர் குலைத்துவிட முடியாது. அதே நேரத்தில் சில உளுத்துப் போன வறட்டுச் சம்பிரதாயக் காரியங்கள் நடந்து கொண்டு தானிருக்கும். சீர்திருத்தம் என்ற சூறாவளி வீசும் பொழுது பட்ட மரங்கள் சட சட வென்று விழுந்து சரிவது போல் மௌடிகச் சம்பிரதாயங்கள் வீழ்ந்து புதுமலர்ச்சி உண்டாவது இயற்கையல்லவா? அவ்வாறு புதுமலர்ச்சி பெற்ற குடும்பம் வேங்கடாசல கரமுண்டாருடையது! சோழ மன்னர்கள் தங்கள் சேனைகளின் கைகளுக்குப் பலம் கொடுத்ததற்காகக் கொடுத்த வீரப் பட்டம் கரமுண்டார் என்பது. சோழ சாம்ராஜ்யம் மறைந்தாலும் அவர்கள் வழங்கிய பட்டங்கள் மறையவில்லை. அந்தப் பட்டங்கள் பெற்ற குடும்பங்கள் அதைப் பெருமையாக இன்றும் போற்றி வருகின்றன.

பிழைக்க வந்தவன்தான் வேங்கடாசலம். புகழ்பெற்ற கரமுண்டார் பண்ணையில் கார்வார் வேலை பார்த்தான். வேங்கடாசலம் யோக்கியன். நாணய முள்ளவன். எல்லாவற்றுக்கும் மேலாக நல்ல உழைப்பாளி. அவனுடைய இந்தக் குணங்கள் கரமுண்டாரின் மனத்தைக் கவர்ந்தன.




தம்முடைய ஒரே மகளை அவனுக்குத் திருமணம் செய்து வைத்து வேங்கடாசலத்தையும் வீட்டோடு வைத்துக் கொண்டார்.

இதுவரையில் சாதாரண கார்வாராக இருந்துவந்த வேங்கடாசலம் இப்பொழுது பண்ணையின் பொறுப்புள்ள மாப்பிள்ளையாக மாறியதுடன் பண்ணையின் உடைமைக்காரனாகவும் உயர்ந்து விட்டான்.

நல்ல முறையில் வாழ்ந்து வரும் மாமனையும் மருமகனையும் பார்க்க ஊராருக்குப் பிடிக்கவில்லை. ஊர் பேர் தெரியாத ஒருவனுக்குச் செல்வமும் செல்வாக்குமுள்ள கரமுண்டார் தம் பெண்ணைக் கொடுத்து அவனைத் தம் மருமகனாகவும் ஏற்றுக்கொண்டதைப் பார்க்க மனம் சகிக்குமா? பணத் திமிரும் சாதி மமதையும் படைத்தவர் என்பதற்காகக் கரமுண்டார் குடும்பத்தைக் கிராமத்தில் ஒதுக்கி வைத்தார்கள். பிறகு அவர்களைச் சாதிப் பிரஷ்டமே செய்து விட்டார்கள்.

இதையெல்லாம் பற்றிக் கரமுண்டார் கவலைப்படவில்லை. அடிக்கடி தம் மருமகன் வேங்கடாசலத்திடம் சொல்லுவார்: ''இவர்கள் யார், என்னைச் சாதிப் பிரஷ்டம் செய்ய? நான் அல்லவா இவர்களை விலக்கி வைத்திருக்கிறேன்; உன் எதிர்காலத்துக்கு, உன் வாழ்க்கையின் முன்னேற்றத்துக்கு இதெல்லாம் நல்லது. இப்பொழுது இருக்கும் நிலத்தை வைத்துக் கொண்டு நன்றாக உழைத்து நாலு காசு சேர்த்து விட்டால், பிறகு ஊரார், சுற்றத்தார் எல்லாரும் உன்னைச் சுற்றிச் சுற்றி வருவார்கள்; சிறிதும் கலங்காதே!'' என்பார்.



இந்த வார்த்தைகள் கரமுண்டார் இறந்த பிறகும் வேங்கடாசலத்துக்குத் தெய்வ வாக்காக இருந்து உதவி புரிந்து வந்தன.

வேங்கடாசலம் இப்பொழுது வேங்கடாசல கரமுண்டாரானார். வேங்கடாசலத்துக்கு ஒரு ஆண் குழந்தையும் இரண்டு பெண் குழந்தைகளும் பிறந்தன. வேங்கடாசலம் தம்முடைய பையனுக்கு நடராஜன் என்று நாமகரணம் சூட்டி நாணயமுள்ள மனிதனாக வளர்த்து வந்தார். நடராஜன் வளர்ந்தான். அவன் தங்கைகளும் வளர்ந்தனர். பெண்களுடன் கூடவே பிரச்னையும் வளர்ந்து விட்டது. வேங்கடாசலத்தின் பெண்களுக்கு மாப்பிள்ளை கிடைப்பதும், பையனுக்குப் பெண் கிடைப்பதும் கஷ்டமாயிற்று.

''குலம் குப்பையிலே! பணம் பந்தியிலே!'' என்பது பழமொழியல்லவா? ஐயாயிரம் ரூபாயைப் பரிசமாக அள்ளிக் கொடுத்து நடராஜனுக்குப் பெண் எடுத்தார் வேங்கடாசலம். தம் புதல்வனின் திருமணத்தைச் சீரும் சிறப்புமாக நடத்தி வைத்தார்.

நடராஜனுக்கு மூன்று வேலி நிலத்தையும் தம்முடைய நன்னம்பிக்கையையும் விட்டு விட்டு வேங்கடாசல கரமுண்டார் காலமானார். நடராஜனும் தன் தந்தையைப் போலவே உழைத்து ஏராளமாக நிலத்தைச் சேர்க்கப் பாடுபட்டான்.

தன் கையிலிருந்த பணத்தைக் கொண்டு நிலத்தை வாங்கினான். மார்வாடிகளிடம் அதிக வட்டிக்குப் பணம் வாங்கி மேலும் நிலம் வாங்கினான். நூறு வேலி நிலத்தை வாங்கிச் சேர்த்தான். கடன் வாங்கி நிலம் வாங்கியதால் வருஷா வருஷம் வட்டியே கொடுக்க முடியாமல் திணறினான். மார்வாடிகள் நடராஜன் வீட்டுத் திண்ணையில் பழியாய்க் கிடந்தனர். மிரட்டவும் உருட்டவும் செய்தனர். ஊரில் உள்ளவர்கள் நடராஜன் நிலத்தையெல்லாம் மார்வாடிகளிடம் கொடுத்து விட்டு ஒட்டாண்டியாகப் போகிறான் என்று எண்ணினர்.

இந்தச் சமயத்தில்தான் சரித்திரப் புகழ் பெற்ற கடன் நிவாரண மசோதா சட்டம் வந்தது. முதலுக்கு மேலே வட்டி வாங்கியவர்களின் அட்டூழியம் அடங்கியது. விவசாயிகளின் வேதனைகள் அடங்கின. நடராஜ கரமுண்டாரின் கடன் தொல்லையும் நீங்கியது. நூறு வேலி நிலத்தின்மீது இருந்த கடனையும் ஒரு நொடியில் அடைத்து விட்டு அந்த நிலங்களுக்கெல்லாம் நடராஜன் அதிபதியாகி விட்டான்.

அவனுக்கு நீண்டநாட்களாக ஒரு ஆசை. ஒரு காலத்தில் தன் தந்தையைச் சாதிப் பிரஷ்டம் செய்த உலகையா கரமுண்டாரின் குடும்பத்திலிருந்து பெண் எடுக்க வேண்டும்; அவர்களுக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டும் என்று. அதற்காக எத்தனை ஆயிரம் ரூபாய் செலவானாலும் பாதகமில்லை என்று தீர்மானமான முடிவுக்கு வந்தான்.

** ** **

உலகையா கரமுண்டார் என்றால் சிரித்த பிள்ளை அழும். அவ்வளவு முரடர். பெரிய பண்ணையாராயிருந்து வீண் ஆடம்பரச் செலவு செய்து டாம்பீக வாழ்க்கைவாழ்ந்து நொடித்துப் போனவர். இருந்தாலும் பரம்பரைப் பெரிய மனிதர் அல்லவா? அதன் அசட்டுக் கர்வம் குன்றாதவர். தம் உடலில் ஓடும் இரத்தம் பெரும் குடிக்கே உரியது என்ற அகம்பாவமும் மமதையும் உள்ளவர்.

ஒரு காலத்தில் நாலு குதிரைகள் பூட்டிய பெரும் சாரட்டு வண்டியில்தான் வெளியே கிளம்புவார். தலைப்பாகை அணிந்து அல்பாக்கா கோட்டில் தங்கக் கடியாரம் மினுமினுக்க, ஜவ்வாது பொட்டு ஜிலு ஜிலுக்க, சரிகை வேஷ்டி பளபளக்கக் கையில் தந்தப் பிரம்புடன் அவர் வெளியூருக்குப் போவதைப் பார்த்தால் ஒரு சிற்றரசரே புறப்படுவது போலிருக்கும். இத்தியாதி ஆடம்பர சாதனங்களுடன் அவர் ரயிலில் முதல் வகுப்பில் ஏறும் பொழுது நமது நடராஜ கரமுண்டார் மூன்றாவது வகுப்புப் பெட்டியின் ஓரமாக நின்று அவரைப் பார்ப்பதற்கே பயப்படுவார். வீண் ஆடம்பரங்களைக் குலைக்கக் காலம் மாறியது. உலகையா கரமுண்டாரின் சொத்து சர்க்கரைப் பொம்மை மழை நீரில் கரைவது போல் கரைந்தது. சொத்து கரைந்

தாலும் அவர் இருந்தவரையில் பெருமையோ டிருந்து அதே பழம் பெருமையோடு மறையவும் மறைந்தார்.

அவருடைய பிள்ளை சுப்பையா தலையெடுத்தான். அவனுக்கு வறுமை வரவேற்பளித்தது. தரித்திரம் தாலாட்டியது. துன்பம் அவனைத் தழுவிக் கொண்டது. இந்த நிலைமையில் மிஞ்சி நின்றது அவன் அப்பா அவனுக்கு அளித்து விட்டுப் போன குலப் பெருமை ஒன்றுதான்! அவனுடைய கஷ்டத்தைப் பார்த்து அவன் சுற்றத்தார் இரண்டு வேலி நிலம் கொடுத்து உதவினார்கள். புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? இரண்டு வேலி நிலம் கைக்கு வந்ததுமே சுப்பையா தன்னுடைய தந்தையை விடப் பெரிய தனவந்தனாக எண்ணிக் கொண்டான். ஆடம்பரச் செலவுகள் அதிகமாகச் செய்ய ஆரம்பித்தான். இரண்டு வேலி நிலமும் இரண்டு ஆண்டுகளில் அவன் கையை விட்டுக் கடன்காரர்களின் கைக்குப் போய் விட்டது.

சுப்பையா பணமென்றால் பல்லை இளிப்பான். அவன் இளிப்பது எல்லோருக்கும் தெரியா விட்டாலும் அய்யாசாமி கரமுண்டாருக்கு மட்டும் நன்றாகத் தெரியும். அய்யாசாமி நுழைந்த இடமும் ஆமை நுழைந்த இடமும் உருப்படாது என்பார்கள் ஊரார்கள். அப்படிப்பட்ட உத்தமன். ஆனாலும் எந்தக் காரியத்தையும் சாதித்து நிறைவேற்றும் திறமையுடையவன்.

சுப்பையாவை வளைப்பதற்கு அய்யாசாமியைத் தவிர சிறந்தவன் வேறில்லையென்பதைக் கண்ட நடராஜன் அவனைத் தேடிச் சென்றான். நடராஜனுக்கு எதையும் செய்யச் சட்டென்று தோன்றாது. செய்ய வேண்டுமென்று தோன்றி விட்டாலோ அதைச் செய்து முடித்து விட்டுத்தான் தூங்குவான்.

தம் வீட்டைத் தேடி நூறு வேலி பண்ணையார் நடராஜ கரமுண்டார் வந்ததைப் பார்த்த அய்யாசாமிக்குத் தலைகால் தெரியவில்லை. ''வாங்க! வாங்க! உட்காருங்க! ஏய் தம்பீ! பாயை எடு! காப்பியைக் கொண்டா! வெற்றிலைப் பாக்குப் பெட்டியை எடு!'' இப்படி அவனையு மறியாத உற்சாகத்தில் நடராஜ கரமுண்டாரை வரவேற்றான்.





வடலூருக்கு அருகில் இருக்கும் குறிஞ்சிப்பாடியில் சிறப்பாக நடைபெற்றுவரும் ச. கு. வேலாயுதம் உயர்நிலைப்பள்ளி அமைப்பாளர் திரு ச. கு. வேலாயுத முதலியார் உருவச் சிலைத் திறப்பு விழாவும், அமைப்பாளர் திருநாளும் சமீபத்தில் கோலாகலமாக நடைபெற்றன. இந்த விழாவுக்குத் திரு ஓ. பி. ராமசாமி ரெட்டியார் தலைமை வகித்தார். திரு டி. புருஷோத்தமம், திரு ந. சஞ்சீவி, நிதி மந்திரி திரு சி. சுப்பிரமணியம் ஆகியோர் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். விழா ஆரம்பத்திலும் முடிவிலும் திரு ஆ. விநாயக முதலியார், திருமதி கே. பி. சுந்தராம்பாள் ஆகியோரின் இசைக் கச்சேரிகள் நடைபெற்றன. திரு ச. கு. வேலாயுத முதலியார் உருவச்சிலையையும், அவர் ஆரம்பித்த கல்விப் பணியைத் தொடர்ந்து நடத்தி வரும் திரு ச. கு. வேலாயுத முதலியாரின் சகோதரர்களையும், விழாவில் கலந்து கொண்ட பிரமுகர்களையும் படத்தில் காணலாம்.

''சும்மாயிருக்கட்டுமப்பா!'' என்று நடந்து வந்த களைப்பில் துண்டை விரித்துப் போட்டுத் திண்ணையில் சாய்ந்தான் நடராஜன். பிறகு ஊர் விவகாரங்களெல்லாம் பேசிக் கொண்டிருந்து விட்டு நடராஜ கராமுண்டார் மெல்ல சுப்பையாவைப் பற்றி பேச ஆரம்பித்தான்.

''என்ன அய்யாசாமி! நம்ப சுப்பையா தன் பெண்ணை எங்கே கட்டிக் கொடுக்கப் போகிறானாம்? பெரிய இடம்! அவர்கள் உறவிலேயே பார்த்துச் செய்வான்! இல்லையா?..''

''உம்......! அதெல்லாம் பணமிருந்த போது. இப்ப சொந்தம் என்றால் சீறுகிறான்! ஆனால் யாராவது பணமும் நிலமும் கொடுத்தால் நாளைக்குச் சாகிற கிழவனாயிருந்தாலும் இன்றைக்கே பெண் கொடுக்கத் தயார்! மனுஷன் பணத்துக்குப் பேயாய் அலைகிறான்.''

அய்யாசாமியின் பேச்சை மேலே தொடர விடாமலே நிறுத்திய நடராஜன், மலர்ந்த முகத்துடன் 'டக்'கென்று எழுந்து, ''சரி! என்னை ஊரில் வந்து பாரு!'' என்று அன்பாகக் கூறிவிட்டு அய்யாசாமியிடமிருந்து விடைபெற்றுக் கொண்டான்.

** ** **

மறுநாள் சூரியன் அஸ்தமிக்கும் நேரத்தில் அய்யாசாமி வழக்கம் போல் சுப்பையாவைத் தேடிச் சென்றான். இன்று அய்யாசாமி உற்சாகமாயிருந்தான். சுப்பையா வழக்கம் போல் கவலையாயிருந்தான். ஒரு நாற்காலியில் காலைத் தூக்கிப் போட்டுக் கொண்டு கவலையைப் போக்க வாயில் வெற்றிலையைக் குதப்பிக் கொண்டிருந்தான்.

''என்ன தம்பீ! ரொம்பக் கவலையாயிருக்கே!'' என்று கேட்டுக் கொண்டே அவன் பக்கத்தில் அமர்ந்தான் அய்யாசாமி.

''ஆமாங்க! எல்லாம் பணமில்லாத குறை தான்!'' என்றான் சுப்பையா.

''என்ன தம்பி! எப்பொழுது பார்த்தாலும் பணம்! பணம்! பணமில்லாட்டி மனுஷன் வாழ முடியாதா?'' என்று எல்லாம் துறந்த ஞானி போல் பேசினான் அய்யாசாமி.

''என்னங்க! அப்படிச் சொல்லிவிட்டீங்க! அந்தப் பணம் செய்யறது வேறு எதுவும், யாரும் செய்ய மாட்டார்கள்!'' என்று, தான் அடிக்கடி சொல்லும் பொன் மொழியை உதிர்த்தான் சுப்பையா.

''சரி! இப்பொழுது உனக்கு எவ்வளவு பணம் வேண்டும்?''

இந்தக் கேள்வி சுப்பையாவுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. ''ஆயிரம் ரூபாய் இருந்தாக்கூடத்தான் நல்லாயிருக்கும்!'' என்றான் சுப்பையா கேலியாக.

அய்யாசாமி மூட்டையைப் போல் வைத்திருந்த துண்டை அவிழ்த்தான். சுப்பையா தன்னையு மறியாமல் 'ஹா!'' என்று அலறி விட்டான். அவ்வளவும் பணம். சுப்பையாவுக்குச் சந்தேகம் வந்து விட்டது. அய்யாசாமி எங்கேயாவது கொள்ளை யடித்துக் கொண்டு வந்திருக்கிறானோ என்று. இருந்தாலும் தன் வியப்பை மறைத்துவிட்டு, ''என்ன

அய்யாசாமி! உனக்கு ஏது இவ்வளவு ரூபாய்?'' என்று கேட்டான்.

''நீங்க மட்டும் சரின்னு சொன்னால் இதெல்லாம் உங்களுக்குத்தான்!''

''எதற்குச் சரி சொல்லணும்?''

''நீங்கள் கோபித்துக் கொள்ளாமலிருந்தால் சொல்லுகிறேன்'' என்ற பீடிகையோடு ஆரம்பித்தான் அய்யாசாமி.

''ரோசம் மானமெல்லாம் அந்தக் காலமுங்க! நீங்க விஷயத்தைச் சொல்லுங்க!'' என்று ஆரம்பித்தான் கப்பையா.

''உங்கள் மகள் சரோஜாவை நடராஜ கரமுண்டார் மகன் நாராயணனுக்குக் கொடுத்தால் உங்களுக்கு இரண்டு வேலி நிலமும் ஐயாயிரம் ரூபாயும் கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்து இதை முன் பணமாகக் கொடுத்து வரச் சொன்னார்....'' என்று விஷயத்தை விளக்கினான் அய்யாசாமி.

கப்பையா பணத்தைப் பார்த்தான்; அய்யாசாமியின் முகத்தைப் பார்த்தான். குடும்ப கௌரவத்தை மறந்தான். பணத்துக்காகக் கையை நீட்டிவிட்டான்.

** ** **

நள்ளிரவு. அமாவாசை இருட்டு. வீட்டில் தன் கிழத் தாயை எழுப்பினான் கப்பையா. அவளுக்குச் சூடாகக் காப்பியைக் கொண்டு வந்து கொடுத்தான். கப்பையாவின் தாயாருக்குக் காப்பி என்றால் உயிர். ஒரு கப் காப்பி கொடுத்து விட்டால் அவளிடம் எதையும் சாதித்துக் கொள்ளலாம். ''என்ன விசேஷம், கப்பையா?'' என்று கேட்டாள் கிழவி.

''ராத்திரியே சரோஜாவை மாப்பிள்ளை வீட்டுக்குக் கொண்டு போகணும்!'' என்றான். சாதாரணமாக இருந்தால் ''அட பாவி! குலத்தை நாசம் செய்ய வந்த சண்டாளா!'' என்று கத்தியிருப்பாள். ஆனால் இப்பொழுது தான் அவள் மனம் நிறைந்திருக்கிறதே! 'சரி' என்று சரோஜாவை எழுப்பினாள்.

பேத்தி எழுந்ததும் எழுந்திருக்காததுமாக, ''என்ன பாட்டி?'' என்றாள். ''இன்று முதல் நீ ராணியம்மா!'' என்றாள் கிழவி. சரோஜா மகிழ்ச்சியால் வாய் அடைத்துப் போனாள்.

மனைவியை எழுப்பினான் கப்பையா. அவள் கையில் நாலு தங்க வளையலை மாட்டி அன்போடு அவள் கையைப் பற்றினான். அன்பென்றால் என்னவென்று தெரியாத கப்பையாவின் மனைவி தன் கணவனின் ஆதரவைக் கண்டு ஆனந்தக் கடலில் மிதந்தாள்.

''உம்! சரோஜாவை அழைத்துக் கொண்டு புறப்படு'' என்றான் கப்பையா. அடுத்த கணம் அவளும் தயாரானாள். பெண்ணையும், பெண்ணின் பெற்றோர்களையும் ஏற்றிக் கொண்டு வாடகைக் கார் பறந்தது.

பொழுது புலர்ந்தது. கப்பையா தேனில் விழுந்த ஈயாகத் துடித்தான். ஆனால் அய்யாசாமி கப்பையாவைப் பாகாய் உருக்கிக் கொண்டிருந்தான். கப்பையாவுக்குச் சூழ்ச்சி புரிந்தும் அய்யாசாமியின் தயவிலிருந்தான்.

''எப்படி அய்யாசாமி இந்த ஐம்பது வயது நிரம்பிய கிழவன் நாராயணசாமிக்கு என் பதினைந்து வயதுப் பெண்ணை, பச்சைக் கிளியைக் கொண்டு போய்க் கொடுக்கிறது?'' என்று ஆத்திரமாகக் கத்தினான் கப்பையா.

''என்ன தம்பி! அப்படிச் சொல்கிறீங்க? நம்ப நடராஜ கரமுண்டாருக்கு எழுபது வயது ஆகுது. நாராயணனுக்கு நாற்பத்தேழு தானே!'' என்றான் அய்யாசாமி.

''நான் இந்தச் சம்பந்தத்துக்கு ஒத்துக் கொள்ள முடியாது!...''

''இந்தச் சம்பந்தத்துக்கு ஒத்துக்கொள்ளாவிட்டால் பெண்ணைத் திருப்பி அழைச்சுக்கிட்டுப் போய் விடுவாய்! அவ்வளவுதானே? அழைத்துக் கொண்டு போ! பெண்ணைத் தூக்கிக்கொண்டு வந்தது பிசகு. பிறகு பணம் வாங்கியது அதைவிடப் பிசகு. மேலும் நடராஜ கரமுண்டாரின் சொத்துக்கு உயிலெல்லாம் நாராயணன் பேரில்தானிருக்கு...''

இந்தச் சமயத்தில் நாராயணன் சகோதரன் தியாகராசன் அங்கு வந்தான். அவனுக்கு இந்தப் பொருத்தமில்லாத கல்யாணத்தில் விருப்பமே இல்லை. இதற்குத் தாரு உத்தியோகம் பார்த்த அய்யாசாமியின் மீது அவனுக்கு எல்லையற்ற கோபம் உண்டாயிற்று. அய்யாசாமி மெதுவாக நழுவி விட்டான்.

தியாகராசன் எல்லாச் சூழ்ச்சியையும் அறிந்தவன். கப்பையாவின் மனக் கஷ்டத்தை உணர்ந்து அவனுக்கு ஆறுதல் அளித்தான். கப்பையா இப்பொழுது திடமாயிருந்தான்.

விடிந்தால் கல்யாணம். விடிந்ததும் விடியாததுமாக மேள வாத்தியம் முழங்கிற்று.


சரோஜா காஞ்சீபுரம் சேலை உடுத்திக் கொண்டு தலைநிறையப் பூ அணிந்து திலகமிட்டு மணப்பெண்ணாக வந்த கோலம் ராணி கொலுவுக்கு வருவது போலிருந்ததைக் கண்ட கப்பையாவின் மனம், ''இந்தக் கிழத்துக்கா நம் பெண்ணை இரையாக்கி விட்டோம்?'' என்று துடித்தது. தன்னையறியாமல் அவன் கண்களில் நீர் கசிந்தது.

நடராஜ கரமுண்டார் சந்தோஷத்தில் மிதந்தான். தன்னுடைய தந்தையைச் சாதிப் பிரஷ்டம் செய்தவர்கள் அல்லவா இவர்கள்? இப்பொழுது என் வீட்டிலே வந்து நிற்கிறார்கள். என்னுடைய தந்தையின் ஆத்மா இப்போதுதான் சாந்தி அடையும் என்று எண்ணி எண்ணி மனம் மகிழ்ந்தான்.

''என்ன ஐயா இது! பெண் கிளி போல இருக்கு! இதைப் போய் இந்தக் கிழவனுக்குக் கொடுக்கிறார்களே!'' என்றது ஒரு குரல்.

''கிளியை வளர்த்துப் பூனையின் கையில் ஒப்படைக்கிறார்களே!'' என்ற பேச்சைக் கேட்க முடியாமல் கொட்டு மேளம் முழங்கிற்று. நூற்றுக்கணக்கான கைகளிலிருந்து அட்சதைகள் விழுந்தன. தாலி சரோஜாவின் கழுத்தில் ஏறியதும் ஒரு சிறு குழப்பம். மணவரையில் நாராயணசாமி இல்லை. அந்தக் கிழத்துக்குப் பதிலாக அவன் தம்பி தியாகராசன் அமர்ந்திருந்தான். அங்கு வந்திருந்த தியாகராசனின் தோழர்கள் சிலர் நாராயணசாமியின் மனசை மாற்றி அவனை அங்கிருந்து அழைத்துப் போய் விட்டார்கள். சரோஜாவின் வாழ்வு மலர்ந்தது. குலப் பெருமையும் உயர்ந்தது. ''சேற்றில் பிறந்த செந்தாமரை மலர் போல் கரமுண்டார் குலத்தில் வந்த'' தியாகராசனை வாழ்த்தினார்கள்.

இனி 'முஹந்நத்' தேவையில்லை



அலெக்சாந்தர் கி.மு. 331-ல் பாரசீகத்தின் மீது படையெடுத்த பொழுது, வாட்களும் பிற படைக்கலங்களும் இந்தியாவிலிருந்து விரைவாகத் தருவிக்கப்பட்டதை பிர்தோசியின் ஷா-நாமா என்னும் இதிஹாசம் கூறுகிறது. அன்றே உலகமெங்கும் நாகரீகம் வாய்ந்த நாடுகளில் இந்தியா உயர்தரமான எஃகின் இருப்பிடமாகப் புகழ் பெற்றிருந்தது. புராதன அராபிய பாஷையில் ''வாள்'' ''முஹந்நத்'' என்று வழங்கப்பட்டது ... அதற்கு ''இந்தியாவில் தயாரிக்கப்பட்டது'' என்பது பொருள்.

இன்று எஃகானது மறுபடியும் நம் நாட்டின் கவனத்தைக் கவர்ந்து வருகிறது ... உயரிய நோக்கத்துடன். நம் எஃகு உற்பத்தியானது விரைவாக விஸ்தரிக்கப்பட்டு வருகிறது ... போராட்டத்திற்கல்ல, சமாதானத்திற்கும் தொழில் முன்னேற்றத்திற்குமே.

டாடா ஸ்டீல்

நாட்டின் பணிக்கே

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



இப்பொழுது...

ரெக்ஸோனாவில்

முன்னைவிட மிக அதிக நறுமணம்!

RP. 144-90 TM

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10
for the Proprietors Messrs Bharathan Publications Private Limited
Managing Editor: T. Sadasivam